**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©
**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 27-8-2012 Issued : 27-8-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஏப்ரல் 4, 2012—தொகுதி 21—எண் 4**

**Wednesday the 4th April, 2012—Volume 21—No. 4**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**4–4–2012**

**உள்ளடக்கம்**

*பக்கங்கள்*


**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 321-364

**2. விதி 110–ன்கீழ் அறிக்கை—**

மாவீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 365-367

**3. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்-2023 குறித்த முதலமைச்சரின் விளக்கம்** 367-373

**4. அறிக்கைகள் அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு 374

**5. மாவீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—** 374-378

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி 374

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் 374-375

முனைவர் செ.கு. தமிழரசன் 375

திரு. ரா. சரத்குமார் 376

*திரு. அ. சவுந்தரராசன் 377

திரு. எம். ஆறுமுகம் 377

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 377-378

**6. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதமும் பதிலுரையும்** 378-460

*திரு. அ. சவுந்தரராசன் 378-398

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 380-383,385

பக்கங்கள்


**6. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 385,386,396, 415-416 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 386-387 |
| *மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன் | 387,389 |
| *மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் | 391 |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 392 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 393,395 423-424 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 394 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 394-395,419 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 397,402-403, 407-408, 420-421, 443-459 |
| திரு. துரைமுருகன் | 398-402, 409-415, 418-419, 421-427 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 404-407, 416,421-423 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 408-409,410 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 411,416-419, 425-426 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 413 |
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 413 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 427-430, 433-442 |
| *மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி | 431-432 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 434-435 |

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 460

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043—பங்குனி 22

## 2012 ஏப்ரல் 4, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை.”*

*பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை ஏற்படுத்தி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவரே செயல்புரிய ஏற்றவராவார்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**41—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***5313—திரு. செ. காமராஜ்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 ஏப்ரல் 4

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியப் பகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 252 குடியிருப்புகள் உள்ளன. அதில் 198 குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்று நீரினை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 54 குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணற்று நீரினை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், இதில் 3 குடியிருப்புகளுக்கு, பள்ளபாளையம், ஆண்டான்கோவில் கிழக்கு மற்றும் மேற்கு குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயனடைகின்ற வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, எஞ்சியுள்ள 51 குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்க ஆரம்ப கட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருவதால், ஆய்வுப் பணிகள் முடிவுற்று, விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பின்னர் உரிய நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு கேட்டதும் கொடுத்த வாழும் வள்ளல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி நகரத்தில் 10–வது வார்டுக்கு உட்பட்ட ஏ.எஸ்.டி.சி. நகர், நாவிதர் காலனி ஆகிய 2 பகுதிகளுக்கும் நகராட்சிமூலம் குடிதண்ணீர் இதுவரையில் வழங்கப்படவில்லை. இந்த 2 பகுதிகளுக்கும் குழாய்மூலம் நகராட்சி நிருவாகம் குடிநீர்



2012 ஏப்ரல் 4]

வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 2 மாவட்டங்களும் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள மாவட்டங்கள். அதோடு மட்டுமல்லாமல், நிலத்தடி நீரில் flouride என்ற நச்சுப் பொருள் கலந்து இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற பெரிய திட்டத்தை நமக்கு வழங்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் இந்த ஆண்டு இறுதியில் நடைமுறைக்கு வர இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரங்களால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த 2 வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தமது திருக்கரங்களால் வழங்குவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியானது— காவிரி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், NTADCL என்று சொல்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அருகில் இருக்கின்ற ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 11 ஊராட்சிகளுக்கு அருகிலே திருப்பூர் மாவட்டம் இருக்கின்ற காரணத்தினாலும், அருகிலே SIPCOT தொழிற்பேட்டை இருக்கின்ற காரணத்தினாலும், அங்கு இருக்கின்ற கழிவு நீரினால் அந்தப் பகுதியினுடைய நிலத்தடி நீர் மிகவும் பாழ்பட்டுவிட்டது; அங்கு ஆழ்குழாய்க் கிணறு தோண்டினாலும்கூட, சாயத் தண்ணீர் வரக்கூடிய ஓர் அவல நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அந்த திருப்பூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக தினந்தோறும் குடிநீர் வழங்கக்கூடிய அந்த NTADCL நிறுவனம் தினமும் 20 இலட்சம் லிட்டரை நமக்கு குறைத்து வழங்கிக்கொண்டிருக்கிறது.

[2012 ஏப்ரல் 4

ஆகவே, அருகில் இருக்கின்ற அந்த 11 ஊராட்சிகளுக்கும் திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக உடனடியாகக் குடிநீரை வழங்குவதற்கு, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று செயல்படுகின்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, இப்பொழுது கோடைக் காலமாக இருக்கின்ற காரணத்தினாலே, கட்டாயமாக அந்த 11 ஊராட்சிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NTADCL கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது, தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட திட்டமாகும். திருப்பூர் மாநகருக்கு, தொழிற்சாலைகள் உள்ள அந்தப் பகுதிகளுக்கு குடிநீரும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீரும் வழங்க வேண்டும் என்பதற்காக அந்தத் திட்டம் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலம் கொண்டு வரப்படுகின்ற நீர், வருகின்ற வழியில் உள்ள கிராமங்களுக்கும் குடிநீராகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக விலை நிர்ணயம் செய்து, அந்த விலை நிர்ணயத்தின் வாயிலாக குடிதண்ணீர் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டு இருக்கின்ற அந்தத் திட்டத்தில் அதிகப்படியான நட்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால், விலையைக் கொடுக்க வேண்டுமென்று அந்தத் தனியார் நிறுவனம் கேட்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே அரசு நிதியாகவும் ஒரு பங்களிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், அதை ஆய்வு செய்து, அனைத்து மக்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*



2012 ஏப்ரல் 4]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் இராமநாதபுரம் காவிரிக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் பல கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. அதுபோக, எஞ்சியுள்ள மற்ற கிராமங்கள், நகரங்கள் அனைத்திலுமே இன்றைக்குத் தண்ணீர் மிகவும் உப்புத் தன்மை வாய்ந்ததாக இருக்கின்ற காரணத்தினாலும், பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலும், சிவகங்கை மாவட்டத்திற்கு என்று தனியாக காவிரிக் கூட்டுக் குடிநீர் திட்டம் உருவாக்கி, செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவை என்று கேட்கிறார். தமிழகம் முழுவதும் உள்ள எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் வாயிலாக நீர் கொடுக்கப்பட்டு வந்தாலும்கூட, போதிய நீர் கிடைக்காத காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாகத் தண்ணீர் கொடுப்பதற்கும், அதே நேரத்தில் சில ஊரகக் குடியிருப்புகளுக்கு தண்ணீர் கிடைக்காத பட்சத்தில், புதிதாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கியும், அனைவருக்கும் நீர் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள், அதற்காகப் பல்வேறு திட்டங்களை ஏற்பாடு செய்து, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு,

[2012 ஏப்ரல் 4

தளபதி அவர்களுடைய அருமையான செயல்பாட்டோடு 1,928 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் எக்காலத்தில் முடிவடையும்? தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு எப்பொழுது அத்தண்ணீர் வழங்கப்படும் என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு மதுரை சட்டமன்ற உறுப்பினர் இப்படி ஒரு கேள்வி கேட்டபொழுது, அதற்கான உண்மைக் கருத்தைச் சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் வேகமாக எழுந்து சத்தம் போட்டார்கள்; கேள்வி நேரத்தில் அப்படிச் சொல்லக்கூடாது என்பதற்காக. ஆனால், அதே கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்த அரசு யார் என்பதைவிட, ஏதோ இவருடைய தலைவர், பெரியவருடைய வீட்டில் இருக்கின்ற பணத்தைக் கொண்டு வந்ததைப் போலவும், இவருடைய தளபதி ஏதோ இவரை மண்வெட்டி. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, உங்கள் கட்சி உறுப்பினர் அதுமாதிரி கேள்வி கேட்கவில்லையென்றால், இந்தப் பதில் வந்திருக்காது. இத்தகைய பதில் வருவதற்குக் காரணகர்த்தா உங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன்தான். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயரும் சொல்லக்கூடாது என்கிறார்கள். பெயரைச் சொல்லக்கூடாது என்பதற்காக, வயது மூப்பின் காரணமாக பெரியவர் என்று சொல்கிறேன். அதில் தப்பில்லையே?.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு, பெரியவர் என்றுதான் அமைச்சர் சொன்னார். இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பெரியவர் என்று மரியாதையாகத்தான் சொல்லியிருக்கிறார். பெரியவர் என்று



2012 ஏப்ரல் 4]

சொல்வதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பெரியவர் என்று மரியாதையோடுதான் சொல்லியிருக்கிறார். பெரியவர் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது என்பதை நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) Members, please sit down. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பதில் சொல்லவிடச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி கேட்டீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அதற்குப் பதிலும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு அமைச்சர் அவர்கள் திறமையோடு விரல் நுனியில் பதில் வைத்திருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். எந்த சப்ஜெக்ட்டில், எப்போது கேட்டாலும் விரல் நுனியில் ‘பட், பட்’ என்று பதில் சொல்லக்கூடியவர். அதனாலே, தனிக் கேள்வி போடுங்கள் என்று நான் சொல்லாமல், உங்களை சப்போர்ட் செய்கிற விதத்தில் அவர் பதிலைச் சொல்லியிருக்கிறார் என்றால், அவரை நீங்கள் பாராட்ட வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை. பெரியவர் என்றுதான் சொன்னாரேயொழிய, யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். திரு. இராமகிருஷ்ணன், உட்காருங்கள். திரு. தங்கம் தென்னரசு, தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) திரு. சிவசங்கர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துகளைச் சொல்கின்ற வரையில் நான் அமைதியாக

உட்கார்ந்து இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னபோது நான் இடைமறிக்கவில்லை. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய பதிலைத் தெரிந்துகொண்டு அவர்கள் வேண்டுமானால் வினா எழுப்பட்டும். அதுவரையில் தயவுசெய்து அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். திரு. இராமகிருஷ்ணன், மூலக் கேள்வி கேட்டவர்தான் இரண்டாவது துணைக் கேள்வி கேட்கலாம் என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு கருத்தைச் சொல்கின்றார்கள். ஆகவே, அவர் பதில் சொன்ன பிறகு திரு. இராமகிருஷ்ணனுக்கு வாய்ப்புத் தரப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்கு மேல் வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** வேறு எது தேவை, தேவையில்லை என்று சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கோவி. செழியன், கேள்வி நேரத்தில் குறுக்கீடுகளை அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "முந்தைய அரசு, முன்னாள் முதலமைச்சர்" என்று சொன்னால் நான் உள்ளேயே நுழைவதில்லை. அவருக்கு என்று ஒரு பட்டத்தை வைத்துக்கொண்டு கேள்வி கேட்கிறார். அதற்கேற்றவாறு நான் பதில் சொல்ல வேண்டிய நிலைமை வருகிறது; வேறு ஒன்றுமில்லை. அவருடைய பெயரைச் சொன்னால், உடனே அவர்களுடைய தளபதி அவையிலிருந்து வெளியேறுகிறார். அதனால், மூத்த அரசியல் தலைவரைப் பெரியவர் என்று சொல்வதில் ஒன்றும் தவறில்லை. அது அவைக் குறிப்பில் ஏறக்கூடிய வார்த்தைதான், தவறான வார்த்தை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரங்களால் இந்த ஆண்டு இறுதியில் தொடங்கப்படும் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே உறுதி கொடுத்தபடி அவர் கேட்கட்டும். பிரச்சினை ஒன்றும் இல்லை. நீங்கள் கேளுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பெரியவர் என்று சொல்வதில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் அதற்குள்ளே போகக்கூடாது. வேறு துணைக் கேள்வி இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**42—**

### கலைக் கல்லூரி

***5710—திரு. எஸ். அப்துல் ரஹீம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி தொகுதி, ஆவடியில் கலைக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆவடி பகுதி என்பது மக்கள் நெருக்கம் கொண்ட ஒரு பகுதியாகும். அங்கே தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வி படிக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதிக்கு மிக அருகில் உள்ள சென்னையில் பல அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, இத்தொகுதி மக்கள் சென்னை வந்து உயர் கல்வி பெறும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.

**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதைப்போல ஒன்றரை கோடி தொண்டர்களையும், தமிழக மக்களையும் காத்து வருகின்ற மக்கள் தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். ஆவடி சட்டமன்றத் தொகுதியில் புதிதாக அரசு மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்தால், அதைச் சுற்றியுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் அதிகமாகப் பயன்பெறுவார்கள். ஆவடி சட்டமன்றத் தொகுதியின் ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்விக்காக சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருத்தணி மற்றும் பொன்னேரி அரசு கலைக் கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாலும், ஆவடி பகுதியில் இரயில் மற்றும் பேருந்து வசதிகள் அதிகமாக உள்ளதாலும், ஆவடியில் கலைக் கல்லூரி அமைத்தால் மாணவ, மாணவியர் கல்லூரிக்குச் சென்று வர பயனுள்ளதாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கேட்காமலேயே கொடுக்கின்ற மக்கள் ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவி ஆட்சியிலே, ஏழை, எளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே ஆவடி சட்டமன்றத் தொகுதியிலே புதிதாக ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி தொகுதி என்பது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. அங்கே அரசுக் கல்லூரிகள் இரண்டும், அரசு உதவி பெறும் கல்லூரி ஒன்றும், சுயநிதிக் கல்லூரிகள் 27–ம், ஆக மொத்தம் 30 கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆவடி தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறார். மாநகராட்சியைப் பொறுத்தவரையில், கல்லூரி துவங்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதிக்கு அரசு சார்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் வேண்டுமென்று இங்கே வலியுறுத்திப் பேசி இருக்கின்ற காரணத்தினால், இதுபோன்ற வசதிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க முன்வருவாரேயானால், மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே அரசு சார்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.

**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி தொகுதி சென்னை மாநகராட்சியுடன் இணைந்த தொகுதி அல்ல. அது நகராட்சியாக இருக்கின்ற ஒரு பகுதி. ஆதலால், ஆவடி தொகுதியிலே, ஆவடி பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான சுமார் 25 ஏக்கர் காலியிடம் இருப்பதனால், இந்து சமய அறநிலையத் துறையுடன் கலந்துபேசி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பெற்று, ஆவடி தொகுதியில் ஒரு கலைக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னைக்கு வந்துபோக வேண்டிய சூழ்நிலையையும், அதிக தொலைவில் இருக்கின்ற காரணத்தையும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலம் கொடுப்பதற்கு முயற்சி எடுத்துத் தருகிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் அவர் கோரிக்கையை ஏற்று, அங்கே அரசு மற்றும் அரசு சார்ந்த உறுப்பு கலைக் கல்லூரி அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

[2012 ஏப்ரல் 4

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பை மையமாகக் கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையைத் தொடங்காதீர்கள், கேள்வியைத் தொடங்குங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** சரி, கேள்வியைத் தொடங்குகிறேன். புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பகுதியை மையமாகக் கொண்டு ஒரு அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 11 கலைக் கல்லூரிகளைக் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்களுடைய கல்வித் தரம் மேம்படுவதற்காக வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இங்கே நம்முடைய உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்திருக்கிற தொகுதிக்கு அரசு சார்ந்த ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 3 அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன. ஒரு அரசு நிதி உதவி பெறும் கல்லூரி இருக்கிறது; 13 தனியார்க் கல்லூரிகள் இருக்கின்றன. ஆக மொத்தம், 17 கல்லூரிகள் இருக்கின்றன. இருந்தாலும் இதற்கு மாணவர்கள் மத்தியிலும், கிராமப்புற மக்கள் மத்தியிலும் அதிக வரவேற்பு இருக்கிற காரணத்தினால், இதை மாண்புமிகு அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்களிலே இன்று அரசுப் பள்ளிகளிலே 12 ஆம் வகுப்பு படித்து முடித்துவிட்டு வெளியே வருகின்ற ஏழை, எளிய மாணவ, மாணவியர் தனியார் சுயநிதிக் கல்லூரிகளை நாடிச் செல்ல வேண்டிய சூழ்நிலைதான் இன்றைக்குப் பெரும்பாலான இடங்களிலே இருக்கிறது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையை மாற்றுவதற்கு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொழில் சார்ந்த படிப்புகளான பொறியியல், மருத்துவம் போன்ற படிப்புகளைக் கொண்ட ஏதாவது ஒரு கல்லூரியை அரசு சார்பிலே நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா? அப்படி அந்தச் செயற்குறிப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எனது ஈரோடு கிழக்கு தொகுதி, ஈரோடு மாநகராட்சியில் இடம் இருப்பதால் அங்கே ஒரு பொறியியல் கல்லூரியினைக் கொண்டு வர வாய்ப்பு உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது சம்பந்தப்பட்டது; இது பொறியியல் கல்லூரி சம்பந்தப்பட்டது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கின்ற வகையில், பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அரசு கலைக் கல்லூரிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், கடந்த காலத்திலே உள்ள புள்ளி விவரங்களை எடுத்துப் பார்க்கையில், பொறியியல் கல்லூரிகளைவிட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கத்தான் மாணவர்கள் அதிகம் ஆர்வம் காட்டிவருகிறார்கள். காரணம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு 11 கலைக் கல்லூரிகளைக் கொடுத்து, அந்த கலைக் கல்லூரிகளில் 2,000 மாணவர்கள் படிக்க ஒப்பளிக்கப்பட்டு, அந்த மாணவர்கள் படிக்க வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அத்தனைக் கல்லூரிகளிலும்

[2012 ஏப்ரல் 4

சேர்க்கை நடைபெற்று, மாணவர்கள் இன்றைக்குப் பயின்று பயன்பெற்று வருகிறார்கள். சில பொறியியல் கல்லூரிகளில்கூட இன்றைக்கு இடங்கள் காலியாக இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தப் பதிலைச் சொல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, கடந்த ஆண்டு 11 கலைக் கல்லூரிகள் அரசின் சார்பாக அமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தொடர்ந்து அந்தக் கருத்தை அவர்கள் இந்த அவையிலே சொல்லி வருகிறார்கள். நான் அவர்கள் இடத்திலே கேட்க விரும்புவது, அமைக்கப்பட்ட அந்த 11 கல்லூரிகளிலே, கடந்த 2011 பிப்ரவரி மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது அன்றைய துணை முதலமைச்சர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்டு, அன்றைக்கு அரசாணை வெளியிடப்பட்டது, தொடர்ந்து வந்த அந்த Academic year—ல் ஜூன் மாதம் துவக்கப்பட்ட கல்லூரிகள் எத்தனை? இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு ஜூன் மாதத்தில் புதிதாக அறிவிக்கப்பட்ட கல்லூரிகள் எத்தனை என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, (குறுக்கீடு) கலைக் கல்லூரி அமைப்பது குறித்து நீங்கள் கேள்வி கேட்கலாமே தவிர, முழு விவரங்களையும் அதில் கேட்க முடியாது. தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) நீங்கள் இதற்குத் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் இதுகுறித்து தனிக் கேள்வி போடவும். எத்தனை கல்லூரிகள் என்பது குறித்து தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் விவரம் கேட்கிறார்கள். ஏதேனும் விவரம் இருந்தால் சொல்லுங்கள்.



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசினால் அறிவிக்கப்பட்ட திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். அறிவிப்பது என்பது பெரிய விஷயம் அல்ல. அறிவிப்பு என்பதை யார் வேண்டுமானாலும் அறிவித்துவிடலாம். ஆனால், அதனைச் செயலாக்கம் செய்வது என்பதுதான் இதில் உள்ள பிரச்சினை. ஆகவே, 11 கல்லூரிகளுக்கும் அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான நிதியுதவிகளும் அளிக்கப்பட்டு அந்த ஆண்டே மாணவர்கள் சேர்க்கப்பட்டு மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு உட்காருங்கள். நீங்கள் தனியாக ஒரு கேள்வி போடுங்கள். நீங்கள் அதில் கேட்டுக்கொள்ளலாம். இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணைக் கேள்வி. (குறுக்கீடு) திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியில் அரசு கலைக் கல்லூரியோ அல்லது தனியார் கல்லூரிகளோ ஒன்றுகூடக் கிடையாது. அங்குள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின மாணவ, மாணவியர் உயர் கல்வி கற்க கல்லூரிக்குச் செல்லவேண்டும் என்றால், 100 கி.மீ. தூரத்திலுள்ள கிருஷ்ணகிரிக்கோ அல்லது பக்கத்தில் உள்ள பெங்களூருவுக்கோ செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தளி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தளி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்று கோரி வருகிறார். அதைப்போல, ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

[2012 ஏப்ரல் 4

அவர்களும் ஏக்கத்தோடு பார்க்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இதனை ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம் என்பது தருமபுரி மாவட்டம் பக்கத்தில் உள்ள ஒரு பகுதிதான். கிருஷ்ணகிரி மாவட்டம் தருமபுரி மாவட்டத்தோடு இருந்தபோது கல்வியில் பின்தங்கியிருந்தது ஒரு காலம். அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்திற்கு இரண்டு கலைக் கல்லூரிகளை வழங்கி இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதுபோல் பல்வேறுபட்ட உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதிகளுக்கு கலைக் கல்லூரிகள் வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். தேவையிருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, அதனை அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

முற்பகல் 10—25

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் பகுதி, கல்வியிலே மிகப் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவினுடைய அரசில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதுகுளத்தூரில் ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்பது கல்லூரிகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகள் மூன்றும், அரசு உதவி பெறும் கல்லூரி ஒன்றும், தனியார் சுயநிதிக் கல்லூரிகள் ஐந்தும் சேர்த்து, ஒன்பது கல்லூரிகள் இருக்கின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல,



2012 ஏப்ரல் 4]

நிறைய உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் கலைக் கல்லூரிகளைத் துவங்கவேண்டுமென்று ஆவலோடு கேட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய அவசியத் தேவையின் அடிப்படையில், இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் பழங்குடி இன மக்கள் அதிகளவில் வாழ்ந்து வரும் பேச்சிப்பாறையில் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கலைக் கல்லூரி அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மான்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில், அவருடைய தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கவேண்டுமென்று இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைய கல்லூரிகளைத் துவங்கியிருக்கிறோம் என்று, இங்கே விவாதத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வருகிறார்கள். அப்படி கடந்த 5 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருந்தபோது, ஒரு அரசு கலைக் கல்லூரியோ, அரசு உதவி பெறும் கல்லூரியோ அந்த நேரத்தில் துவங்கப்படவில்லை. இருந்தாலும், மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலே மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,

*[2012 ஏப்ரல் 4*

எனது வேடசந்தூர் தொகுதியிலே இதுவரை அரசுக் கலைக் கல்லூரியோ அல்லது தனியார் கல்லூரிகளோ ஒன்றுகூட இல்லாத சூழ்நிலையில், கிட்டத்தட்ட 35 உயர்நிலைப் பள்ளிகளும், 15–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்ற சூழ்நிலையில், மாணவர்கள் எல்லாம் உயர் கல்வி பயில வெளி மாவட்டங்களுக்கும் மற்றும் வெளி தொகுதிகளுக்கும் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசு கல்லூரிகள் 62–ம், அரசு உதவி பெறும் கல்லூரிகள் 148–ம், அரசு உறுப்புக் கல்லூரிகளாக 24–ம், சுயநிதிக் கல்லூரிகளாக 429–ம், மொத்தம் 663 கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதன்வாயிலாக, ஓராண்டிற்கு இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்து ஏழு மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்தப் பகுதியிலே, அவர் சார்ந்திருக்கிற தொகுதிக்கு அருகில் கலைக் கல்லூரி இல்லையென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு தொகுதிக்கு ஒரு கலைக் கல்லூரி என்ற அடிப்படையில், வருகின்ற காலகட்டத்தில்கூட, அதைப் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது இதை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களால் தென்னகத்தினுடைய கேம்பிரிட்ஜ் என்று புகழப்பெற்ற



*2012 ஏப்ரல் 4]*

தொன்மைவாய்ந்த அரசு ஆடவர் கல்லூரி 1854 ஆம் ஆண்டு முதல் கல்விச் சேவை புரிந்துவருகிறது. அதேபோல, அரசு மகளிர் கல்லூரி 1960 முதல் கல்விப் பணியாற்றி வருகிறது. இரண்டு கட்டடங்களும் பழுதடைந்து இருக்கின்றன. அதைச் சரி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா புதிய அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்தது. கட்டடம் பழுதுபார்ப்பது என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதியில் ஏற்கெனவே அரசு பெண்கள் கலைக் கல்லூரி இருக்கிறது. ஆண்களுக்கென்று தனியாக ஒரு அரசு கலைக் கல்லூரி இல்லை. அதை அமைக்க முடியுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆடவருக்கென்று, அதாவது மாணவர்கள் படிக்கிற வகையில் இப்போது கலைக் கல்லூரி வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், ஆடவர்கள் கல்லூரி என்பதைவிட, பெண்களும் ஆண்களும் படிக்கக்கூடிய வகையில் ஒரு co-education கல்லூரியைப் புதியதாகத் தொடங்கும்போது, பக்கத்தில் இருக்கக்கூடிய பெண்களுக்கும்

[2012 ஏப்ரல் 4

ஒரு வாய்ப்பாக இருக்கும். அதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய 600–க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் மனித உரிமை பாடப் பிரிவு—ஏற்கெனவே சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடப் பிரிவு—கடந்த ஆறு ஆண்டுக் காலமாகத் துவக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நேரிலே நான் சொல்லியிருக்கிறேன். நேற்றையதினம்கூட உயர் நீதிமன்றம், நீதி போதனைகளை வழங்கக்கூடிய பாடப் பிரிவுகளைப் பள்ளிகளிலே தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறது. ஆகவே, கல்லூரிகளிலும் இத்தகைய மனித உரிமைக் கல்வியை வழங்கக்கூடிய பாடப் பிரிவை வரும் கல்வி ஆண்டில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்பது பாடப் பிரிவு சம்பந்தப்பட்ட கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது பேரவைத் தலைவர் அவர்கள் உயர் கல்வியிலே அதிக அக்கறையோடு இருக்கிற காரணத்தால், நிறைய துணைக் கேள்விகளைக் கேட்க அனுமதியளித்திருக்கிறார். அமைச்சர் அவர்கள் “பரிசீலிக்கப்படும், பரிசீலிக்கப்படும்” என்று சொல்கிறார். “பரிசீலிக்கப்படும்” என்பதற்கு என்ன அர்த்தம் என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்றால், அதற்குத் கேண்டிய நிலம் தேவைப்படும், அதற்குப் போதுமான நிதி வசதி தேவைப்படும், அதற்கான தளவாடச் சாமான்கள் தேவைப்படும். இதுபோன்ற தேவைகளை எல்லாம் ஆராய்ந்து, அந்தப் பகுதிகளிலே மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், தேவை இருப்பின் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், ஜனநாயகத்தில் சட்டமன்றம் என்பது ஒரு வலிமையான அமைப்பு. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற அந்தக் கேள்விகள், அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் சொல்கின்ற அந்த உறுதிமொழிகள், அனைத்தும் அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு, வாய்ப்பு இருப்பின், அவை நிறைவேற்றப்படும். இதுதான் நடைமுறை.

வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

## கட்டட வசதி

***1750—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, நொச்சலூர் மற்றும் தாதங்குப்பம் ஊராட்சிகளிலுள்ள புதிய நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2012 ஏப்ரல் 4

செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நொச்சலூர் நியாய விலைக் கடை 632 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நொச்சலூர் ஊராட்சிக்கு உட்பட்ட தாதங்குப்பத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை 253 குடும்ப அட்டைகளுடன் தற்போது வாடகையின்றி தனியார்க் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு நொச்சலூர் ஊராட்சி மன்றத்தால் இலவசமாக இடம் வழங்கும்பட்சத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், தாதங்குப்பம் பகுதிநேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இதே மன்றத்தில், அத்திப்பட்டு ஊராட்சிக்குட்பட்ட கொழப்பலூர் கிராமத்திற்கு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருந்தேன். அதற்கும் சேர்த்து இந்த நியாய விலைக் கடை கட்டடத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2011–லிருந்து நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், இதுபோன்று நிறைய ஊராட்சிகளில் நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கிக் கொண்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, செஞ்சி தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவாரா என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரை, பகுதிநேர நியாய விலைக் கடைகள் அல்லது நியாய விலைக் கடைகளை நடத்துகிற சங்கத்திற்குச் சொந்த இட வசதி இருந்தால், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது



2012 ஏப்ரல் 4]

ஊராட்சியினுடைய நிதியிலிருந்தோ, உள்ளாட்சித் துறை சார்பாக ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்தோ கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அந்தச் சங்கத்திற்கு இடம் இல்லாதபட்சத்தில், அந்தக் கடை எங்கு அமைகிறதோ, அந்த ஊராட்சி மன்றத்தினுடைய அனுமதி பெற்று, அவர்கள் இடம் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்தையும் ஆண்டவனே நேரிலே சென்று செய்தல் இயலாது என்பதாலேயே, அரசனை ஆண்டவன் படைக்கின்றான் என்ற தெய்வ மொழிக்கு உயிரூட்டுகின்ற வகையிலே, உணவு மானியத்திற்காக 4,900 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு வாரி வழங்கி, அனைவருக்கும் முழுமையான உணவுப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், ஒரு கோடியே 85 இலட்சம் ஏழையெளிய குடும்பங்களுக்கு விலையில்லா அரிசி வழங்கி, ஏழையெளியோரின் பசிப் பிணியைப் போக்கி, மக்களின் வறுமையை வெறுமையாக்கி, வாழ்வை வளமாக்கி, வரலாறு படைத்து வருகின்ற இந்தியத் திருநாட்டின் ஒரே முதலமைச்சர், ஜெகத்தினை ஆள மகத்திலே பிறந்திட்ட மாதரசி, வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10–35

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் சிதிலமடைந்து இருக்கின்ற சாத்தூர் தொகுதிக்குட்பட்ட, சாத்தூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள சத்திரப்பட்டி, அமீர்பாளையம், சூரங்குடி கண்மாய், சூரங்குடி, கத்தாளம்பட்டி, முத்தல்நாயக்கன்பட்டி, வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் அமைந்துள்ள அப்பநாயக்கன்பட்டி, கோட்டைப்பட்டி, பேர்நாயக்கன்பட்டி, மேலான்மறைநாடு, துலுக்கன்குறிச்சி ஆகிய நியாய விலைக் கடைகளின் கட்டடங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தந்திட, கேட்காமலேயே மக்கள் நலத் திட்டங்களை மக்களின் நல்வாழ்விற்காக வாரி வழங்கி வருகின்ற வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லா பட்டி தொட்டிகளுக்கும் போய்விட்டு வந்து விட்டீர்களா? மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உறுதியாக அரசு பரிசீலிக்கும். நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்னதைப்போல, கூட்டுறவுத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற சங்கங்களுக்கு உரிய இடங்கள் இருந்தால், அந்தச் சங்கங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமாகக் கொடுக்கின்ற நிதியைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்படும். சொந்த இடம் இல்லாதபட்சத்தில், எங்கே அப்படி ஒரு கூட்டுறவு அமைப்பு கட்டடம் கட்ட ஊராட்சியோ நகராட்சியோ இடம் கொடுக்கும் பட்சத்தில், கூட்டுறவுச் சங்கத்தில் போதிய நிதியிருக்கும் பட்சத்தில் கட்டடம் கட்ட அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி நகரத்திற்குட்பட்ட 26–வது வார்டில் 1,800–க்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ளன. அப்பகுதியிலுள்ள அனைவரும் கிட்டத்தட்ட ஓரிரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்று 25–வது வார்டில் உள்ள அங்காடியில் பொருட்கள் வாங்கவேண்டிய நிலை உள்ளது. ஆகவே, அமைச்சர் அவர்கள் 26–வது வார்டில் தனியாக ஒரு அங்காடியை அமைக்க ஆவன செய்வாரா என்பதைக் கேட்டு அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கிராமப்புறக் கடைகளில் 500 கார்டுகளுக்கு மேற்பட்டு ஒரு கடை இருக்குமேயானால், ஒரு பகுதிநேரக் கடை உருவாக்குவதற்கு 150 கார்டுகள் இருக்க வேண்டும் என்பது விதி. இதே மலைப் பிரதேசமாக இருந்தால் 100 கார்டுகள் இருந்தால் போதுமானது. எனவே, அது மட்டுமல்லாமல், 1½ கி.மீ.க்கு மேற்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் விதி. மலைப் பிரதேசமாக இருந்தால் 1 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்பது விதி. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்குத்தான் வருகிறேன். எனவே, இவை எல்லாம் இருக்கும்பட்சத்தில், இருக்கின்ற கடையில் 150 கார்டுகளுக்கு மேல் இருக்கும்போதும், தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்கும்பட்சத்தில், உறுதியாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, உடனடியாக அனுமதி அளிக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்கு அரசுத் துறை மூலமாக ஆணையிடப்பட்டிருக்கிறது. இவை ஏதாவது குறையும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அல்லது நுகர்வோர் ஆணையாளர் ஆகியோரிடம் அனுமதி பெற்று, அரசினுடைய முன் அனுமதி பெற்று, கடை திறக்கலாம் என்பதுதான் விதி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உறுதியாகப் பரிசீலிக்கப்படும்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான கடை இருந்து, 1,000 கார்டுகளுக்குமேல் இருந்தும், அந்தக் கடையிலிருந்து 2 பகுதிநேரக் கடைகள்தான் தரமுடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதற்கு மேல் தர இயலாது என்று கிராமப்புறத்திலே சொல்கிறார்கள். ஆகவே அப்படி பெற வேண்டுமென்றால், அதற்கு அரசின் அனுமதி பெற வேண்டும் என்று ஒரு விதி இருக்கிறதா அல்லது ஒரு பிரதான கடையில் 1,000 கார்டுகளுக்கு மேல் இருந்து 2 கிலோ மீட்டருக்கு மேல், 300 கார்டுகளுக்கு மேலிருந்தால் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக நடத்தப்படுகிற கடைகள் எல்லாம் சங்கத்தின் மூலமாக நடத்தப்படுகின்றன. ஒரு சங்கம்தான் அந்தக் கடையை நடத்துகிறது. சங்கத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற அந்தக்*

[2012 ஏப்ரல் 4

கடையினுடைய நிதிநிலையைப் பொறுத்து பகுதிநேரக் கடை திறப்பதற்கு அந்தச் சங்கம் முன்வரும்போது, இதுபோன்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

இரண்டாவது, ஒரு தாய் நியாய விலைக் கடை இருக்கும்போது, அதற்கு வாரத்தில் மூன்று நாட்களும், பகுதிநேரக் கடைகள் திறப்பதற்கு மூன்று நாட்களும், மேற்கொண்டும் ஒரு கடை திறக்க வேண்டும் என்ற சூழ்நிலை வருகின்றபொழுது, அந்த மூன்றாவது பகுதிநேரக் கடை அமைக்கப்படுவதற்கான இட வசதி வாடகையில்லாமல் கொடுக்கின்ற பட்சத்தில், அத்தனை செலவையும் அந்த ஊர் மக்கள் ஏற்றுக்கொள்கிற சூழ்நிலையில், வாரத்தில் இரண்டு நாட்கள்தான் திறக்கப்படும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், அதை ஏற்கும்பட்சத்தில், அந்தக் கடையைத் திறப்பதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகள் பல ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பிரிக்கப்படுகின்றன. அந்த நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதில் என்ன சிரமம் என்று சொன்னால், ஊழியர் பற்றாக்குறை இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஓர் ஊழியர் 3 கடைகள் வரை பார்க்கிறார். அந்த ஊழியர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில், இந்த ஊழியர் பற்றாக்குறையைப் போக்க கூடுதலாக ஊழியர்களை நியமனம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கட்டடம் கட்டுவது சம்பந்தமான கேள்வி. மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இதற்குத் தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதியில் 50–க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நான் என் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கித் தந்திருக்கின்றேன். மீதியுள்ள கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்ன அதே கருத்துதான்—ரேஷன் கடைகள் நடத்திக்கொண்டிருக்கின்ற அந்தச் சங்கங்களுக்கு உரிய இடம் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, நாடாளுமன்ற உறுப்பினர் நிதியைப் பெற்றோ அல்லது ஊராட்சி மன்ற நிதியிலிருந்தோ அல்லது உள்ளாட்சி நிதியிலிருந்தோ கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படும்பட்சத்தில், அரசு நிச்சயமாக கட்டடம் கட்டித் தர முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

**திருமதி ஆர். ராஜலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாப்பூர் தொகுதிக்குட்பட்ட 7 வட்டங்களிலும் இருக்கின்ற ரேஷன் கடைகள் மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தின் காலத்தில் பராமரிக்கப்படவே இல்லை. பெருச்சாளி பொந்துகள் போலவும், எலிப் பொந்துகள் போலவும் தரையெல்லாம் உடைந்து சிதிலம் அடைந்த நிலையில் இருக்கின்றன. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்த கடந்த 8 மாதங்களில், அனைத்தையும் உடனே செப்பனிட முடியாது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகவே,

[2012 ஏப்ரல் 4

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தக் கடைகளைச் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும். தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் நிதி ஒதுக்கும்பட்சத்தில், அந்தக் கடைகள் பராமரிக்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில்—ஒரு மலைப் பிரதேசமான என்னுடைய சட்டமன்றத் தொகுதியில்—ஏக்கல்நத்தம் என்ற அந்தக் கிராமத்திற்கு, கடந்த 2011 பிப்ரவரி மாதம் எங்களுடைய ஆட்சியிலே ஒரு கடை தனியாகப் பிரித்துத் தரப்பட்டது. அது மலைப்பிரதேசமாக இருந்த காரணத்தினால், தனிச் சிறப்பின் அடிப்படையிலே அந்தக் கடை பிரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு தேர்தல் வந்த காரணத்தினால், அந்தக் கடையைத் திறப்பதற்கு உண்டான காரியங்கள் நடைபெறவில்லை. இப்போது தேர்தல் முடிந்துவிட்டது. ஆனால், இப்போது அந்தக் கடையைத் திறக்க வேண்டுமென்று **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் கேளுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** அந்தப் பொருட்களைக் கொண்டுசெல்ல வேண்டுமென்று சொன்னால், ** அந்தக் கடையை நாங்கள் திறப்போம் என்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், **ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 ஏப்ரல் 4]

ஆட்சியிலே போடப்பட்ட அந்த உத்தரவை அமல்படுத்துகின்ற வகையிலே உடனடியான அந்தக் கடையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆட்சியும் நடத்தி, இந்தத் துறையையே கெடுத்தவர்கள் இப்படிப் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யார் மக்களுக்கு நன்மை செய்பவர்கள்? (குறுக்கீடுகள்) ஒரு * உண்மைக்கு மாறான, தவறான தகவலை மாமன்றத்திற்குச் சொல்லலாமா? ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதில் 'உண்மைக்கு மாறான' என்று மாற்றப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** தவறான தகவலை, உண்மைக்கு மாறான தகவலை இம்மாமன்ற உறுப்பினர் தெரிவிக்கிறார். அப்படி ** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிரூபிப்பாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

அதுமட்டுமல்ல; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடை அமைவது, நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் சொன்னது மாதிரி, மலைப் பிரதேசமாக இருந்தால், ஒரு கடை அமைப்பதற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும்; 100 கார்டுகள் இருந்தாலே போதுமானது; அந்தக் கடையை அமைப்பதற்கு அரசு முன்வரும். நிச்சயமாக மாவட்ட ஆட்சித் தலைவரே அதற்கான உத்தரவைக் கொடுத்துவிடலாம். இதில் ஏதாவது குறை இருக்கும்பட்சத்தில், நம்முடைய அரசு இதுபோன்று நிகழ்வுகளில் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளவாறு, உணவுத் துறை ஆணையாளருடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.
* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 4

அனுமதி பெற்று, அரசு அந்தக் கடையைத் திறப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பியபொழுது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரேஷன் கடைகளை maintenance செய்யவேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும்கூட அந்தக் கருத்தை ஏற்றார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து maintenance செய்வதற்கு provision இல்லை. கட்டடம் கட்ட அந்த நிதியைப் பயன்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, ** சொன்னார்கள் என்ற கருத்து, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் குறிப்பிட்டபடி, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் தெரிவித்த கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** அரசு நிருவாகத்திற்கே அது களங்கத்தை ஏற்படுத்திவிடும். அருள்கூர்ந்து அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) தவறான தகவல்களைக் கொடுக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் ** பற்றிக் குறிப்பிட்ட அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 ஏப்ரல் 4]

சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தனிப்பட்ட முறையில் மலைப் பிரதேசங்களாக இருக்கின்ற காரணத்தினால் 150 கார்டுகள் என்ற நிலையை மாற்றி, 100 கார்டுகள் இருந்தால்கூட அங்கு தனியாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை ஆரம்பிக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதுவும் அமலில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்கு அதுவும் தெரியும். எனவே, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு தேவைப்படின், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு அந்த பகுதிநேரக் கடையை வழங்கும் என்பதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அந்த ** பற்றிக் குறிப்பிட்டதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை வைத்துச் சொன்ன பதிலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடை அமைப்பதற்கு, பொருட்களை வாங்குவதற்கு 4 அல்லது 5 கிலோ மீட்டர் தூரம் செல்கிறபோது, பகுதிநேர நியாய விலைக் கடைகள் கேட்கிறபோது, தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தூரத்தைக் கணக்கில் கொண்டு 300 கார்டுகள் உள்ள வகையில் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 கார்டுகளுக்கும் குறைவாக இருக்கிற கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார். அந்தக் கடை அமைகின்ற இடத்தில் இருக்கின்ற கார்டுகள் குறைவாக இருந்தாலும், அந்தக் கடையைத் திறக்க வேண்டும்; அது அமைந்தால்தான் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதினால், அந்தக் கோப்பு அரசுக்கு அனுப்பப்படும்பட்சத்தில், அரசுத் துறை சார்பாக கூட்டுறவுத் துறையும், உணவுத் துறை ஆணையாளர் அவர்களும் அதைப் பரிசீலித்து, உறுதியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

### தடுப்பணை

***1544—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, ஏரிகளுக்கு நீரைத் திருப்பி விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி ஏரிகளுக்கு நீரைத் திருப்பி விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார். அந்த மாதிரி ஒரு திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, மறைமுகப் பாசன வசதியை ஏற்படுத்தும் திட்டம் குறித்து ஆய்வு செய்ய



2012 ஏப்ரல் 4]

நடப்பாண்டு திட்ட இலக்கில் சேர்க்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

### கால்நடைக் கிளை மருத்துவமனை

***5619—திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் அந்தக் கிராமத்திலிருந்து சுற்றுப்புறக் கிராமங்கள் வரை 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும் என்ற விதியும், 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக வேறு கிளை நிலையம் இருக்கக் கூடாது என்ற விதியும் உள்ளது. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பெத்தநாயக்கன்பாளையம், பாப்பநாயக்கன்பட்டி கிராமங்களிலே 1,300 கால்நடைகள் மட்டுமே உள்ளன. எனவே, அங்கு கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வருங்காலங்களில் அங்கு கால்நடைகள் எண்ணிக்கை 3,000 ஆக உயரும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2012 ஏப்ரல் 4*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.*

**திரு. செ. பெருமாள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மாவின் அரசு கேட்காமலேயே மக்களுடைய தேவைகளை தாயுள்ளத்தோடு நிறைவேற்றி வருகிறது. எனது தொகுதியான ஏற்காடு தொகுதியிலே, பாப்பநாயக்கன்பட்டி, வீமுன்பாலம், ஏழுபுளி, ஆத்தலூர், மேட்டுக்காடு, அரசநத்தம், சின்னமலப்பாடி, பெரியமலப்பாடி ஆகிய 8 கிராமங்கள் அடங்கியுள்ளன. கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டி 10 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால், அப்பகுதியினுடைய மக்கள் சிரமப்படுகிறார்கள். கால்நடைகளைப் பராமரிக்க வேண்டி, பாப்பநாயக்கன்பட்டியில் ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க வேண்டி, மறுபரிசீலனை செய்து அந்த மலைவாழ் மக்களுடைய குறைகளை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளின்படி மேற்படி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கு வாய்ப்பு இருந்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**46—**

### தாவரக் கழிவிலிருந்து மின் உற்பத்தி

***6932—திருமதி க. அழகுவேலு:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*2012 ஏப்ரல் 4*]

*கள்ளக்குறிச்சி தொகுதியிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. டிசம்பர் மாதம் மின் உற்பத்தி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

**திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிருவாகச் சீர்கேட்டால் ஏற்பட்ட மின்வெட்டை அகற்ற, தான் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற நாள் முதல், தனது சீரிய முயற்சியினால் மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு உடன்குடி விரிவாக்கத் திட்டம், உப்பூர் அனல் மின் திட்டம், எண்ணூர் சூப்பர் கிரிடிக்கல் திட்டம், தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் மற்றும் சூரிய ஒளி மின்சக்தித் திட்டங்கள், காற்றாலைத் திட்டங்கள், பயோமாஸ் மின் திட்டங்கள் போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கியதோடு, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும் என அறிவித்தமைக்கும், தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று அறிவித்த 22 மணி நேரம் அயராது உழைத்து தமிழக மக்களை கண் இமைபோல் காக்கும் எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் உள்ள சர்க்கரை ஆலையிலே தயாரிக்கப்படும் மின்சாரம் அவர்களுடைய*

[2012 ஏப்ரல் 4

தேவைகளுக்குப் போக உபரியாக இருக்கிறது. அதேபோன்ற திட்டங்களை தமிழகத்திலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளிலும் விரிவாக்கம் செய்திட அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இப்போது 183 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வருகின்ற பிப்ரவரி 2013 ஆம் ஆண்டு துவங்கப்படும் என்று சொல்லப்படுகின்றது. உடனடியாக நடவடிக்கை எடுத்து மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதனால் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## பேருந்து வசதி

***1935—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, புதிய பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலிருந்து சென்னைக்குப் போக்குவரத்து வசதி வேண்டுமென்று வினா எழுப்பியவுடனேயே, அதை நான் இந்த அவையில் எழுந்து கேட்பதற்கு முன்பாகவே பஸ்களை இயக்குவதற்கு வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் போக்குவரத்துக் கழகத்திற்குப் பொற்காலம் நடந்து கொண்டிருக்கின்றது. எப்பொழுதெல்லாம் மைனாரிட்டி தி.மு.க. அரசு ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் போக்குவரத்துக் கழகம் கடும் நஷ்டத்தில் இறங்கி சினிமாவில் வருவதைப்போல, ஆங்காங்கு பஸ்கள் ஓட்டை உடைசலாக நிற்கின்றபோது, பேரீச்சம்பழம் விற்பவர்களெல்லாம் அந்தப் பகுதியில் வந்து நின்றுகொண்டு, “ஓட்டை ஒடிசல் ஈயம் பித்தளைக்கு பேரீச்சம் பழம்” என்று சொல்லக்கூடிய நிலைமையிலே தி.மு.க. அரசினுடைய ஆட்சியிலே போக்குவரத்துக் கழகம் செயல்பட்டது.

நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், மூன்றாவது முறையாக முதலமைச்சர் பதவியை ஏற்று, 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரையிலும், 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையிலும், இன்றைக்கு மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகும், போக்குவரத்துத் துறையில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அம்மா அவர்கள் சென்னைக்குப் பஸ்களை விடுவதற்கு உத்தரவிட்டதற்கும், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே மேலூர் தொகுதியிலே நிறுத்தி வைத்த பல்வேறு வழித்தடங்களிலே பஸ்களை இயக்குவதற்கு உத்தரவிட்டதற்கும், மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

[2012 ஏப்ரல் 4

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தொகுதியிலிருந்து, சங்கரன்கோவிலை starting point ஆக கொண்டு சென்னைக்குப் புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய 5 ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு என்று எந்த ஒரு புதிய பேருந்துகளும் வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 473 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஆணையிட்டு, நிதியைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) எந்தெந்த பெரிய நகரங்களிலிருந்து சென்னைக்கு பொது மக்கள் அதிகமாக வருகிறார்களோ அங்கிருந்தெல்லாம் சென்னைக்குப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்த 473 புதிய பேருந்துகள் மட்டுமல்ல ஏற்கெனவே நல்ல நிலையிலேயிருந்த இன்ஜின் அடிச்சட்டங்களைக் கொண்ட பேருந்துகளைப் புதுப்பிக்கின்ற வகையில், 100 புதிய கூண்டுகள் கட்டுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆக, அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், 900 பேருந்துகள் இயக்கப்படுவதில், 573 புதிய பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிதியைக் கொடுத்து, புதிய கூண்டுகளைக் கட்டி இயக்க உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி, சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு நேரடியாகப் புறப்பட்டுவரும் பேருந்து ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளை சங்கரன்கோவில் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**48—**

### மீன் பதனிடுதல்

***5325—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்களை குளிர்பதன முறையில் பதப்படுத்தி அவற்றினை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்களிலுள்ள மீன்பிடி நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னோடித் திட்டமாக, சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் இப்பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து முன்னோடித் திட்டத்தின் சிறப்பைப் பொறுத்து, பிற கடலோர மாவட்டங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் மீன் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 4

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதிடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கும் சகோதரர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பில் அதிகமாக மீன்கள் கிடைக்கும்போது அந்த மீன்கள் கெட்டுப்போகாமல் சேமித்து வைப்பதற்காக, அரசு அறிவித்துள்ள மிதக்கும் மீன் பதப்படுத்தும் திட்டம், சிறிய ரக படகுகள் மூலமாக பிடிக்கப்பட்ட மீன்களை தாய்க் கப்பல் மூலமாகச் சேமித்து, பதப்படுத்தி பாதுகாக்கும் திட்டம் வரவேற்கக்கூடியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 71.5 கிலோ மீட்டர் கடற்கரைப் பகுதியில் 44 மீனவக் கிராமங்கள் உள்ளன. 2011–2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 44,525 டன் மீன்கள் கிடைத்துள்ளன. அதன் மதிப்பு ரூ.170.1 கோடியாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், கேள்வியைக் கேளுங்கள். கேள்வி நேரத்தில் உரையைத் தவிர்த்து சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ஒரே ஒரு கருத்து. இவ்வளவு மீன்கள் கிடைத்தும், ஒரு freezing centre அல்லது அந்த மீன்களை storage செய்வதற்கு எந்தவிதமான கிடங்குகளும் இல்லை, அமைப்புகளும் இல்லை. அப்படிப்பட்ட திட்டங்களை, மாண்புமிகு தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்களை கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய குளச்சல் தொகுதியில் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதையும், அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,304 விசைப் படகுகளும், 12,998 நாட்டுப் படகுகளும் உள்ளன. இந்த மீன்பிடி கிராமங்கள்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 42,500 மெட்ரிக் டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் 55 சதவிகிதம், அதாவது, 23,375 மெட்ரிக் டன் மீன்கள் நேரடியாக உணவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 5 சதவிகிதம், அதாவது, 2,125 மெட்ரிக் டன் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 23 சதவிகிதம், அதாவது, 9,775 மெட்ரிக் டன் மீன்கள் உப்பிட்டு கருவாடாகவும், 17 சதவிகிதம், அதாவது, 7,725 மெட்ரிக் டன் மீன்கள் சூரிய ஒளியில் காய வைத்தும் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, நேரடியாக உணவிற்கு 55 சதவிகிதம் விற்பனைக்குச் செல்வதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பதனிடும் கூடம் தொடர்பான செய்யத்தக்கவென அறிக்கை தயாரித்து, அதனடிப்படையில் மீன் பதனிடும் கூடம் விரைவாக அமைத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். இதற்குமேல் என்ன கேள்வி? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், என்னுடைய தொகுதியான குளச்சல் தொகுதியில் அதிகமாக மீன்பிடிக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அதிகமான மீன் வரத்து இருக்கிறது. அந்தத் தொகுதியில் மீன் பதனிடும் கூடத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, அதனடிப்படையிலே சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மீன் குளிரூட்டும் கூடம் அமைக்கும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**49—**

## கட்டட வசதி

***5402—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கென தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் அரசினர் மருத்துவனையில், சித்த மருத்துவப் பிரிவிற்கென்று இருந்த தனிக் கட்டடம் 20 ஆண்டுகளுக்கு மேலாகியதால் தற்பொழுது இடிக்கப்படவுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சித்த மருத்துவப் பிரிவிற்கென்று தனிக் கட்டடம் கட்ட 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.37.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலேயே கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். உங்கள வினாவை சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுக்கால கோரிக்கையான சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கென இந்த ஆண்டு



2012 ஏப்ரல் 4]

ஏறக்குறைய ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி துவக்குவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் சிதம்பரம் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## இருவழிப் பாதை

***6257—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப் பாதையை இருவழிப் பாதையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் இணை ஆணையர் / செயல் அலுவலராலும் மற்றும் தக்காராலும் கவனிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ.16,09,71,192/– ஆகும். திருமுருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஐந்தாம்படை வீடாகத் திகழும் சிறப்பு பெற்ற இத்திருக்கோயில் 270 அடி உயரம் கொண்ட பெரிய குன்றின்மீது அமைந்துள்ளது. மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதை 1,600 மீட்டர் நீளம் கொண்டது. இம்மலைப் பாதை குறைந்தபட்ச அகலம் 7.20 மீட்டர் முதல் அதிகபட்ச அகலம் 15 மீட்டர் வரை கொண்டதாகும். இப்பாதை இருவழிப்பாதை கொண்ட சாலையாகும். மாண்புமிகு

[2012 ஏப்ரல் 4

தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசின் 2011–2012 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் இச்சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக தார்ச் சாலையாக இருக்கும், இப்பாதையினை கான்கிரீட் சாலையாக மாற்றலாம் என்ற மாவட்ட நிருவாகத்தின் பரிந்துரையின்படி மேற்காணும் பாதையிலுள்ள மண்ணைப் பரிசோதனை செய்ய நெடுஞ்சாலைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த மண் பரிசோதனை ஆய்வுக் குறிப்பு வந்தவுடன் பாதையைப் புதுப்பிப்பது குறித்து மேல்நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் மலைப் பாதைக்குச் செல்லும் வழியாகத்தான் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மாவட்டங்களுக்குச் செல்லும் கனரக வாகனங்கள் மற்றும் அரசு, தனியார் வாகனங்கள் செல்கின்றன. அதற்காக மலையைச் சுற்றி, மலையடிவாரத்தில் புறவழிச் சாலை அமைத்திட நிலம் அளந்து கல் நடப்பட்டுள்ளது. நில எடுப்பு சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்தி, விரைவில் புறவழிச் சாலை அமைத்திட ஆவன செய்ய தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. ஆகவே, இதற்கு தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு தனிக் கேள்வி போடவும். வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2012 ஏப்ரல் 4]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### மாவீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். Frontline leaders எல்லாம் இன்று பேசுகிறார்கள். அவர்களிடத்தில் சொல்லுங்கள், பேசுவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களையும், தன்னலமற்ற மக்கள் சேவை புரிந்தவர்களையும்; சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கப் பாடுபட்டவர்களையும்; மக்களின் உரிமைகளை மீட்கப் போராட்டங்களை நடத்தியவர்களையும் கௌரவிக்கும் விதத்தில் அவர்களுக்கு மணிமண்டபங்கள் அமைப்பதிலும்; திருவுருவச் சிலைகள் அமைப்பதிலும்; அரசுக் கட்டடங்களுக்கு அவர்களது பெயர்களை வைப்பதிலும்; முன்னோடியாக விளங்குவது எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பரம்பரை பரம்பரையாய் அடிமைத் தளையில் சிக்குண்ட நம் இந்திய நாடு; தற்போது, உரிமை பெற்ற நாடாக விளங்குகிறது. இச்சுதந்திரத்தைப் பெற இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தியாக சீலர்கள் கிளர்ந்து எழுந்து; தங்கள் வாழ்வை துச்சமென மதித்து; அன்னை பாரதத்தின் அடிமைத் தளையை தகர்த்தெறியப் பாடுபட்டனர். இத்தகைய விடுதலைப் போரில்; தமிழகத்திலும் பல தலைவர்கள் தோன்றி தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இந்த விடுதலைப் போராட்டத்தில்; பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்; ஆர்ப்பரித்து; ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கியவர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள்.

சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் நடுவே வாழ்ந்து; தனக்கென ஒரு பாதை அமைத்து; ஆங்கிலேயருக்கு சிம்ம

சொப்பனமாக விளங்கிய மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில்; தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

எனது ஆட்சிக்காலத்தில், சென்னை, அண்ணா சாலையில், தீரன் சின்னமலை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டதோடு, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையையும் நான் அளித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1995 ஆம் ஆண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில், காங்கேயத்தில் நினைவு விழா நடத்தப்பட்டு, அவ்விழாவில் அவரது வாரிசுகள் கௌரவிக்கப்பட்டனர்.

எனது ஆட்சிக்காலத்தில்தான், கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கரூரைத் தலைநகராகக் கொண்டு தீரன் சின்னமலை மாவட்டம் உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த இடமான ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அவரது நினைவு நாளான ஆடி மாதம் 18 ஆம் நாளினை அரசு விழாவாக அனுசரிக்க, 2003 ஆம் ஆண்டு நான் உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 30 இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் மணிமண்டபம் என்னால் 2006 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகி தீரன் சின்னமலையைப் போரின்மூலம் வெல்ல முடியாது என்ற நிலைக்கு வந்த ஆங்கிலேயர், சூழ்ச்சிமூலம் அவரைக் கைது செய்து, சங்ககிரி கோட்டைக்கு அழைத்துச் சென்று தூக்கிலிட்டனர். மாவீரர் தீரன் சின்னமலையைத் தூக்கிலிட்ட இடமான சங்ககிரியில், அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் 30 மார்ச், 2012 அன்று இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்தார்.

முற்பகல் 11–10

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக, நன்மைக்காக பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக்





காட்டிவரும் அரசு, எங்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உணர்வின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு, அவர் தூக்கில் இடப்பட்ட இடமான சங்ககிரியில் நினைவுச் சின்னம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த முடிவை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனதார வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்து, இந்த நினைவுச் சின்னம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 குறித்த முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது நடைபெற்றுவரும் 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023" குறித்தும் சில உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் 2023 தொலைநோக்குத் திட்டத்தில், தற்போதைய தனி நபர் வருமானம் ரூபாய் 73,278 என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றும்; அடுத்த 10 வருடங்களில் மக்கள்தொகை வளர்ச்சி 15 சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றும்; எனவே, மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஒவ்வொரு வருடமும் 24 சதவீதத்திற்குமேல் இருந்தால்தான் 2023 ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் ரூபாய் 4½ இலட்சத்தைத் தாண்ட முடியும் என்றும்; தொலைநோக்குத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டபடி 11 சதவீதம் வளர்ச்சி இருந்தால், தனி நபர் வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்தைத்தான் அடைய முடியும் என்றும் சொல்லியுள்ளார். அதைப்போன்று, சேவைத் துறையில் ஏற்கெனவே தமிழ்நாடு 12 முதல் 15 சதவீதம் வரை வளர்ந்து கொண்டிருக்கும்பொழுது, அடுத்த 11 வருடங்களில் சேவைத் துறை வளர்ச்சி விகிதம் 11 சதவீதமாகக் குறைப்பது சாத்தியமற்றது என்றும் கூறியுள்ளார்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், நிதி ஆலோசகர் ஒருவர் தெரிவித்த கருத்தாக, அடுத்த 11 ஆண்டுகளில் 11 இலட்சம் கோடி ரூபாயை கட்டுமானத் தொழில்களிலே தமிழ்நாடு அரசு முதலீடு செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும்; ஆனால், பட்ஜெட்டிலே கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும்; 11 ஆண்டுகளில் 11 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு வேண்டுமெனில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டுமென்றும்; அரசின் பங்களிப்பு 25 சதவீதம் என்று எடுத்துக்கொண்டால்கூட, 25,000 கோடி ரூபாயாவது கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஒதுக்கியிருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

இதேபோன்று, தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் இந்தத் தொலைநோக்குத் திட்டம் ஒரு கனவுதான் என்றும்; இல்லாத நிதியில் ஏராளமான திட்டங்கள் என்றும்; பூஜ்யத்தில் ஒரு ராஜ்ஜியம் என்றும் ஏகடியம் பேசியுள்ளார். இதேபோன்று, ஒருசில அரசியல் கட்சியினரும் 15 இலட்சம் கோடி ரூபாய் எவ்வாறு வரும் என்று வினவியுள்ளனர். ஒருசில பத்திரிகைகளும் இந்தத் தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதி ஆதாரம் எங்கே என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை பற்றிய விளக்கங்களை எடுத்துச் சொல்வதற்கு முன்பு, "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023" என்ன என்பதைப்பற்றி முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் பெருமளவிலான சமூகப் பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவரவும், துரிதமான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றவும், வகுக்கப்பட்ட ஒரு திட்டம்தான் "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023" இத்தொலைநோக்குத் திட்டம் மூன்று தொகுதிகளாகத் தயாரிக்கப்படுகிறது.

1) முதல் தொகுதி, தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், அவற்றை நிறைவேற்ற எடுக்கப்படும் பொதுவான வழிமுறைகள்–Overall Vision Document—குறித்த அறிக்கையாகும். இந்த அறிக்கைதான் கடந்த 22–3–2012 அன்று என்னால் வெளியிடப்பட்டது.



முற்பகல் 11–15

2) இதன் தொடர்ச்சியாக, இரண்டாம் தொகுதி அறிக்கை, முதல் தொகுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல்வேறு துறைகளில் செய்யப்பட உள்ள முதலீடுகள் மற்றும் திட்டங்களின் விவரங்கள், நிதியாதாரங்கள், செயல்படுத்தப்படும் வழிமுறைகள் குறித்த குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். அதாவது இது ஒரு Compilation of Project Profile. இந்த அறிக்கை வரும் மே மாதம் இறுதிக்குள் வெளியிடப்படும். இந்த அறிக்கையின் அடிப்படையில்தான், திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு செயல்முறைக்குக் கொண்டுவரப்படும்.

3) மூன்றாம் தொகுதி, தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்தி பல்வேறு கட்டங்களில் எட்டப்படவேண்டிய குறியீட்டு அளவுகள் மற்றும் கால வரையரைகள் பற்றிய விரிவான Road Map ஆகும்.

இரண்டாம் தொகுதியில் தொகுத்து வழங்கப்படும் திட்டங்களை விரிவாக ஆய்வு செய்து, முன்னுரிமைப்படுத்திச் செயல்படுத்துவதற்கு எனது தலைமையில் தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இந்த வாரியம் தனித்தனியாக ஒவ்வொரு திட்டங்களையும் எடுத்துக்கொண்டு, நிதியாதாரங்களை முடிவு செய்து, அதன் அடிப்படையில் செயல்முறைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கும். இத்தகைய திட்டங்கள் அரசின் மொத்த நிதியாதாரத்தில் அரசின் திட்டங்களாகவோ, அல்லது அரசு–தனியார் பங்களிப்பின் மூலமாக தனியார் முதலீட்டில் செய்யப்பட்ட திட்டத்திற்கான செலவினத்தை ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு பகுதியாக அரசு வழங்கும் முறை, அதாவது annuity method ஆகவோ அல்லது அரசு–தனியார் பங்கேற்பில், தனியார் முதலீட்டில் வழங்கப்படும் சேவைக்கான கட்டணத்தை வசூலிப்பதிலிருந்து திட்டத்திற்கான செலவினத்தை ஈடு செய்துகொள்ளக் கூடிய வகையிலோ இருக்கும்.

சென்னை வெளிவட்டச் சாலை–1 தற்போது annuity method-ல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. Toll கட்டணம் வசூலிக்கப்படும் கிழக்குக் கடற்கரைச் சாலை சேவைக் கட்டணம் வசூலிக்கும் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற முறைகளில் அல்லாமல், சில திட்டங்கள் தனியார் முதலீட்டில், தனியார் திட்டமாகவே செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023, 2011–2012 ஆம் ஆண்டில் தொடங்கி 2022–2023 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தும்

திட்டமாகும். இந்த 11 ஆண்டுகளில் கணிக்கப்பட்டுள்ள மொத்த முதலீட்டு மதிப்பீடு 15 இலட்சம் கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்டுவாரியாக, இத்திட்டத்தில் ஒருங்கிணைத்து கட்டமைப்புக்கு முதலீடு செய்யப்பட உள்ள நிதிகளின் அளவு, தமிழ்நாடு தொலைநோக்குத்—திட்டம் 2023 முதல் தொகுதியின் 38 ஆம் பக்கத்தில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, 2011–2012 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த முதலீடு 25,393 கோடி ரூபாய் மட்டும்தான். 2012–2013 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடு 41,670 கோடி ரூபாய் ஆகும். இது படிப்படியாக உயர்ந்து 2022 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 690 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவில் முதலீடு செய்யப்பட்டு, மொத்தம் 11 வருட காலத்தில் 15 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எந்தெந்தத் துறைகளில், எவ்வளவு தொகைகள் முதலீடு, அதற்கான நிதியாதாரம் எவ்வாறு திரட்டப்படும் என்ற விவரம் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் தொகுப்பு 1–ல், 3–வது அத்தியாயத்தில் பக்கம் 35–லிருந்து 39 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்ட அறிக்கையின்படி சுமார் 60 சதவிகித நிதியாதாரம் அரசின் மூலமாகப் பெறப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி, அரசின் நேரடி மூலதனச் செலவு மட்டுமல்லாமல் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்போது, தனியார் மூலதனத்தை வைத்து திட்டங்களை நிறைவேற்றி அதற்கான செலவினத்தை ஆண்டுதோறும் அரசு வழங்கும் முறையில் annuity method-ல் நிறைவேற்றப்படும் திட்டத்தையும் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது என்பதால், அரசு–தனியார் கூட்டு முயற்சியில் கணிசமான நிதி முதலீடு இருந்தாலுங்கூட அரசுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் செலவினம் குறைவாகவே இருக்கும்.

2012–2013 ஆம் ஆண்டுக்கு மூலதனப் பணிகளுக்கு மட்டும் 20,856 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டிலேயே மூலதனப் பணிகளை உள்ளடக்கிய திட்டப் பணிகளுக்காக இந்த அரசு சுமார் 28,000 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் பெரும்பாலான நிதி சாலைகள், மின்சாரம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள், விவசாயக் கட்டமைப்புகள், சுகாதாரம் மற்றும் கல்வி



கட்டமைப்புகளுக்காகச் செலவிடப்பட உள்ளது. இதிலுள்ள பெரும்பாலான திட்டங்கள், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இதன் அடிப்படையில், நடப்பாண்டு முதல் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் 2 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு என்று எடுத்துக்கொண்டாலும், 13–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்த முதலீடு இரட்டிப்பாகும்போது இந்த 10 ஆண்டுகளில் மட்டும் சுமார் 6 இலட்சம் கோடி ரூபாய்க்குமேல் இந்த அரசின் (மேசையைத் தட்டும் ஒலி) நிதியிலேயே பெரும் பகுதி, இந்த மூலதனப் பணிக்காகச் செலவிடப்படும் என்பதைக் கருத்தில்கொண்டால், அரசு வெளியிட்டுள்ள தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள நிதி ஆதாரத்தைத் திரட்டுவது என்பது சாத்தியமான ஒன்றுதான் என்பது புலப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

வருவாய் உபரி; அனுமதிக்கப்பட்ட அளவில் பொதுக் கடன் பெறுதல் போன்றவற்றின்மூலம் இந்த நிதி ஆதாரம் திரட்டப்படும் என தொலைநோக்குத் திட்ட அறிக்கை பக்கம் 35–இல் பத்தி 3.1–இல் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 11 சதவிகித அளவில் இருக்கும்பொழுது, வரி முதலான பல்வேறு அரசின் வருவாய் கணிசமாக உயர்வதோடு, வருவாய் உபரி மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் 2015 ஆம் ஆண்டு முதல் 1.5 சதவிகிதமாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால், கணிசமான வருவாய் உபரித் தொகையும் முதலீட்டுப் பணிகளுக்குக் கிடைக்கும். மேலும், நிதிப் பற்றாக்குறை அனுமதிக்கப்பட்ட அளவான, மாநிலத்தின் மொத்த உற்பத்தி அளவில் 3 சதவிகிதம் என்று இருந்தாலும்கூட, மாநிலத்தின் உற்பத்தி மதிப்பு அதிகரிக்கும்போது, பொதுக் கடன்மூலம் திரட்டப்படும் நிதி அளவும் கணிசமாக உயரும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு கடன் அளவு கூடும்போது கூடுதல் நிதி ஆதாரத்தால், கடனைத் திரும்பச் செலுத்தும் அரசின் திறன் அதிகரிக்கும் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதாவது, மாநிலத்தின் பொருளாதாரம் வளர வளர, அரசு கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்டி, இத்திட்டங்களுக்குக் கூடுதல் முதலீடு செய்ய இயலும். இதன் அடிப்படையில்தான், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன்கீழ் எதிர்பார்க்கும் முதலீடுகளுக்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மாநில அரசின் நேரடி முதலீடுகள், அரசு–தனியார் கூட்டு முயற்சிமூலம் நிறைவேற்றப்படும் திட்டங்கள் ஆகியவை தவிர, முழுக்க முழுக்க, தனியார் துறையின் முதலீடுகளும் இந்தத் தொலைநோக்குத் திட்டத்தில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

உதாரணமாக, முதல் கட்டப் பணிகளுக்கு 8,500 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ள மோனோ இரயில் திட்டம்; 1,000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ள சென்னை வெளிவட்டச் சாலை–II திட்டம் போன்ற திட்டங்கள், தனியார் முதலீடு மூலமாகவே செயல்படுத்தப்பட உள்ளன. எனவேதான், வரவு–செலவுத் திட்டத்திலும் இதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Vision Document–ல் நாம் குறிப்பிட்டுள்ள வளர்ச்சிக் குறியீடு 11 சதவிகிதமாகும். எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு 2004–2005 ஆம் ஆண்டில், 11.45 சதவிகிதமும்; 2005–2006–இல் 13.96 சதவிகிதமும் வளர்ச்சி பெற்ற மாநிலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, வளர்ச்சி குறைந்துவிட்டது. குஜராத், பீகார் போன்ற மாநிலங்களின் வளர்ச்சி 10 சதவிகிதத்திற்கும் கூடுதலாக சில ஆண்டுகளில் இருந்துள்ளது. இந்த Vision அறிக்கையில்கூட, இது குறிப்பிடப்பட்டு, இந்திய அளவில் 9 சதவிகிதம் சராசரி வளர்ச்சியை எட்ட குறியீடு நிர்ணயித்துள்ளதைச் சுட்டிக்காட்டி; அதைவிட 2 சதவிகிதம் கூடுதலாக, அதாவது 11 சதவிகித வளர்ச்சி என்பது (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் சாத்தியம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான், இந்த 11 சதவிகித வளர்ச்சியை எட்ட உற்பத்தி செய்யும் ஆக்கத் துறைகளின் வளர்ச்சிக்கு, அதாவது, Manufacturing Sector–ன் வளர்ச்சிக்கு பல வழிமுறைகளைக் கையாளுவது பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். இந்த ஆக்கத் துறையில், 13 சதவிகிதம் வளர்ச்சியை எட்டுவதுதான் இலக்கு. இது கடினமான பணி என்றாலும் அதை எட்டுவது சாத்தியமே. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

மேலும், ஆண்டுக்கு ஆண்டு பொருளாதார வளர்ச்சி 11 சதவிகிதம் என்று குறிப்பிடும்போது, 2012–2013 ஆம் ஆண்டில் 6.90 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும் உற்பத்தி மதிப்பு, 2013–2014 ஆம் ஆண்டில் 7.66 இலட்சம் கோடி ரூபாயாக உயரும். ஒவ்வொரு ஆண்டும் உயரும் அளவின்மீது, அதாவது Higher



Base Value மீது வளர்ச்சியைக் கணக்கிடும்போது, 2011–2012 ஆம் ஆண்டிற்கும், 2022–2023 ஆம் ஆண்டிற்கும் இடையில் ஏற்படும் மொத்த வளர்ச்சி மதிப்பீட்டை, மொத்த ஆண்டுகளால் வகுத்துக் கணக்கிட்டால், ஆண்டு வளர்ச்சி 22 சதவிகிதமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

சுருக்கமாகச் சொன்னால், சாதாரண வட்டிக் கணக்கிற்கும், கூட்டு வட்டிக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுதான் 11 சதவிகிதம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சிக்கும், 22 சதவிகித சராசரி வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு. இந்த வளர்ச்சி சாத்தியம் இல்லை என்று எப்படிக் கூறமுடியும்? சேவைத் துறையில் வளர்ச்சிக் கணிப்பு 11 சதவிகிதம் என்பது குறைவு என இந்த மாமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய உற்பத்தி மதிப்பில் சேவைத் துறையின் பங்களிப்பு 61 சதவிகிதம். இரண்டாம் நிலைத் துறையில், உற்பத்தித் துறையின் பங்களிப்பு 16.6 சதவிகிதம் மற்றும் உற்பத்தி இல்லாத பணிகள்மூலம் 9.2 சதவிகிதம் பெறப்படுகிறது. முதன்மைத் துறை 12.6 சதவிகிதம் பங்களிக்கிறது. ஏற்கெனவே, அதிக அடிப்படை அளவு, அதாவது, Higher Base சேவைத் துறைக்கு உள்ளதால், அதில் 11 சதவிகிதம் வளர்ச்சி என்பதுதான் சாத்தியமாகக் கூடியது. மேலும், உற்பத்தித் துறையும், முதன்மைத் துறையும் வளர்ந்தால்தான், சேவைத் துறையில் இத்தகைய வளர்ச்சியைப் பெற முடியும். அதனால்தான், உற்பத்தித் துறையின் பங்கினை, 2022–2023–ல் தற்போதுள்ள 16.6 சதவிகிதத்திலிருந்து, 22 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டி, அதற்கு 13.8 சதவிகித வளர்ச்சி அடைவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோல, சேவைத் துறையின் பங்கினை, தற்போதுள்ள 61 சதவிகிதத்திலிருந்து 63 சதவிகிதமாக உயர்த்த, 11 சதவிகித வளர்ச்சி தேவை என்பதால், அந்த வளர்ச்சியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023', எட்டமுடியாத குறிக்கோள்களைக் கொண்ட ஒரு வெறும், கற்பனை ஆவணம் அல்ல என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) எட்டக்கூடிய சாத்தியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட எனது இலட்சியத் திட்டம் என்றும், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இது தமிழ்நாட்டின் நலன் கருதி, தமிழ் மக்களின் நலன் கருதி வகுக்கப்பட்டுள்ள ஒரு வெற்றித் திட்டம் என்றும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 6 முதல் 10 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 5. மாவீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைத்தல்–முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடிய தீரன் சின்னமலை அவர்களைத் தூக்கிலிட்ட இடமான என்னுடைய சங்ககிரி தொகுதியில், நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் பணிவுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொங்கு நாட்டு மக்களுடைய நீண்ட கனவாக இருக்கிற, தீரன் சின்னமலைக்கு, சங்ககிரி பகுதியில் ஒரு நினைவுச் சின்னம்*





*அமைக்க வேண்டும் என்ற உறுப்பினருடைய பல நாட்களாக உள்ள ஒரு கோரிக்கையை, மனித நேயத்தோடு, கொங்கு நாட்டிலே வாழுகிற மக்களுடைய உணர்வுகளைத் தெரிந்து, அறிவித்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கொங்கு நாட்டு மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களை அவர்களுடைய பாதங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிமை இந்தியாவில், ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, அமரரான தீரன் சின்னமலைக்கு சென்னை மாநகரிலே திருவுருவச் சிலையைக் கண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொங்கு மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, அவர் மறைவுற்ற சங்ககிரியில் நினைவுச் சின்னத்தை அமைக்க இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தி தமிழக மக்களிடையே மிகுந்த வரவேற்புக்குரியது.*

*இந்த மாமன்றத்தில், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கோரிக்கையை முன்வைத்தபோது, சட்டமன்றப் பதிவேடுகளிலே பதிவு செய்யப்படுகின்ற அனைத்து மக்கள் நலக் கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தன்னுடைய உள்ளத்திலே பதிவு செய்து இருக்கிறார்; உள்ளத்திலே பதிவு செய்துகொள்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல நிலத்துக்கு அழகு, தூவப்படுகிற விதைகளை உள்வாங்கி அதை விருட்சங்களாக ஆக்கிக் காட்டுவதுதான். அதைப்போல, இந்தத் தாய் மண்ணின் தாயாக விளங்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிடம் வைக்கப்படுகிற கோரிக்கைகளை உள்வாங்கி, அதை நிறைவேற்றித் தருகிற, தலைசிறந்த ஜனநாயக மாண்பையுடைய ஜனநாயகவாதி என்கிற வகையிலே நான் அவரைப் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்வது மிக, மிக அவசியம் என்பது அனைவருக்கும் தெரியும். எப்படி சுதந்திரம் பெற்றோம் என்பதை மறந்து வருகின்ற சூழ்நிலை நம் நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது. நாம் நமது சுதந்திரத்திற்காகப் போராடியவர்களையெல்லாம் நினைவுகூர வேண்டும்.

இன்றைக்குப் பார்த்தீர்களேயானால், இளைஞர்கள் எல்லாம் 'புரட்சி வீரர்' என்று சே–கெவாரா படத்தையெல்லாம் தங்கள் சட்டையிலே அணிந்துகொண்டு செல்வதை நீங்கள் பார்க்கிறீர்கள். சில கட்சித் தலைவர்களும் சே–கெவாரா போன்று தங்களை வரைந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சே–கெவாரா அவர்கள், கியூபா நாட்டு ஃபிடல் காஸ்ட்ரோவுக்காகப் போராடி, ஒரு புரட்சி வீரராக அவர்கள் நாட்டில் திகழ்கிறார்கள். ஃபிடல் காஸ்ட்ரோ புரட்சி வீரராக அவர்கள் நாட்டில் திகழ்கிறார்கள்.

நமது நாட்டிலும், நமது நாட்டில் மட்டுமல்லாமல், குறிப்பாகத் தமிழகத்திலும் சுதந்திரத்திற்காகப் போராடி, உயிர் நீத்தவர்கள் இருக்கிறார்கள். கொடிகாத்த குமரன் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் இருக்கும்போது, தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது என்பது நாம் நமது தமிழகத்திலுள்ள சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களை மதிக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவது, சுதந்திரத்திற்காகப் போராடியதை நினைவுகூர்ந்து, we should be patriotic என்பதை இளைஞர்களுக்கு அடிக்கடி நினைவூட்டும் வகையிலே அமையும். இதுபோன்ற செயல்களை நீங்கள் செய்யும்போது நமது இளைஞர்களும், நமது சுதந்திரத்தை எப்படிப் பெற்றோம், பெற்ற சுதந்திரத்தை எப்படிப் பேணிக் காக்க வேண்டும் என்பதை உணர்வார்கள். அந்த அடிப்படையிலே தீரன் சின்னமலை அவர்களுக்கு சங்ககிரி தொகுதியிலே நினைவுச் சின்னம் அமைப்பதை வாழ்த்தி, வரவேற்று, சமத்துவ மக்கள் கட்சி சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.



***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை வெள்ளையர்களை எதிர்த்து, தொடக்கக் காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய வீர மறவர்களிலே மிக முக்கியமானவர். வெள்ளையர்கள் பணத்தை எடுத்துச் செல்கிறபோது, அந்தப் பணத்தை அவர்களால் பத்திரமாக எடுத்துச் செல்ல முடியாமல், வழியிலே அவர்கள் அதை இழக்க நேரிட்டது. 'யார் இவன் குறுக்கே?' என்று வெள்ளையர்கள் கேட்டபோது, சின்னமலை சொன்னான், 'சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் இடையிலே ஒரு சின்னமலை. என்னைக் கடந்து நீ போக முடியாது' என்று சொன்னான். எப்பாடுபட்டாவது அவனைக் கொல்ல வேண்டும் என்பதற்காக கடும் முயற்சிகள் எடுத்து, இறுதியில் கைது செய்து, சங்ககிரி கோட்டையிலே தூக்கிலிட்டுக் கொன்றார்கள். குதிரையோடும், வாளோடும் பீரங்கியை எதிர்த்துப் போராடிய, நான் பிறந்த மாவட்டத்தினுடைய வீரன் என்ற அந்த எண்ணத்தோடு அந்த வீர மறவனுக்கு நினைவுச் சின்னத்தை சங்ககிரியிலேயே வைத்து, மீண்டும் ஒரு கௌரவத்தை அவனுக்குச் செலுத்தியிருக்கக்கூடிய, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டுகிறேன்; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்களில் தீரன் சின்னமலை அவர்களுடைய தியாகத்தைப் போற்றக்கூடிய முறையில், மதிக்கக்கூடிய முறையில், இதற்கு முன்னாலே பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும்கூட, இப்பொழுது தீரன் சின்னமலையினுடைய நினைவாக, அவருக்கு நினைவுச் சின்னம் சங்ககிரி தொகுதியில் ஏற்படுத்துவதற்கான முறையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில், சுதந்திரத்தைப் பற்றி நினைப்பது, சுதந்திரப் போராளிகளை மேன்மைப்படுத்துவது சிறந்தது

என்பதையும் சுதந்திர வரலாறு மேன்மைமிக்க ஒன்று என்பதையும் நான் இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், சிறப்பாக தீரன் சின்னமலை அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவது, சுதந்திரத்தை மதிப்பது, ஜனநாயகத்தை மதிப்பது என்று சொல்லி, வாழ்த்தி, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம் நாடு சுதந்திரம் பெற உழைத்திட்ட, தனது இன்னுயிரைத் துச்சம் என மதித்து, தன்னலமற்ற சேவை புரிந்த தியாகச் சீலர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் பெருமையைப் போற்றிடும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம், சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டமைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. வரவு—செலவுத் திட்டம், 2012—2013, பொது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012—2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் பதிலுரையும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*__திரு. அ. சவுந்தரராசன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த அன்புத் தோழர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்களுடைய நினைவைப் போற்றி என்னுடைய விவாதத்தை தொடங்குகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் சிலபல அறிவிப்புகள் குறித்து எனது கட்சியின் சக தோழர்கள் வரவேற்றும், மாற்றங்கள் கோரியும், ஏற்கெனவே பேசி இருக்கிறார்கள். அவற்றிற்குள் நான் அதிகம் போக விரும்பவில்லை. “பாராட்டுதல்களையும், ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் சமமாகவே எடுத்துக்கொள்வோம் என்பதை இங்கே உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று மாண்புமிகு நிதியமைச்சர் அறிக்கையில் கூறியுள்ளதை நான் பாராட்டுகிறேன். நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உள்ளது. சமூகப் படி நிலையில், மக்களிடையே பெரும் வருமான ஏற்றத்தாழ்வும் உள்ளது.





கடந்த இருபது ஆண்டு தாராளமய கொள்கையால் இந்த வருமான இடைவெளி பெருகிக்கொண்டு போகிறது. நலிந்தோர் மேலும் நலிந்தவண்ணம் உள்ளனர். மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, தனி நபர் வருமானம் 2023—ல் ஆண்டுக்கு 3½ இலட்சம் ரூபாயாகவும், மாத வருமானம் 29,000/— ரூபாயாகவும் இருக்கும். இந்த உயர்வான ஆசை நிறைவேற வேண்டும் என நானும் ஆசைப்படுகிறேன். ஆனால், தனி நபர் வருமானத்தை சராசரியில் கணக்கிடும்போது, பெரும்பான்மையாய் இருக்கிற அடித்தட்டு மக்களின் ஏழ்மையை அது பிரதிபலிப்பதில்லை. தினம் ரூ.26 ஈட்டினாலே அவன் வறுமைக்கோட்டைக் கடந்தவன் என்று மத்திய அரசாங்கம் கூறிக்கொண்டு இருக்கிறது. மத்திய திட்டக் கமிஷன் துணைத் தலைவர், பொருளாதார வளர்ச்சி இருந்தாலும், மக்களிடையே வருமான இடைவெளி பெருகி வருகிறது என்று சமீபத்தில் உண்மை பேசி இருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையிலே மாண்புமிகு திருமதி ஜெயந்தி நடராஜன் அவர்கள் நேற்று பேசி, இன்று காலையிலும், அதுதான் பிரபலமாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சியின் பலன் அடித்தட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்தால்தான் பொருளாதார வளர்ச்சி நீடித்த தன்மையோடு இருக்கும். அடித்தட்டு மக்களின் வாங்கும் திறனை, வருமானத்தை உயர்த்த வேண்டும். விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க வேண்டும். இருபது ஆண்டு தாராளமய கொள்கையில் ஏழை மக்களுக்குக் கிடைத்திருப்பது inclusive growth உள்ளடங்கிய வளர்ச்சி என்ற வார்த்தை மட்டும்தான். ஆனால், நவீன தாராளமய கொள்கைகளில் விலைவாசி இன்னொரு பக்கத்தில் கடுமையாக உயர்ந்தவண்ணம் இருக்கிறது. தண்ணீர்கூட இனி தனியார்மயம் என்று மத்திய அரசு அறிவிக்கும் நிலையில்! கல்வியும், மருத்துவமும் தனியாரிடம் போய்க் கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் தொலைநோக்குத் திட்டத்தில், அரசு—தனியார் பங்கேற்புத் திட்டங்களுக்கு அழுத்தம் தரப்பட்டுள்ளது. இது நாம் விரும்பும் விளைவுகளை உண்டாக்காமல் போகுமோ என்கிற ஐயம் எனக்கு எழுகிறது. வளர்ச்சியின் பலன் அடித்தட்டு மக்களுக்குக் கிடைப்பதை, இந்த தனியார்—அரசு பங்கேற்பு உறுதி செய்யாமல் போகுமோ என்கிற அச்சமும் இருக்கிறது. வேலைவாய்ப்பினைப் பெருக்க திறன் மேம்படுத்தல்

அவசியமானது. அதற்காக நம்முடைய அறிக்கையில் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இப்போது இருக்கும் வேலைகள் பறிபோவதைக் காப்பாற்றாமல், வேலைவாய்ப்பைப் பெருக்குவது என்பது எப்படிச் சாத்தியம்? இருக்கும் வேலை பறிபோகாமல் காப்பாற்ற வேண்டும். கடந்த 4 ஆண்டுகளாக மின்வெட்டு காரணமாகவே விசைத்தறி மற்றும் சிறு பட்டறைகள் இவற்றில் மட்டும் பெரும் வேலையிழப்பு நடந்துள்ளது. தமிழகத்தில் 50 இலட்சம் பேருக்கு வேலை தருகிற 7 இலட்சம் சிறு, குறு தொழில்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவை முடங்கிவிட்டன. தங்களின் மிகக் குறைவான வருமானத்தை இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இழந்துவிட்டனர். நிவாரணம் வேண்டுமென்று அவர்கள் கோரத் தொடங்கியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11–40*

ஜெனரேட்டர்களுக்கு ரூ.5 இலட்சம் மானியம் என்பது அரசின் நல்ல அக்கறையைக் காட்டுகிறது, நான் வரவேற்கிறேன். ஆனால், ஜெனரேட்டர்களுக்கு இப்போதுள்ள விலையில் டீசல் போட்டு ஓட்டினால் ஒரு யூனிட் மின்சாரம் 12 ரூபாய் அடக்கமாகிறது. இப்போது டீசல் விலை மீண்டும் ஏறினால் இது இன்னும் கூடும்; இது கட்டுப்படியாகாது. எனவே, ஜெனரேட்டருக்குப் போடும் டீசலுக்கு மானியம் தருவதுதான் இதற்குத் தீர்வாக அமையும் என்று நான் கூற விரும்புகிறேன். மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறியோடு ஒரு இன்வெர்ட்டரையும் வழங்குவது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை 18 ரூபாய் வரை ஒரு யூனிட்டிற்கு விலை கொடுத்து வாங்கி அதை பன்னாட்டு பகாசுர கம்பெனிகளுக்கு, 4 ரூபாய் 50 காசுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 1,400 மெகா வாட் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய இந்தப் பெரிய கம்பெனிகளில் 50,000 பேருக்குக்கூட நிரந்தர வேலை கிடையாது. தடையில்லா மின்சாரத்தை இவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் தவறான தகவலை சட்டமன்றத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். பன்னாட்டு கம்பெனிகளுக்கு



தமிழகத்தில் வெறும் 2 சதவிகிதம், அதாவது 216 மெகா வாட் மின்சாரம் மட்டும்தான் கொடுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் உங்களுக்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அடிப்படையில் 1,200 மெகா வாட் என்று சொன்னார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கணக்கு தவறு என்றால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். 216 மெகா வாட் ஆனாலும், அதற்குக் குறைவாக இருந்தாலும் அது மிக அதிக விலை கொடுத்து வாங்கித் தரப்படுகிறது. தடையில்லா மின்சாரம் இவர்களுக்கு வழங்கப்படுவதை உடனடியாக நாம் நிறுத்த வேண்டும். நம்மவர்களுக்கு மின் வெட்டு நிபந்தனைகள் எவையெவையோ, அவற்றை அவர்களுக்கும் பொருத்த வேண்டும். நம்மோடு அவர்கள் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

பெரும் வேலைவாய்ப்புகளுடைய ஆதார ஊற்றுக்கண்ணாய் விளங்கும் சிறு மற்றும் குறுந்தொழில்களை நாம் காப்பாற்றியாக வேண்டும். அதுகுறித்து அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது எதற்காகப் போடப்படுகிறது? ஓர் அரசோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பதே, அந்த ஒப்பந்தத்தின்படி நாம் நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் போடப்படுகிறது. பெரிய, பெரிய தொழிற்சாலைகள் வந்ததால்தான் சிறு தொழிற்சாலைகள் எல்லாம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன. மறைமுகமாக தொழிலாளர்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு கிடைப்பதே இந்தப் பெரிய தொழிற்சாலைகளை நம்பித்தான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் திரும்பத் திரும்ப ஏதோ நாங்கள் தவறு செய்வதைப்போல, பன்னாட்டு கம்பெனிகளுக்கு, நமது இந்திய நாட்டு கம்பெனிகளைப்போல கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்

கொண்டிருக்கின்றீர்கள். நான் கடந்த முறையே சொன்னேன், உள்நாட்டு கம்பெனிகளும் இங்கே அந்த அளவுக்கு முதலீடு செய்கின்றபோது அவர்களுக்கும் அந்தச் சலுகை உண்டு என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** உள்நாட்டுக் கம்பெனிகளுக்கு இந்த மின்வெட்டிலிருந்து சலுகை தரப்படவில்லை. பன்னாட்டுக் கம்பெனிகளுக்குத் தடையில்லாமல் வழங்குகிறீர்கள். உள்நாட்டுக் கம்பெனிகளுக்குத் தடையோடுதான் வழங்குகிறீர்கள் என்பதுதான் என்னுடைய ஒரே கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாட்டுக் கம்பெனிகள் எந்த முதலீட்டைக் கொண்டு வருகிறதோ அந்த அளவுக்கு உள்நாட்டுக் கம்பெனிகளும் அந்த முதலீட்டைக் கொண்டு வருகிறபோது அவர்களுக்கும் அதே சலுகை உண்டு என்பதைத்தான் நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்குவதற்கு, எவ்வளவு மூலதனம் போடுகிறார்கள் என்கிற ஒரு நிபந்தனையை மாண்புமிகு அமைச்சர் சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. உள்நாட்டுக் கம்பெனிகளுடைய அழிவின்மீதோ, உள்நாட்டுக் கம்பெனிகளின் பாதிப்பின்மீதோ, வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு நாம் இங்கே அனுமதி அளித்து வேலை பெற



வேண்டிய தேவை இல்லை என்று நான் மிக வலுவாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய ஒரே குறிக்கோள் சலுகை தாருங்கள், இவர்களுக்கும் தாருங்கள், அவர்களுக்கும் தாருங்கள். நிலம் தருகிறோம், நீர் தருகிறோம், அதையெல்லாம் குறித்து நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், தடையில்லா மின்சாரம் என்று இவர்கள்—நம்முடைய சிறு, சிறு கம்பெனிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். இந்துஸ்தான் மோட்டார்ஸ் என்கிற நம்முடைய பெரிய கார் கம்பெனி, 3 மணி நேரம், 4 மணி நேரம் பவர் கட் செய்கிற அந்தக் காலத்தில் ஓட்ட முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்கள், அவர்களால் போட்டியிட முடியவில்லை. நம்முடைய உள்நாட்டுக் கம்பெனிகளின் போட்டியிடும் திறனை நாம் குறைக்கிறோம் என்கிற நிலையிலிருந்துதான் நான் என்னுடைய கவலையைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டுக் கம்பெனிகள் என்று சொல்கிறார்கள். இப்போதுகூட டி.வி.எஸ்., டி.ஐ. குழுமம் என்று சொல்கிறார்கள். அவை உள்நாட்டுக் கம்பெனிகள்தான். அவற்றுக்கும் அந்தச் சலுகை உண்டு. அவற்றால் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுகிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல், சிறு, குறு விவசாயிகள், தொழிலாளர்கள் என்று சொல்கிறீர்கள். அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 125 கே.வி.ஏ.–யாக இருந்ததை 320 கே.வி.ஏ.–வரைக்கும் உயர்த்தி ரூ.5 இலட்சம் மானியம் தந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குமேல் இந்தத் தொழிற்சாலைகளை எப்படிப் பாதுகாக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாக நினைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசைத்தறிகள் நிறைந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் இந்த பத்து மாத காலத்தில் எந்த அளவிற்கு விசைத்தறிகள் நன்றாக ஓடியிருக்கின்றன. கிட்டதட்ட 5 ஆண்டுக்காலத்தில் இல்லாத இலாபத்தை இந்த ஆண்டு ஈட்டியிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இரகங்களைப்பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தறிகள் இயங்கவில்லை என்பது எனக்குத் தெரியும். எனது சொந்த ஊரில் 300–க்கும் மேற்பட்ட தறிகள் இயங்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும், நான் எனது அடுத்த பாயின்ட்டுக்குப் போகிறேன்.

4,500 மெகா வாட் மின்சாரம் தற்போது பற்றாக்குறையில் இருக்கிறது. இப்போது அரசு எடுத்துள்ள முன்முயற்சிகளையும், நன்முயற்சிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே 110–வது விதியின்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையில் அறிவித்ததையும் நான் வரவேற்கிறேன். ஆண்டுதோறும் 10 சதவிகிதம் மின் தேவை கூடிக்கொண்டிருக்கிறது. Energy saved is energy generated என்பதற்கேற்ப 14.62 இலட்சம் குடிசைகளுக்கு பழைய குண்டு பல்புகள் வழங்கப்படுவதை மாற்றிவிட்டு சி.எஃப்.எல். பல்புகள் அரசால் இலவசமாக வழங்கப்படுவது மிகச் சிறந்த நடவடிக்கைதான். இதனால் 45 மெகா வாட் மின்சாரம் மிச்சமாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1 கோடியே 80 இலட்சம் மின் இணைப்புகளில் 1 கோடி இணைப்புகள் சாதாரண, ஏழையெளிய, நடுத்தர மக்கள் பயன்படுத்தக்கூடிய மின் இணைப்புகள். அந்த இணைப்புகளில் இருப்பவர்களுக்கும் இதைப்போலவே சி.எஃப்.எல். பல்புகளை ஒரு முறை நாம் இலவசமாக வழங்கினால் 300 மெகாவாட்டிற்கு மேல் மின்சாரம் மிச்சப்படும். கிட்டத்தட்ட அது ஒரு பவர் பிளான்ட்டுக்குச் சமம். ஆகவே, நமது நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி சி.எஃப்.எல். பல்புகள் எல்லோருக்கும் வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சி.எஃப்.எல். பல்புகளுக்கு வரிக் குறைப்பு செய்திருப்பதை நான் இந்த நேரத்திலே வரவேற்கிறேன்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கோ–ஜெனரேஷன்—இணை மின்சாரம் தயாரிக்கலாமென ஏற்கெனவே நிதியொதுக்கிக் கொடுத்தபிறகும்கூட 14 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலே இரண்டே இரண்டில் மட்டும்தான் தற்போது கோ–ஜெனரேஷன் இருக்கிறது. மோகனூரிலும், செய்யாறிலும் உள்ளது. வேறு இடங்களில் இல்லை. எனவே, கோ–ஜெனரேஷனுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் வினாக்கள்–விடைகள் நேரத்திலேயே இது குறித்து நான் சொன்னேன். 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தற்போது அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிப்ரவரி 2013–க்குள் இவை முழு உற்பத்தியைத் தொடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்வதற்காக அதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 950 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்து, மின் இழப்புகளை 3 சதவிகிதம் குறைக்க வேண்டுமென மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சென்ற ஆண்டே கூறியது. ஆனால், நம்முடைய மின் வாரியம் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. இரண்டு மின் மாற்றிகளுக்கு இடையிலான. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவிலே, மின் இழப்பு என்பது 27 சதவிகிதம் என்ற அளவிலே உள்ளது. ஆனால், நமது மாநிலத்திலே 18 சதவிகிதம் என்ற அளவிலே குறைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சென்ற ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 18.5 சதவிகிதத்திலிருந்து 19 சதவிகிதம் வரை இருந்தது. இப்போது இன்னும் அரை சதவிகிதம் குறைத்து 18 சதவிகிதம் என்ற அளவிற்கு எட்டியிருக்கிறது. தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி உதவியோடு இன்றைக்கு இப்படிப்பட்ட

பணிகளையும் இங்கே செய்வதற்கு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. படிப்படியாக நிச்சயமாக அந்த மின் இழப்பைக் குறைப்பதற்கான முயற்சிகளை தொடர்ந்து அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இரண்டு மின் மாற்றிகளுக்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தால் மின் இழப்பு குறையும். ஆகவே, மின் மாற்றிகளை அதிகம் பொருத்துவதற்கு கூடுதல் வேகத்தோடு நாம் செயல்பட வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

தொழில்நுட்பம் பயின்றவர்களுக்கு திறன் மேம்பாட்டைச் செய்யும் அதேவேளையில் ஓட்டுனர் போன்ற தொழில்களில் ஈடுபடுவர்களின் உரிமம் பெறுவதற்குக்கூட 10 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். அவர்களுக்கு பப்ளிக் பேட்ஜ் கொடுக்க வேண்டும் என்றால், 8 ஆம் வகுப்பு தேறியிருக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனை போட்டு, அவர்களை வடிகட்டக்கூடாது. விபத்துகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், தண்டனை தருவது வேறு; அவர்கள் உரிமத்தைப் பறிப்பது வேறு. ஆகவே, ஓட்டுனர் உரிமம் பறிக்கப்படுவதையும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் துறையில் 17 நல வாரியங்கள் இப்போது இருக்கின்றன. இந்த நல வாரியங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். தனித்தனி தொழிலுக்கு நல வாரியம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ஓட்டுனர் உரிமம் பெற முடியும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இது மத்திய அரசு கொண்டு வந்த நடைமுறை.



மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்று, மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டு, தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல வாரிய உறுப்பினர்கள் பலன் பெறும்போது மட்டும் வங்கிக் கணக்கை அவர்கள் காட்டவேண்டுமென்று கூறினால் போதும். அவர்கள் பதிவு செய்யும்போதே வங்கிக் கணக்கு என்கின்ற நிபந்தனையை நாம் அகற்றவேண்டும். ஜீரோ பேலன்ஸ் என்கின்ற அக்கவுண்டிங் முறையிலே வங்கிகள் கணக்கு துவங்க ஒத்துழைக்காத காரணத்தினால் நம்மவர்கள் வங்கிக் கணக்கைத் தொடங்க முடியவில்லை. எனவே, அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். கிராம நிருவாக அதிகாரிகள், நல வாரியத்தில் தலையிட வேண்டிய அவசியமே கிடையாது. அதைத் தடுக்க வேண்டும். 26 S.S.S.-L.O. பணியிடங்கள் இப்போது காலியாக இருக்கின்றன. அவர்களை நியமிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிக் கணக்கு என்பது பயனாளிகளுக்கு முறையான வகையில், அந்தப் பணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையிலே அந்த உறுப்பினர்கள் பதிவு செய்யும்போது அங்கே கேட்கப்படுகிறது. அவர்களுக்கு காசோலை மூலமாக பணம் தரவேண்டும் என்கின்ற ஒரு நல்ல அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலன் பெறும்போது மட்டும் வங்கிக் கணக்கை வலியுறுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

[திரு. அ. சவுந்தரராசன்] [2012 ஏப்ரல் 4

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் தலைமை)

அடுத்து, பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் என்பது கடந்த 2 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. கடந்த ஆட்சியிலிருந்து இந்த ஆட்சி வரை நிலுவையில் இருக்கிறது. அவர்களுக்கு அந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை நிறைவேற்றியிருந்தால் ஒன்றேகால் கோடி ரூபாய் ஒவ்வொரு நாளும் அவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு ஒன்றேகால் கோடி ரூபாய் இழப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். குறைந்தபட்சக் கூலிக்கான சட்டத்தை பீடித் தொழிலாளர்களுக்கு இயற்றவேண்டும்.

அங்கன்வாடி பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் வழங்கக்கூடிய ஊதிய உயர்வை நம்முடைய மாநில அரசு முன்பும் சரி, இப்போதும் சரி வழங்குவது இல்லை என்று அவர்கள் குறை கூறுகின்றார்கள். அவர்களுக்கென்று வழங்கக்கூடிய அந்த நிதியை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

பூ ஒன்று புயலானது என்பது போல, செவிலியர்களின் போராட்டம் ஒரு பெரிய கண்திறப்பாக சமீபத்தில் நடந்து முடிந்தது. தொடர்ந்து யாரையும் கொத்தடிமையாய் வைத்திருக்க முடியாது என்பதற்கான அறிவிப்பாகவே அந்தப் போராட்டம் அமைந்தது. 6,000 ரூபாய் பெற்றவர்கள் இப்போது 12,500 ரூபாய் பெறுகிறார்கள்.

சினிமா தொழிலில் இப்போது நடந்து கொண்டிருக்கக்கூடிய போராட்டத்தை முதல்வர் அவர்கள் தலையிட்டு தீர்க்க வேண்டும்.

தனியார் மெட்ரிக்குலேசன் பள்ளிகளில், எவ்வளவு படித்திருந்தாலும் ஆசிரியர்களின் சம்பளம் 5,000 ரூபாய்க்கும் கீழ்தான், இவர்கள் தொழிலாளி என்ற சட்ட வரையறைக்குள் கொண்டுவரப்பட்டு குறைந்தபட்சக் கூலி 15,000 ரூபாய் என்று அவர்களுக்கு அந்தக் கூலியைத் தீர்மானிக்க வேண்டும். ஒப்பந்தக் கூலி முறையை நாம் ஒழித்தாலொழிய தமிழகத்திலே தொழிலாளர்கள் வாழ்நிலையை மேம்படுத்த முடியாது.

தொழிற்சங்க அங்கீகாரச் சட்டம் இயற்றி, கூட்டு பேர உரிமையை உறுதி செய்யவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். குறிப்பாக, வேலைவாய்ப்பகத்திலேயே 350 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கேயாவது முதலிலே நீங்கள் நிரப்ப வேண்டுமென்று உங்களை வலியுறுத்துகிறேன்.



2012 ஏப்ரல் 4] [திரு. அ. சவுந்தரராசன்]

முறைசாரா நல வாரிய படிவங்களிலே உறுப்பினர்கள், பட்டியல் இனத்தவர்களா என்று குறிக்க வேண்டுமென்று சமீபத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவர்கள் குறிக்க, வேண்டுமென்று சொல்லப்படுகிறது. முன்பெல்லாம் அப்படிக் கேட்டதில்லை. இப்போது பட்டியல் இனத்தவர்களா என்று அவர்களை குறிக்கச் சொல்வதிலேயிருந்து ஒருவேளை ஆதி திராவிட மக்களுடைய துணைத் திட்டத்திற்கு ஆகக்கூடிய செலவிலிருந்து அவர்களுக்குத் தரக்கூடிய பலன்களுக்கான பணம் எடுக்கப்படுமா என்கின்ற ஒரு வலுவான சந்தேகம் இருக்கிறது. அதை அரசாங்கம் போக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுக்கு இதர முறைசாரா தொழிலாளர்களுக்கு வழங்குவது போல ஆதி திராவிட தொழிலாளர்களுக்கும் வழங்குவதை உட்கூறு திட்டத்திற்குள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அச்சன்குளத்தில் இருக்கின்ற இராமநாதபுரம் கூட்டுறவு பஞ்சாலை திறக்கப்பட்டதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன். அதேபோல, மூடப்பட்டிருக்கின்ற இதர 12 பஞ்சாலைகளையும் திறக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவைச் சேர்ந்தவர்களில், வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் நலத் திட்டங்களின்மூலம் எத்தனை பேர் பயனடைகிறார்கள் என்ற விவரங்களை அரசுக்குத் தெரிவிக்க வேண்டியுள்ளதால் ஜாதி பற்றிய விவரங்கள் கேட்கப்படுகின்றன. மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவைச் சார்ந்தவர்கள், வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் நலத் திட்டங்களின்மூலம் எத்தனை நபர்கள் பயனடைகிறார்கள் என்பது குறித்து தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின தேசிய ஆணையத்திற்கும் அறிக்கை அளிக்க வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குச் செலவு செய்கின்ற பணம் துணைத் திட்டத்தில் போகாமல் இருந்தால் போதும்.

முற்பகல் 11–55

மேலூரில் இருக்கிற மதுரை கூட்டுறவு பஞ்சாலைக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலம் ஒரு தனியார் கிரானைட் கம்பெனிக்கு விற்கப்பட்டிருக்கிறது. அதை மீட்டு அந்தப் பஞ்சாலையையும் நாம் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான மாணவர் விடுதிகளில் 650 ரூபாய், 750 ரூபாய் என்ற அளவிற்கு உணவுக் கட்டணம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கைதிகளுக்குக்கூட ரூ.30 ஒரு நாளைக்குச் செலவழிக்கப்படுகிறது. வறுமைக்கோடு என்கிற அந்த எல்லையைக்கூட 26 ரூபாய் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாதம் 1,000 ரூபாயாவது அவர்களுக்கு உணவுக் கட்டணமாக வழங்கினால்தான் சரியாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு வீடு கட்டும் சொசைட்டியிலேயே கடன் வாங்கியவர்களுக்கு வட்டி குறைப்பு நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே செய்யப்பட்டிருக்கிறது; நான் வரவேற்கிறேன். அவர்களுக்கு முழுமையாக வட்டியைத் தள்ளுபடி செய்தால்தான் பலன் இருக்கும். அதேபோல் நலிந்த விவசாயிகளுடைய பயிர்க் கடனுக்கான வட்டியை முழுமையாக இரத்து செய்யவேண்டும். பண்ணைசாரா கடனுக்கான வட்டியையும் இரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திடக்கழிவு பற்றி நம்முடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய வருத்தமெல்லாம் சென்னை நகரத்தைப்பற்றி திடக்கழிவு விவகாரத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. கிட்டத்தட்ட 8,000 மெட்ரிக் டன் அளவுக்கு



இங்கே திடக்கழிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. அறிக்கையில் ஒன்றும் சொல்லப்படவில்லை என்பது ஒன்று. இரண்டாவது, கொடுங்கையூரில் இருக்கிற திடக்கழிவு கொட்டப்பட்டுள்ள இடம் ஏற்கெனவே பால் பண்ணைக்குச் சொந்தமான பெரிய புல் பண்ணை. இப்போது நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கால்நடைகளுக்கான தீவனம் தயாரிப்பதற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, பழைய புல் பண்ணையை மீட்டு அங்கே புல்லை வளர்க்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். திடக்கழிவுகள் கொட்டுவதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ஜூன் மாதம் அரசு ஊழியர்களுக்குப் பொருத்துகிறபோது கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கும், டாஸ்மாக் ஊழியர்களுக்கும் பொருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை மருத்துவமனையாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுத்து, அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவமனைகளிலே உள்ள அறுவை சிகிச்சைக் கூடங்களை மேம்படுத்துவதற்காக நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. மேம்படுத்துவது சரி. ஆனால், அறுவை சிகிச்சைக் கூடங்கள் போதவில்லை என்பதுதான் இப்போது இருக்கிற அடுத்த முக்கியமான பிரச்சினை. சென்னை நகரத்திலே இதய நோயாளிகள் அறுவை சிகிச்சைக்காக ஆறு மாதம், எட்டு மாதம் என்று காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்படுகிறார்கள். இது மிகவும் கடுமையான சூழ்நிலை. ஆகவே, அறுவை சிகிச்சைக் கூடங்களை அதிகம் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக அறுவை சிகிச்சை அரங்குகள் மேம்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றோம். தொடர்ந்து அறுவை சிகிச்சைகளை அதிகப்படுத்துதலும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமை, ஓட்ஸ் போன்றவற்றிற்கு வரி விலக்கு, இன்சுலின் போன்றவற்றிற்கு வரிக் குறைப்பு செய்திருப்பதை நான் வரவேற்கிறபோதே, இதர முக்கியமான நோய்களுக்கு, சர்க்கரை நோய்க்கும், இரத்த அழுத்த நோய் மருந்து, தைராய்டு நோய் மருந்து, கிட்னி மாற்றிற்கான நோய் மருந்து, ஆயுட்கால மருந்துகள் இவற்றிற்கான வரியைக் குறைத்தால் நம்முடைய மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்று நான் வலியுறுத்துகிறேன். கூட்டுறவில் மருந்துக் கடைகளை வட்டார அளவுகளிலே திறந்தால் அது ஏழை மக்களுக்கு பெரிதும் பயன்படும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழகத்திலே மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலேதான் நூற்றுக்கும் மேற்பட்ட மருந்தகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் அம்மாவினுடைய ஆட்சியிலே அதிகமான மருந்தகங்கள் இந்தாண்டுதான், 100 என்பது இன்றைக்கு 105 ஆக குறியீடு செய்யப்பட்டு நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழகத்தில் இருக்கிற 1,200–க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்களிலே +1, +2–வுக்கு கலைப் பாடப் பிரிவுகள் இல்லை. இந்தக் கலைப் பாடப் பிரிவுகளை அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் தொடங்கினால்தான் சாதாரண பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீரில் கழிவுநீர் கலக்கும் பிரச்சினையிலே ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அது மிக அடிப்படையான சுகாதாரப் பிரச்சினையாக சென்னையிலே இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.



இப்போது ஒருவருக்கு பெண் குழந்தை இருந்தால் அந்தப் பெண் குழந்தைக்கு நலத் திட்டம் இருக்கிறது. 22,200 ரூபாய் ஏற்கெனவே தரப்பட்டது. இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15,200 வீதம் ரூபாய் 30,400 அந்த இரண்டு பெண் குழந்தைகளுக்கும் ஏற்கெனவே கிடைக்கும். இப்போது இருவருக்குமே ரூ.50 ஆயிரம் என்று ஆக்கிவிட்டோம். ஏற்கெனவே ஒரு பெண் குழந்தைக்கும், இரண்டு பெண் குழந்தைக்குமான தொகையில் வித்தியாசம் இருந்தது. கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கும்; இப்போது இருவருக்கும் சமமாக்கி விட்டார்கள். ஆகவே, இரண்டு பெண் குழந்தைகள் பெற்றவர்களுக்கு ஏற்கெனவே இருந்ததைப்போல கூடுதலான நிதியைத் தரவேண்டும். அவர்களுக்கு தலா 25 ஆயிரம் என்பதற்குப் பதிலாக 30 ஆயிரம் என்று அறிவித்து 60 ஆயிரம் ரூபாயாக ஆக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்ற பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திலேயே அதிகமான நிதி உதவிகள்தான் அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அல்ல.

இந்த நிதி உதவி என்பது இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்ற குடும்பத்தாருக்குப் போய்ச் சேரக்கூடிய அதிக நிதி உதவி என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். தங்கள் உரையை கொஞ்சம் சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதுதொடர்பாக ஒரு கடிதத்தை விளக்கமாகத் தருகிறேன்.

உள்ளூர் திட்ட அமைப்புகள்மூலம் கட்டமைப்பு மற்றும் அடிப்படைக் கட்டணத்தை 50 சதவிகிதம் உயர்த்துவது என்பது மிக அதிகமானது. அதைச் சற்று குறைக்க வேண்டுமென்று நான்

கேட்டுக்கொள்கிறேன். வழிகாட்டி மதிப்பை உயர்த்துவதை ஏப்ரல் மாதத்திலிருந்து என்று அமல்படுத்தாமல் மூன்று மாத காலமாவது அவகாசம் தருவது அவசியம் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே விற்க, வாங்க திட்டமிட்டிருப்பார்கள். அதைச் சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைபடி உள்ளாட்சிகளுக்கு அதிக நிதி தருவதையும் உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

நான் அரசிற்கு வருமானம் தருகிற ஒரு விஷயத்தை கூறுகிறேன். மணல் குவாரியை அரசே ஏற்று நடத்துகிறது. அரசிடம் அதை ஒருவர் வாங்கி குவித்து வைத்துக்கொண்டு, சில்லறையிலே விற்கிறார். ஏராளமான மணல் வைத்தும் விற்கிறார். ஆகவே, குவாரி வைத்திருக்கிற அரசிற்கும் வருமானம் குறைகிறது. அதற்குப் பிறகு அவர் விற்கிறபோது, நுகர்வோருக்கும் விலை மிக அதிகமாக உயருகிறது. ஆகவே, இந்த மணல் பிரச்சினையிலே அரசாங்கம் தலையிட்டு நேரடியாக விற்பதை உறுதிப்படுத்தி மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாஸ்மாக் கடைகளிலே இப்போது இவ்வளவு விற்க வேண்டுமென்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் விற்பனையைப் பொறுத்த அளவிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரிலே அரசு குவாரிகளிலே இரண்டு யூனிட் மணல் அனுமதிக்கப்பட்ட அளவு வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது இதை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்தின் வரலாற்றில் தனியார் மணல் விற்பனை செய்து கொண்டிருந்ததைத் தடுத்து அரசே ஏற்று, அரசிற்கு ஒரு



வருமானத்தை ஈட்டித் தந்தவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திட்டம்–1 இன் மூலமாக 25 ஆயிரம் ரூபாய் பெறுகிறபோதே அவர்கள் 20 ஆண்டுக்காலம் கழித்து அவர்களுக்கு முதிர்வுத் தொகை என்பது, மூன்று இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து இருபத்தைந்து ரூபாய் கிடைக்கிறது. அதேபோல திட்டம்–2, அதாவது ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் போய்ச் சேரக்கூடிய தொகை ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றி இருபத்து ஏழு ரூபாய், முதிர்வுத் தொகையாக அந்தப் பெண் குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. ஆக, இந்தத் திட்டத்தின் நோக்கமே பெண் குழந்தைகளுக்குக் கல்வித் தொகை—கல்வி வளர்ச்சியிலே ஊக்குவிப்பதற்காகவும் அவர்கள் பள்ளி இறுதிப் படிப்பு முடித்ததற்குப் பிறகு, அவர்களுக்குத் திருமண உதவிக்கு இந்தப் பணம் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகவும் வைக்கப்பட்டிருக்கின்ற திட்டம்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், ஒரு நிமிடத்தில் தங்கள் உரையை முடியுங்கள். திரு. துரைமுருகன் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேச வேண்டும்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இப்போது டாஸ்மாக் கடைகளிலே target வைக்கப்படுகிறது. இவ்வளவு வசூலிக்காவிட்டால், விற்பனை செய்யாவிட்டால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாய் மூலமாகச் சொல்லப்படுகிறது. இது பொருத்தமானதல்ல. விற்பனைக் குறைவிற்கு பார்களிலே விற்கப்படுகிற கள்ளச் சாராயம் காரணமாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் இவ்வளவுதான் விற்பனை செய்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, எந்த ஆணையும் வழங்கப்படவில்லை. மாறாக, கள்ளச் சாராயமும், மற்ற மாநிலங்களிலிருந்து வரி கட்டாமல், அரசுக்கு வரி ஏய்ப்பு செய்து வருகின்ற சரக்குகளும் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் கடுமையாக நடவடிக்கை எடுத்து, ஒரு கடையிலே என்ன விற்க முடியும் என்ற அளவு தெரியும்; அந்த அளவிற்குக் குறைவாக இருந்தால், மற்ற தவறு நடக்கிறது என்று பொருள். ஆகவே, தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, அப்படி விற்பனைக்கு வருவதைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், இவ்வளவுதான் விற்றாக வேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிர்ணயிக்கப்படவில்லை. குறிப்பிட்டு எந்த ஆணையும் வழங்கப்படவில்லை. மாறாக, அப்படி வந்துவிடாமல், விற்பனை குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்; மற்ற சரக்குகள் உள்ளே வந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்றுதான் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த உற்பத்தி மதிப்பிலே, நம்முடைய கடன் இப்பொழுது 19.6 சதவிகிதம். அனுமதிக்கப்பட்டிருக்கிற அளவான 24.8 சதவிகிதத்தைவிட இது குறைவு. இது நல்ல நிருவாகத் திறமை என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை உண்மையிலே நான் பாராட்டுகிறேன். மத்திய அரசாங்கமே இந்த fiscal responsibility போன்ற எல்லா விஷயங்களிலும் இப்போது சறுக்கிவிட்டது. பற்றாக்குறை அந்த Fiscal Responsibility Act இல் இருப்பதைவிட கூடுதலாக இருக்கிறது. மத்திய நிதியமைச்சரே மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்த எல்லையைத் தொடுவோம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், நாம் அந்தக் குறியீட்டுக்குள்ளே நிற்கிறோம். என்னுடைய கேள்வி என்னவென்றால், நமக்கு கடன் அனுமதிக்கப்பட்டிருக்கிற அளவுக்கு நாம் வாங்கினால் இன்னும் 35 ஆயிரம் கோடி ரூபாய் வாங்கலாம். கூடுதலாக வாங்கவோ, அதிகமாக வாங்கவோ நான் வலியுறுத்தவில்லை. கடன் வாங்க வழியிருந்தால், வாய்ப்பிருந்தால், அதை நாம் பெற்று, கொஞ்சம் கடன் பெற்றாவது, பேருந்துக் கட்டணம், பால் கட்டணம், மின்சாரக் கட்டணம் போன்றவற்றிலே



ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு மேலும் மகிழ்வான வாழ்வைத் தர நான் வேண்டுகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் இங்கே கடன் வாங்குகின்ற அளவு, மத்திய அரசினுடைய 13–வது நிதிக் குழு அளவுகளின்படி இப்பதாகவும், நமது உற்பத்தி மதிப்பும் 19 சதவீத அளவுக்குத்தான் கடன் வாங்குகிறோம் என்ற ஒரு சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நல்ல ஒரு நிதி நிருவாகத்தை நாட்டிற்குத் தந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு, மேலும் கடன் வாங்குகின்ற அளவு 30 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருக்கின்றது; அதை வாங்கி விலைவாசி உயர்வு, பஸ் கட்டண உயர்வினைத் தடுத்து நிறுத்துங்கள் என்ற தொனியில் இங்கே பேசினார்கள். அது தவறான கருத்து என்பதை நான் இந்த சபையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடன் திரட்டுகின்றபொழுது அது முழுக்க முழுக்க மூலதனச் செலவுகளுக்காகவே செலவு செய்யப்பட வேண்டும் என்பதுதான் ஒரு நல்ல நிருவாகத்தினுடைய நிதி நிலைமை என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே, கடன் வாங்கி சம்பளங்கள் கொடுப்பதோ, மற்ற பொருள்களுக்கு ஊதாரித்தனமாகச் செலவழிப்பதோ நல்ல நிதி நிருவாகம் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வாங்கி செலவு செய்வது ஊதாரித்தனம் அல்ல. என்றாலும் அந்த விவரத்துக்குள்ளே நான் போகவில்லை. நான் ஊதாரித்தனமாகச் செலவு செய்யச் சொல்லவுமில்லை. கடன் வாங்க வாய்ப்பு இருந்தால், வாங்குவதில் பொருளாதாரப்படி குற்றமில்லை. மக்களுக்காக அதை நாம் செய்ய வேண்டும்.

(மணியடிக்கப்பெற்றது) அடுத்து சட்டம்–ஒழுங்கு. கடைசியாக, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை. (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள். (குறுக்கீடு) வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், தயவுசெய்து இன்றைக்கு விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் படித்தவரையில், என் அறிவுக்கு எட்டிய வரையில், நான் புரிந்துகொண்ட வகையில், எனக்கு சில ஐயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஐயங்களை கேள்விகளாக்கி, அல்லது குற்றச்சாட்டுகளாக்கி நான் நிதி அமைச்சர் அவர்களிடம் தொடுக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட ஐயங்களை அவர் முன்னால் நான் தெரிவிக்கிறேன். அவர் அதுகுறித்து எனக்கு விளக்கம் அளித்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என் ஐயங்களைத் தெரிவிக்கிறேன்.

ஐயம் 1. நிதிநிலை அறிக்கையின் இணைப்பில் வருவாய் வரி மற்றும் வருவாய் இனங்களின்மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாய் மற்றும் 2012–2013 ஆம் ஆண்டு இந்த இனங்களின்மூலம் பெறப்படும் மதிப்பீடுகள் ஆகியவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் ஆயத்தீர்வை வரவுகள், முத்திரைத் தாள் தீர்வை, மோட்டார் வாகன வரி ஆகிய இனங்களுக்கு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கும், ஆண்டு நிதிநிலை அறிக்கை Annual Financial Statements குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால், விற்பனை வர்த்தகம் முதலியவற்றின்மீது வரிகள் மதிப்பீடு Taxes on Sales and Trades ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.44,007.69 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நிதிநிலை அறிக்கை இணைப்பு பக்கம் 94, பத்தி 6–ல் வணிக வரியின்மூலம் பெறப்படும் வரவுகள்



ரூ.46,678.10 கோடியாக இருக்கும் என்று விளக்கப்பட்டிருக்கிறது. மேலும், இது கடந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட 17.4 சதவிகிதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.44,007.69 கோடியை, 17.4 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்று தெரிவிக்கிறது. மாறாக, நிதிநிலை அறிக்கை இணைப்பில் குறிப்பிட்டுள்ள தொகையான ரூ.46,678.10 கோடியுடன் ஒப்பிடும்போது, 25 சதவிகிதம் அளவிற்கு வளர்ச்சி கொண்டதாகத் தெரிகிறது. எனவே, இந்த வேறுபாட்டை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

இரண்டாவதாக, நிதிநிலை அறிக்கையில் பக்கம் 45, பத்தி 7–ல் தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத்திற்கு 2010–2011 நிதியாண்டில், பங்குமூலதன உதவியாக ரூ.4,100 கோடியும், கடனாக ரூ.1,455.16 கோடியும் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில், Annual Statement–ல் பக்கம் 14–ல் 4.8.01 என்ற தலைப்பின்கீழ், மின்சார சக்தி குறித்த மூலதனச் செலவாக ரூ.4,100 கோடி என்றும், பக்கம் 19–ல், 6.8.01 என்ற தலைப்பின்கீழ் மின் திட்டங்களுக்கான கடனாக ரூ.2,955 கோடி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, மின் உற்பத்தி பகிர்மானக் கழகத்திற்கு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.1,455.6 கோடியைக் காட்டிலும், கூடுதலாக ரூ.1,500 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, நிதிநிலை அறிக்கையில் எந்த விளக்கமும் இல்லை. இதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தங்கள் உரையில் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நிதிநிலை அறிக்கையில் ஐந்து இனங்களில், கூடுதல் வரி மற்றும் வருவாய் பெருக்க வழிகளை அறிவித்திருக்கின்றீர்கள். ஒன்று, மதுபானங்களின் மீதான கூடுதல் விற்பனை வரி; இரண்டு, தாவர எண்ணெய்மீது மதிப்புக் கூட்டு வரி; மூன்று, வாகனங்களின் மீதான வரிகளைத் திருத்தி அமைத்தல் மற்றும் கூடுதல் கட்டணங்கள்; நான்கு, 1–4–2012 முதல் திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பு அமல்படுத்தப்படுவதால் கிடைக்கும் கூடுதல் முத்திரைத் தீர்வை வருவாய்; ஐந்து, உள்ளூர் திட்ட அமைப்புகள்மூலம் வசூலிக்கப்பட இருக்கும் கட்டமைப்பு மற்றும் அடிப்படைக் கட்டணங்கள் ஆகிய இந்த 5 இனங்கள் மூலமாக

ரூ.1,500 கோடி அளவிற்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இனங்களில் எவ்வளவு வருவாய் எப்படிக் கிடைக்கும் என்ற விவரத்தையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவற்றில் சிலவற்றை மட்டும் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஒன்று, நிதிநிலை அறிக்கையின் இணைப்பு, பக்கம் 94, பத்தி (இ)–ல் வழிகாட்டி மதிப்பு திருத்தி அமைக்கப்படுவதால் முத்திரைத் தாள் தீர்வை மற்றும் பத்திரப் பதிவு மூலமாகக் கிடைக்கும் வருவாய் 2011–2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூ.6,467.55 கோடியைவிட 30.91 சதவிகிதம் உயர்ந்து, 2012–2013 ஆம் ஆண்டு ரூ.8,466.94 கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது, வழிகாட்டி மதிப்பு திருத்தியமைக்கப்படுவதால் மட்டுமே கூடுதலாக சுமார் ரூ.2,000 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்கும் என அரசு கருதுவதாக நான் அறிகிறேன்.

பிற்பகல் 12–15

இரண்டாவதாக, நிதிநிலை அறிக்கையின் இணைப்பு, பக்கம் 94, பத்தி (அ)–இல் வணிக வரிமூலம் பெறப்படும் வரிகள் ரூ.46,678.10 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதைத்தான் முன்பே சொன்னேன்–Financial Statement–இல் மாறாக 44,007.69 கோடி என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, வரவு–செலவுத் திட்டத்தில் உள்ள மதிப்பீட்டைக் காட்டிலும் ரூ.2,670 கோடி கூடுதலாகக் கிடைக்கும் என்று தெரிவதாக நான் அறிகிறேன்.

மூன்றாவதாக, நிதிநிலை அறிக்கையின் இணைப்பு, பக்கம் 95, பத்தி (ஈ)–ல் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் படிக்கின்றபோது, வரும் நிதியாண்டிலிருந்து மோட்டார் வாகன வரியைத் திருத்தியமைப்பதால் இவ்வினத்தின் வளர்ச்சி அதிகமாக, அதாவது, 28.99% அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது எனத் தெரிவித்திருக்கிறார். எனவே, 2011–2012 ஆம் ஆண்டில் இவ்வினத்தில் பெறப்பட்ட ரூ.3,210.39 கோடி வருவாயைவிட உயர்ந்து, 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.4,141.11 கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், சென்ற நிதியாண்டில் கிடைத்த வருவாயைவிட இந்த நிதியாண்டில் ரூ.931 கோடி



வருவாய் கூடுதலாகக் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளதாக அறிகிறேன்.

இந்த இடத்தில் அமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்கலாம். திரு. துரைமுருகன் அவர்கள் ரூ.931 கோடி முழுவதும் இந்த ஆண்டிலே கூடுதல் வருவாயாகக் கிடைக்கும் என்று கணக்கிடக் கூடாது; இது growth rate–ல் வளரக்கூடிய வருவாயாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரிவிக்கலாம். நான் தெரிவிக்க விரும்புவது, 2010–2011 ஆம் நிதியாண்டில் இந்த இனத்தில் கிடைத்த வருவாய் 2,660 கோடி ரூபாய், 2011–2012 ஆம் ஆண்டு நிதியில் கிடைத்த வருவாய் ரூ.3,210 கோடி. அதாவது, 550 கோடி அந்த ஓராண்டில் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது. அவ்வாறு கிடைத்த ரூ.550 கோடி என்பது சென்ற ஆண்டு வளர்ச்சியின் வாயிலாகக் கிடைத்தது என்று எடுத்துக்கொள்வோம். ஆக, இந்த நிதியாண்டில் கிடைத்திருக்கக்கூடிய ரூ.931 கோடியில் growth rate–ன் வாயிலாக ரூ.600 கோடி கிடைக்கும் என்று எடுத்துக் கொண்டால்கூட, மோட்டார் வாகன வரி திருத்தியமைக்கப்பட்டதால் மட்டுமே இந்த அரசுக்கு சுமார் ரூ.300 கோடிக்கும் அதிகமாகக் கிடைக்கும். இவ்வாறு, நிதிநிலை அறிக்கையில் கணக்கிடப்பட்டிருக்கின்ற மூன்று இனங்களில் மட்டும் நான் எடுத்துக் காட்டியவரையில், அதாவது, வழிகாட்டும் மதிப்பு திருத்தியமைக்கப்படுவதால் ரூ.2,000 கோடி, வணிக வரிமூலம் ரூ.2,670 கோடி, மோட்டார் வாகனங்கள் வரி திருத்தியமைக்கப்படுவதால் ரூ.300 கோடி, ஆக மொத்தம் ரூ.500 கோடி (குறுக்கீடு) மன்னிக்கவும், correct ஆக இருக்கிறீர்களா என்று சொல்லிப் பார்த்தேன், (சிரிப்பு) ரூ.5,000 கோடி ரூபாய் இந்த ஆண்டில் உங்களுக்குக் கிடைக்கும். ஆக, நீங்கள் எதிர்பார்க்கின்ற இந்த 1,500 கோடி போனாலும், மீதி பணம் இருக்கும். மீதி இருக்கின்ற பணத்தில், இவ்வளவு பணம் உங்களுக்கு நிறையாக இருக்கிறபொழுது நீங்கள் தாவர எண்ணெய் மீது வரி, அதன்மீது வரி, இதன்மீது வரி என்று நிறைய வரிகள் போடுகிறீர்கள். இந்த வரிகளையெல்லாம் மறு பரிசீலனை செய்யும்படி நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பிற்பகல் 12–20

அதுமட்டுமல்ல, உங்களைப் பொறுத்தவரையிலே எப்பொழுது ஆட்சிக்கு வந்தாலும் வரியைப் போடுகிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. நீங்கள் முதலில் ஆட்சிக்கு வருகிறபொழுது

உங்களுக்கு 2010–2011–லே Accounts எவ்வளவு இருந்தது? Minus 2,728 கோடி ரூபாய். Deficit–ல் நீங்கள் இருந்தீர்கள். ஆனால், நீங்கள் வரி போட்டதற்குப் பிறகு B.E.—லே நீங்கள் எவ்வளவு expect பண்ணினீர்கள்? 173 கோடி ரூபாய் surplus ஆக expect பண்ணினீர்கள். ஆனால், உங்களுக்கு fortunately, 2011–2012–ல் R.E.-ல் எவ்வளவு கிடைத்தது? 536 கோடி ரூபாய் உங்களுக்குக் கிடைத்தது. அதாவது 3 மடங்கு கிடைத்தது. ஆனால், இப்போது B.E.—லே நீங்கள் எவ்வளவு expect பண்ணியிருக்கிறீர்கள்? 2,376 கோடி expect பண்ணியிருக்கிறீர்கள். அதோடு நிறுத்தவில்லை. பெருமையாகச் சொல்லியிருக்கிறார் நம்முடைய நிதியமைச்சர். இதே 2012–2013–ல் மட்டுமல்ல இந்த growth. அதே நேரத்திலே, 2013–2014, 2014–2015 என்று இந்த range–ல்தான் எங்களுக்கு உபரி கிடைக்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறீர்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இவ்வளவு வரிகளைப் போட்டிருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையிலே நான் கேட்க விரும்புவது, எப்பொழுதெல்லாம் நீங்கள் ஆட்சிக்கு வருகிறீர்களோ அப்பொழுதெல்லாம் வரியைப் போட்டுக்கொண்டுதான் இருக்கிறீர்கள். நீங்கள் கேட்கலாம், வரியே போடாமல் ஆட்சி நடத்த முடியுமா என்று கேட்டால், நீங்கள் அடிக்கடி சொல்லுகிறீர்களே, ‘உங்கள் ஆட்சி ஒரு மைனாரிட்டி, மைனாரிட்டி’ என்று; அந்த மைனாரிட்டி அரசுதான் 5 ஆண்டுக்காலம் ஒரு மெஜாரிட்டிக்கு இருக்கிற அந்த கம்பீரத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) வரி போடாமலேயே 5 ஆண்டுக்காலத்திலே எங்களுடைய ஆட்சியை நடத்தியிருக்கிறோம். பல திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே ஒரு நீண்ட உரையை அவருக்கே உரிய பாணியில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதெல்லாம் தி.மு.க. மைனாரிட்டி அரசு ஆட்சிக்கு வருகின்றதோ அப்போதெல்லாம் தமிழ்நாட்டினுடைய நிதியை எந்த அளவுக்கு சீரழித்து, அதலபாதாளத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) தள்ளி விடுகின்றார்கள் என்பதற்கு கடந்த காலத்தில் நிறைய



உதாரணங்கள் இருக்கின்றன. எப்போதெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்போதெல்லாம் தமிழகத்தினுடைய நிதிநிலையைச் சீரமைத்து ஓர் ஆரோக்கியமான நிலைக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) அரசினுடைய நிதியைக் கொண்டுவந்து மக்களுக்கு அளிக்கவேண்டிய நல்ல பல திட்டங்களுக்கு, மூலதனச் செலவுகளுக்காகச் செலவழித்துள்ளார்கள். இதுதான் ஒரு சிறந்த அரசினுடைய அடையாளம். அவ்வாறு புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியில் இருக்கும்போதெல்லாம் சிறப்பான முறையில் ஆட்சி நிருவாகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து ஒரு சிறந்த நிருவாகத்தைத் தந்தார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவினுடைய 2001–2006 ஆட்சிக் காலத்தில்—ஓர் அரசோ ஒரு தனி நபரோ கடன் வாங்கினால் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற வலிமை உள்ளவராக இருந்தால்தான் அந்தக் கடனை வாங்க வேண்டும். வாங்கப்படுகின்ற கடன் ஒரு மாநிலத்தில் இருந்து வருகின்ற வரி வருவாயில் செலவு செய்ததுபோக பற்றாக்குறை இருக்கமுடியாத ஒரு சூழ்நிலையில் அரசினுடைய நிதிநிலைக் குறியீடுகள் இருக்க வேண்டும். வரவுக்கு மேலாக செலவுகளைச் செய்துவிட்டு நிதியைக் கடனாகப் பெற்று அதை வருவாய்ப் பற்றாக்குறைக்கு ஈடுகட்டுவது ஒரு சிறந்த நிருவாகத்தின் அடையாளம் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில், அந்த 5 ஆண்டுக்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் நிகரக் கடனாகப் பெற்றது 28,773 கோடி ரூபாய். ஆனால், 2006–2011 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சி செய்த காலத்தில் 43,892 கோடி ரூபாயை இவர்கள் கடனாக வாங்கியிருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், 2009–2010 ஆம் ஆண்டில், ஒரு மாநிலத்திலிருந்து சொந்த வரி வருவாயிலிருந்து வரப்படுகின்ற வருவாயைக் காட்டிலும் 3,521 கோடி ரூபாயை வருவாய்ப் பற்றாக்குறையாக இவர்கள் நிகழ்த்தியிருந்தார்கள். அதைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டிலும், 2011 ஆம் ஆண்டிலும்

2,728.68 கோடி ரூபாயை வருவாய்ப் பற்றாக்குறை உள்ள நிலையை இவர்களுடைய அரசு இங்கே நிகழ்த்திக் காட்டியிருந்தது. ஆக மொத்தம் இவர்கள் ஆண்ட கடைசி இரண்டு வருடங்களில் மட்டும் 6,249.68 கோடி ரூபாயை வருவாய்ப் பற்றாக்குறையாக வைத்துச் சென்றார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல வாங்கப்படுகின்ற கடனைத் திருப்பி செலுத்துகின்ற ஆற்றல் ஓர் அரசுக்கு இருக்கவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் 2001–2006 ஆம் ஆண்டுவரை வாங்கிய கடனைத் திருப்பி செலுத்தியது 73 ஆயிரத்து 43 கோடி ரூபாய். ஆனால், இவர்கள் ஆண்ட 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 64,662 கோடி ரூபாயைத்தான் இவர்கள் திருப்பிச் செலுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. அரசைக் காட்டிலும் அதிகமாக 8,381 கோடி ரூபாயை, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற ஆற்றல் படைத்த அரசாகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருந்தது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வரைமுறை இல்லாமல் கடனை வாங்கி, அதை மூலதனச் செலவுகளுக்குச் செலவு செய்யாமல், வருவாய் வரவிலிருந்த வருவாய்ப் பற்றாக்குறைக்கு ஈடு செய்கின்ற அரசாகத்தான் ஒரு மோசமான நிதிநிலையை இவர்கள் விட்டுச்சென்றார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன். (குறுக்கீடு) இதுதான், இதுதான் body language. முன்னர் சொன்னது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன், நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தைத் திசை திருப்ப வேண்டாம், Please sit down. அவர் என்ன சொன்னார்? இதுதான் body language என்றார். (குறுக்கீடு) அவர் உங்களைப் பற்றி



ஏதாவது தரக்குறைவாகச் சொன்னாரா? அப்படி ஒன்றும் இல்லையே? Please sit down.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஓர் அமைச்சர் பதில் சொல்வதற்கு எழுகின்றபோது ஏளனமான ஒரு சிரிப்பு சிரித்தால் அதுதான் body language. (குறுக்கீடு) ஓர் அமைச்சர் பதில் சொல்வதற்கு அல்லது வினா எழுப்புவதற்கு எழுகின்றபோது (குறுக்கீடு) இதுதான் body language. வேறு வழி கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தைத் திசை திருப்ப வேண்டாம், அருள்கூர்ந்து உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) நிதியமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு உள்ளது. (குறுக்கீடு) இவருக்கும் பதில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன், பிறகு அவர் சொல்லட்டும், அவர் அதற்குப் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. அமைச்சர் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்களைப் பேச அனுமதிக்காமல் இல்லையே, அனுமதிக்கிறேன் இல்லையா? அவர் பேசுவதைக் கேட்டுவிட்டு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுது ஆட்சிக்கு வந்தாலும் வரி போடுகின்ற அரசாக இருக்கிறது என்றும், தங்களுடைய ஆட்சி வரி போடாத ஆட்சி என்றும் சொன்னார்கள். நான் அதற்கு ஒரு வினாவை எழுப்புகிறேன். இவர்களது ஆட்சியில், அவருடைய ஆட்சியில் துணை முதலமைச்சராக இருந்தவர் பொறுப்பேற்றிருந்த இந்தத் துறையில், வரி போடாத காரணத்தினால்தான் பல்வேறு திட்டங்கள், குறிப்பாக பாதாளச் சாக்கடைத் திட்டம், கிட்டத்தட்ட குடியாத்தத்திலிருந்து ஆரம்பித்து மன்னார்குடியிலே ஆரம்பித்து, இங்கேயிருக்கின்ற வேலூர் வரையில் மத்திய அரசிடம் கேட்டு அந்தத் திட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவித்து, விழாவும்

[திரு. கே.பி. முனுசாமி] [2012 ஏப்ரல் 4

எடுத்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது, அதற்குரிய நிதியாதாரத்தை அவர்களால் உருவாக்க முடியாதபட்சத்தில், இவர்கள் வரி போடாத ஒரு பட்ஜெட்டைக் கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–30

அதேபோல, வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம். இங்கு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 25–1–2011–ல் விழாவே எடுத்து விட்டார், அடிக்கல்லையே நாட்டிவிட்டார். ஆனால் அதற்கு நிதி ஆதாரம் எங்கேயென்று தெரியவில்லை; அதற்கு டெண்டரே விடப்படவில்லை. டெண்டரே விடப்படாமல், அடிக்கல் நாட்டியதாக அந்த நகரத்திற்குக் குடிதண்ணீர் கொடுத்ததாக ஓர் அறிக்கையையே வெளியிட்டார். எவ்வளவு பெரிய கொடுமை? ஆனால் திட்டங்களைத் தீட்டி மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு திட்டத்தை அறிவிக்கிறார்கள். 60,000 பசுமை வீடுகள் என்ற திட்டத்தை அறிவித்தார்கள். அதற்குரிய நிதி ஆதாரத்தை 1,080 கோடி ரூபாயை அந்த நிதியாண்டிலேயே கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிதியாண்டிலேயே கொடுத்து, அதே ஆண்டில் 60,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பயனாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் மக்கள் நல அரசு. ஏழை மக்களுக்காக இருக்கின்ற அரசு.

திட்டங்களைத் தீட்டுவது, விளம்பரப்படுத்திச் சொல்வது, வரியில்லாத பட்ஜெட் என்று சொல்வது வேறு. அன்று மக்கள் ஏழ்மையில் வாடிக் கொண்டிருந்தார்கள். கொடுத்த திட்டங்கள் மக்களைச் சென்றடையவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அந்தத் திட்டம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோதே முடிவடைகின்ற திட்டமாக இருக்கும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டங்களை எப்பொழுது அறிவிக்கிறார்களோ (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுதே அதற்குரிய நிதி ஆதாரங்களை ஒதுக்கிவிடுகிறார்கள். உதாரணத்திற்கு, கிருஷ்ணகிரி நகரில் பேருந்து நிலையம் அறிவித்தார்கள். நிதியை ஒதுக்கினார்கள்; பேருந்து நிலையத்தைக் கட்டினார்கள். ஆனால் விழாவை எடுத்தவர்கள் அவர்கள். நாங்கள் நிதி ஆதாரம் ஒதுக்கி, அதற்காக கட்டடத்தையும் கட்டுவதற்கு இடத்தையும் தேர்வு செய்து, அதை முழுமைப்படுத்திய பிறகு



2012 ஏப்ரல் 4] [திரு. கே.பி. முனுசாமி]

அதில் குளிர் காய்கின்ற ஒரு அரசாகத்தான் கடந்த கால ஆட்சி இருந்தது. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, கட்டமைப்புகளை உருவாக்குவதற்குரிய நிதி ஆதாரங்களைத் தேடாத அரசாக கடந்த கால அரசு இருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தத் திட்டங்களானாலும், நிதி ஆதாரங்களைப் பெருக்கி அதற்குரிய நடவடிக்கை எடுக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் 13–வது நிதிக் குழு, இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்கள் வாங்குகின்ற கடன் அளவு குறியீட்டை நிர்ணயம் செய்கின்றது. 2011–2012 ஆம் ஆண்டில் 13–வது நிதிக் குழு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு, 17,437 கோடி கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்ட தொகையாக அறிவித்தது. மாண்புமிகு அம்மா அவர்களது சிறந்த நிருவாகத்தின் மூலமாக நிதிநிலையைச் சீராக்கி 17,437 கோடி ரூபாய் கடன் வாங்கலாம் என்றிருந்தாலும், 12,873.81 கோடி ரூபாய்தான் கடன் வாங்கப்பட்டது. சரி, இவ்வாறு வாங்கிய கடனை நாம் என்ன செய்தோம்? 12,873.31 கோடி ரூபாய் கடனை வாங்கியிருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் மூலதனச் செலவுக்கு, அதாவது, creation of assets–க்கு அதைப் பயன்படுத்துகின்றார்கள். இதுதான் ஓர் ஆரோக்கியமான நிதிநிலை. (மேசையைத் தட்டும் ஒலி) 16,388 கோடி ரூபாயை மூலதனச் செலவுகளுக்கு, அதாவது, வாங்கிய கடன் தொகை 12,873 கோடி ரூபாய், மூலதனச் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 16,388 கோடி ரூபாய். இதுதான் ஓர் ஆரோக்கியமான நிதிநிலை. மாண்புமிகு அம்மா அவர்கள் அதை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். 2009–2010 ஆம் ஆண்டில் அவர்கள் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறார்கள் என்று தெரியுமா? 14,024 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். எவ்வளவு மூலதனச் செலவுக்காகச் செலவு செய்தார்கள்? 8,573 கோடி ரூபாய்தான். 14,024 கோடி ரூபாய் கடனை வாங்கி மூலதனச் செலவு ரூ.8,000 கோடி. கடனை வாங்கினால் எவ்வளவு செய்திருக்கவேண்டும்? மாண்புமிகு அம்மாவைப் போல 13,000 கோடி கடன்

வாங்கினாலும், 3,000 கோடி ரூபாய் அதிகமாகப் போட்டு, 16,000 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனச் செலவு செய்திருந்தால், ஒரு சிறந்த நிருவாகத்தைத் தந்தோம் என்று நீங்கள் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவர்கள் 14,000 கோடி ரூபாய் கடனை வாங்கி 8,573 கோடி ரூபாய் மட்டுமே மூலதனச் செலவுகளுக்கு செலவு செய்திருக்கிறார்கள். மீதித் தொகையை என்ன செய்தார்கள்? கலர் டி.வி. கொடுத்தார்களே, உருப்படியில்லாத கலர் டி.வி., எந்தப் பிரயோஜனமும் இல்லை. அவை பூராவும் 'டப்பு, டிப்பு' என்று வெடித்துப் போய், கலர் டி.வி. எதுவுமே இன்றைக்கு இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) இதுமாதிரியான ஊதாரிச் செலவுகளுக்குத்தான் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு செலவு செய்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆட்சிக்கு வருகின்றபோதெல்லாம் வரி போடாத பட்ஜெட் போடுகிறோம் என்று சொல்கின்றார்கள். அவர்கள் வரி போடாமல் போட்ட பட்ஜெட்டினுடைய இலட்சணம் என்னவென்றால், 2006–ல் ஆட்சிக்கு வருகின்றபோது—அதற்கு முன்பு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வரி வசூல் என்பது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம்மூலம் வசூலிக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆட்சியின் கடைசி ஆண்டில் இருக்கின்றபோது, 18 சதவிகிதம், எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு 18,000 கோடி ரூபாய் வரி வசூல் செய்தார்கள். என்னவென்றால், பல்வேறு வரி கட்டணங்கள் இருந்தன. 1 சதவிகிதம், 2 சதவிகிதம், 5 சதவிகிதம், 8 சதவிகிதம், 9 சதவிகிதம், 10 சதவிகிதம், 12 சதவிகிதம், 14 சதவிகிதம் என்று பல்வேறு வரி சதவிகிதங்கள் இருந்தன. ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 1–1–2007 அன்று, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தை எடுத்துவிட்டு, மதிப்புக் கூட்டு வரி என்ற சட்டத்தைக் கொண்டுவந்து, 1 சதவிகிதம், 4 சதவிகிதம், அதற்கடுத்து 14.5 சதவிகிதம்தான். அதற்கு இடைப்பட்ட 5 சதவிகிதம், 6 சதவிகிதம்,



8 சதவிகிதம், 12 சதவிகிதம் என்று இருந்ததையெல்லாம் மாற்றிவிட்டு, கிட்டத்தட்ட ஆயிரம் பொருட்களுக்குமேல், அத்தியாவசிப் பொருட்கள் அத்தனைக்கும் 14.5 சதவிகிதமாகக் கொண்டுபோய்தான், அந்த வரி வருவாயைக் கூட்டினார்கள். 2006–2007 இல் அவர்களுக்கு 4 சதவிகிதம் மட்டும்தான் வரி வருவாய். அதற்குப் பிறகு மதிப்புக் கூட்டு வரியைக் கொண்டுவந்த பிறகுதான், 10 சதவிகிதம், 14 சதவிகிதம், 25 சதவிகிதம் என்று கடைசி ஆண்டு கொண்டுவந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–35

அதுமட்டுமல்ல, அவர்கள் வரியே போடவில்லை என்று சொன்னார்கள். அந்த சந்தை மதிப்பீட்டு வரி, 1–8–2007 அன்றுதான் அவர்களுடைய ஆட்சியில்தான் திருத்தியமைக்கப்பட்டது. நிலம், வீட்டு மனைகளுக்கு 97 சதவிகிதம், விளைநிலங்களுக்கு 83 சதவிகிதம் என்று திருத்தியமைத்து, வருவாயைக் கூடுதலாகப் பெருக்கி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 6 மாத காலத்திற்கு உள்ளாகவே, 18–3–2008 அன்று இந்திய முத்திரைத் தாள் சட்டத்திற்கு சட்டத் திருத்தம் கொண்டுவந்து, 47-AA என்ற ஒரு பிரிவைக் கொண்டுவந்து, அதற்கு 1–6–2010 அன்று அரசாணை வெளியிட்டு, ஒரு குழு அமைத்து மீண்டும் புதிய சந்தை வழிகாட்டும் மதிப்பீட்டை திருத்த வேண்டும், மதிப்பீடு செய்ய வேண்டுமென்று ஆணையைப் போட்டது அவர்கள்தான். 1–6–2010 அன்று வெளியிடப்பட்ட அந்த அரசாணையின்படிதான், இன்றைக்கு இந்த சந்தை வழிகாட்டு மதிப்பீட்டின்படி மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போட்டவர்கள் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** இன்னும் யாரும் இல்லையா? யாராவது பேச இருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தமாதிரி பேசக்கூடாது. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நிதியமைச்சர் அவர்கள் முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். இந்த சபைக்கென்று மரபுகள் இருக்கின்றன; கண்ணியங்கள் இருக்கின்றன. அவை காப்பாற்றப்பட வேண்டும். இந்த நக்கல், கேலி, கிண்டல் இதையெல்லாம் வெளியில் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. துரைமுருகன்:** இது நக்கல், கேலி, கிண்டல் அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் எழுந்து பதில் சொல்வதைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

**திரு. துரைமுருகன்:** இதில் என்ன தவறு? சரி போகட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை அனுமதிக்க முடியாது. அமைச்சர்கள் அனைவருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. நீங்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கு அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** எத்தனை பேர் பேசினாலும் பரவாயில்லை. ஒவ்வொரு மந்திரிக்கும் பேசுவதற்கு உரிமை உண்டு. நான் இல்லையென்று சொல்லவில்லை. They are entitled to reply. பேசட்டும், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு கருத்து. இன்னும் எத்தனை அமைச்சர்கள் பேச இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அன்றைக்கு நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, எனக்கு 2 அல்லது 5 நிமிடங்கள்தான் பேச வாய்ப்பைத் தந்தார்கள். ஆனால், அன்றைக்கு நான் பேச ஆரம்பித்தால், ஒவ்வோர் அமைச்சராக எழுந்து குறுக்கிட்டுப் பேசுவார்கள். நான் பேச ஆரம்பித்து, நன்றி சொல்வதற்குக்கூட இவர்கள் அன்றைக்கு அனுமதித்ததில்லை. இப்போது இரண்டு அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசுவதற்கே இவர் குறை சொல்கிறார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே உங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். கடந்த ஆட்சியில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் அம்மா அவர்கள் பேசியபோது, 65 முறை அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசினீர்களா, இல்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, 31–7–2006 அன்று இந்த அவையில் பேச முற்பட்டபோது, அமைச்சர்கள், முதலமைச்சர் உட்பட, எழுந்து 65 முறைகள் குறுக்கிட்டு என்னைப் பேசவிடாமல் தடை செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் மனசாட்சியைத் தொட்டுக் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** சார், குறுக்கிடுவது தவறு என்றே நான் சொல்லவில்லை. சரி, அடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு தடவை இல்லை, 65 முறைகள் குறுக்கிட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்:** ஒரு பேச்சுக்குச் சொன்னேன். எந்த அரசாங்கமும் வரி போடுவதையோ, கடன் வாங்குவதையோ தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், நாங்கள் போடவில்லை என்றுதான் சொன்னேன்.

மூன்றாவது ஒரு முக்கியமான செய்தியைத் தங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு) நேற்றையதினம் பத்திரிகையிலே ஒரு செய்தியை நான் பார்த்தேன். துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரையில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் பின் வரிசையில் இருந்துகொண்டு comment அடித்துக் கொண்டிருந்தால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நான் உங்களைக் கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களை எச்சரிக்கிறேன். பின் வரிசையில் இருந்து comment அடித்துக்கொண்டிருந்தால் உங்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்படும். அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 12–40

**திரு. துரைமுருகன்:** துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரையில் Elevated corridor அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மத்திய அரசாங்கம் ஒதுக்கீடு செய்த 18,000 கோடி ரூபாயில் நான்கில் மூன்று பங்கு செலவு செய்து அந்தப் பாலம் போடும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. திடீரென்று தமிழக அரசின் சார்பில் அதை நிறுத்திவிட்டார்கள் என்று நேற்றைக்கு 'Times of India' பத்திரிகையிலே மிகப் பெரிய ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அது பெரிய அதிர்ச்சி தரக்கூடிய ஒன்று. காரணம், பூந்தமல்லி நெடுஞ்சாலையிலே நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், Containers வேகமாக dry port—லேயிருந்து வருவதற்காகவும், துறைமுகத்திலேயிருந்து மதுரவாயல் வரையிலே அந்த மேம்பாலத்தைக் கட்டுகிறார்கள். அதனால், என்ன பயன் என்றால், நெரிசல் குறைந்துபோகும், Containers வேகமாக வரும். கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் தூரம் செல்வதற்கு தற்போது ஐந்து மணி நேரம் ஆகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், இந்த பாலப் பணி நிறைவடைந்தால், 10, 15 நிமிடங்களிலே port–லேயிருந்து மதுரவாயல் சென்றுவிடலாம் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு பயன்கள் இருக்கின்றன. மத்திய அரசிடமிருந்து 18,000 கோடி ரூபாய் பெற்று, அதில் நான்கில் மூன்று பகுதி செலவு செய்யப்பட்டது என்று சொல்கிறார்கள். அந்தப் பணிகளைச் செய்வதற்கு தமிழக அரசு அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. Pollution Control Board-ன் permisson வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு ஏன் அதை நிறுத்திவிட்டார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு நாங்கள் ஆட்சியில் இருந்தபொழுது எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் கேட்டு பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடமிருந்து அந்தத் திட்டத்தை வாங்கினார்கள். பிரதமரே வந்து தொடங்கி வைத்த ஒரு திட்டம். அந்தத் திட்டத்தைப் பாதியிலே நிறுத்துவதன் நோக்கம் என்ன? ஓர் ஆட்சி இன்றைக்கு இருக்கும், இன்னொரு நாளைக்கு மாறும். (குறுக்கீடு) அப்படி மாறுவதுதான் ஜனநாயகம். (குறுக்கீடு) சரி, நீங்களே இருங்கள். யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், ஜனநாயகத்தின் தத்துவம் என்னவென்றால், ஆளுங்கட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் ஏராளமானவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். முழுமையாக ஆராய்ந்து அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அந்தத் திட்டம் மத்திய அரசாங்கம் கொண்டுவந்த திட்டம். மாநில அரசாங்கம் கொண்டு வரவில்லை. முழுக்க, முழுக்க மத்திய அரசாங்கத்தினுடைய நிதியிலிருந்துதான் செயல்படுத்தப்படுகிறது, நாம் ஒரு பகுதிதான் கொடுக்கிறோம். சரியான முறையில் ஆராய்ந்து இந்தத் திட்டத்தை அவர்கள் கொண்டு வரவில்லை. அப்படி முழுமையாக ஆராய்ந்து கொண்டுவந்திருந்தால், நிச்சயமாக அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கும். முழுமையான கவனம் செலுத்தாமல், அவசரக் கோலத்திலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், இது மத்திய அரசு செயல்படுத்துகின்ற திட்டமே தவிர மாநில அரசு செயல்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மத்திய அரசாங்கத்தினுடைய பணம்தான். National Highways Department தான் செய்கிறது. இதில் தவறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் கூவம் ஆற்றின் கரையோரமாக அமைத்திருக்க வேண்டும். ஆனால், கூவம் ஆற்றுக்குள்ளேயே பில்லர் போட்டு பாலத்தை எழுப்புகிறார்கள். இது நீர்நிலை ஆதாரத்திற்குப் பாதிப்பைத் தருகிறது என்பதாகக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் ஓடும் பாதையிலே அடைத்து விட்டிருந்தால், அது தவறு. அதற்கு வேண்டுமானால் வழி செய்து கொடுக்கலாம். கம்பம்தான்

போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். நீங்கள் அடையாறிலே பக்கிங்ஹாம் கால்வாயைப் பார்த்தீர்களானால், புதிதாக இரயில் நிலையம் அமைத்து, இரயில்வே துறையினர் முழுவதுமாகத் தூர்த்திருக்கிறார்கள். அங்கே தண்ணீர் போக முடியாது. ஆகையால், நீர் ஓடும் பாதை அடைத்திருந்தால் அதனை சரி செய்து கொடுக்கலாம். ஆனால், அந்தப் பணிகளையே நிறுத்தி விட்டதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, அதை நிறுத்திவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். எனவே, அதுகுறித்து விசாரித்து மீண்டும் அந்தப் பணி தொடருவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும், இவ்வளவு பெரிய பணியை நிறுத்திவிடக்கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஏனென்றால், ஓர் அரசாங்கம் செய்து வந்த பணியை அடுத்து வருகின்ற அரசாங்கம் நிறுத்திவிடக்கூடாது.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். இந்தச் சட்டமன்றத்தை எடுத்துக்கொண்டால், இதில் இடம் போதவில்லை, நெருக்கடி இருக்கிறதென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வேறு ஓர் இடத்திலே கட்டடம் கட்டுவதற்குப் பார்த்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு ஆட்சி மாறிவிட்டது. பிறகு, நாங்கள் ஓர் இடத்திலே கட்டினோம். கட்டிய பிறகு நீங்களும் வந்து சட்டசபையில் இருந்தீர்கள், பார்த்தீர்கள். திடீரென்று அந்தச் சட்டசபையை மாற்றினால், எவ்வளவு பணம் waste?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நீதிமன்றத்திலே உள்ள வழக்கு தொடர்பான பிரச்சினை.

**திரு. துரைமுருகன்:** இதிலே என்ன தவறு இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது subjudice. நீங்கள் அது குறித்துப் பேசக்கூடாது.

**திரு. துரைமுருகன்:** இது subjudice ஆகாது. நான் அந்தப் பிரச்சினைக்கே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்திலே உள்ள ஒரு பொருள் குறித்து விவாதிக்கக்கூடாது. நீங்கள் வேறு சப்ஜெக்டுக்குப் போங்கள்.



**திரு. துரைமுருகன்:** நான் குறையே சொல்லவில்லை. அதை மாற்றினோமா என்றுதான் கேட்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே கொண்டு வந்தார்கள் என்ற ஒரே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான தொகை எவ்வளவு waste என்று இங்கே பதிவு செய்திருக்கிறார். அது waste ஆகவில்லை. Super-speciality மருத்துவமனையாக, இந்தியாவிலேயே மிக உயர்ந்த தரமான சிகிச்சை அளிக்கக்கூடிய மிக உயர்ந்த மருத்துவ வசதிகளைக்கொண்ட மருத்துவமனையாகத்தான் மாற்றப்படவிருக்கிறதே தவிர அது எப்படி waste ஆகும்? அதை அப்புறப்படுத்தினால்தான் அது waste. Waste என்ற வார்த்தையே முதலில் தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது அந்தக் கட்டடம் சட்டமன்றத்திற்கு என்று கட்டப்பட்டது. ஆனால், மருத்துவமனை கட்டுவதற்கு வேறு மாதிரியான மாடலில் கட்டவேண்டும். ஆனால், நீங்கள் சட்டமன்றத்திற்கு என்று கட்டப்பட்டதை மருத்துவமனையாக மாற்றவேண்டும் என்று சொல்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்தது என்பதற்காக சட்டமன்றமாகப் பயன்படுத்தவில்லை. அந்தக் கட்டடம் எங்கள் வீட்டுப் பணத்தில் கட்டப்பட்டது அல்ல, சர்க்கார் பணத்தில் கட்டப்பட்டது. இந்த சர்க்கார் பணம் waste ஆகிறது. இப்போது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் பயன்படுத்தப்பட இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால்,

சட்டமன்றத்திற்கு அந்தக் கட்டடம் பயன்படுவதைக் காட்டிலும் பல கோடி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே, அந்த முதலீட்டைப் பயனுள்ள முதலீடாக மாற்றியிருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்கள் தான் அதை waste பண்ணியிருக்கிறார்கள் தேவையில்லாமல். தேவையில்லாத இடத்தில், தேவையில்லாமல் அங்கு சட்டமன்றக் கட்டடத்தைக் கட்டி இருக்கிறார்கள். அதிலும், சென்னை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலான இடத்திலே முதலிலே கட்டடம் கட்டுவதே தவறு. அவர்கள் தான் waste பண்ணி இருக்கிறார்களே தவிர, மாண்புமிகு அம்மா அவர்கள் அதைப் பயனுள்ள முதலீடாக மாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் தி.மு.க. அரசு எப்போது ஆட்சிக்கு வந்தாலும், தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக சில கட்டடங்களைக் கட்டுவது அவர்களுடைய வாடிக்கை. அதுபோலத்தான், மக்களுடைய வரிப் பணத்தை எடுத்து தன் ஆயுள் காலம் வரை தன் பெயரைச் சொல்லவேண்டும் என்பதற்காக அள்ளித் தெளித்து ஒரு சட்டமன்றக் கட்டடத்தைக் கட்டினார்கள். பாரம்பரியம்மிக்க இந்த அவை இருக்கின்றபோது, அந்த அவை தேவையில்லை என்று எப்படியோ முந்தைய அரசு செலவு செய்துவிட்டது. செலவு செய்த அந்தப் பணத்திற்கு ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் கட்டடத்தை மருத்துவமனையாக மாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரக்கணக்கான நோயாளிகள் அங்கே வந்து நல்ல தரமான சிகிச்சை பெறவேண்டும் என்பதற்காக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோது, ஏதோ இந்தச் சட்டமன்றப்



பேரவையில் இட நெருக்கடி உள்ளது என்று நான் சொன்னதாகவும், அதற்காக அவர்கள் வேறு இடத்தில் ஒரு புதிய சட்டமன்றக் கட்டடத்தைக் கட்டியதாகவும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது என்பதற்காக நாங்கள் அதைப் புறக்கணிப்பதாகவும், அதை வீணடிப்பதாகவும் இங்கே பேசினார்கள். சட்டமன்றப் பேரவை அமைந்துள்ள இந்தக் கட்டடத்திற்குள் இட நெருக்கடி உள்ளது என்று நான் எப்போதும் சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக தலைமைச் செயலகத்தில் இட நெருக்கடி என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

சரி, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதற்காக விசாலமான ஒரு பெரிய இடத்தில், இவர்கள் ஒரு புதிய கட்டடத்தை எழுப்பியதாகக் கூறுகிறார்கள். அது ஏதோ முழுவதுமாக தலைமைச் செயலகத்திற்குப் பயன்பட்டது போலவும், நாங்கள் வேண்டுமென்றே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டடப்பட்டது என்பதற்காக அதைப் பயன்படுத்தவில்லை என்றும் குறிப்பிடுகிறார். திரு. துரைமுருகன் அவர்கள் கூறுவதே தவறான தகவல் ஆகும். அரசாங்கத்தில் மொத்தம் 36 துறைகள் இருக்கின்றன. இவர்கள் கட்டிய அந்தப் பெரிய கட்டட வளாகத்தில், கடைசி வரை அவர்கள் ஆட்சியில் இருந்தவரை அங்கே செயல்பட்டது ஆறு துறைகள் மட்டுந்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 30 துறைகளும் கடைசி வரை இதே புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் அரைகுறையாகக் கட்டிவிட்டு, ஒட்டுமொத்த அரசுப் பணிகளும் அங்கே நிறைவேற முடியாதபடி, அரசாங்கத்தில் செயல்படுகின்ற 36 துறைகளையும் அங்கே கொண்டுசென்று செயல்படவைக்க முடியாதபடி, இங்கும் அங்குமாக அரசு அதிகாரிகள் அலையவேண்டிய ஒரு சூழ்நிலையை அவர்கள் உருவாக்கி, அதாவது புதிய கட்டட வளாகத்தில் மாண்புமிகு அமைச்சர்களுக்கு மட்டும் அறைகள் தயார் செய்யப்பட்டன. 36 துறைகளுக்கான அமைச்சர்களும் அங்கே உட்கார்ந்திருப்பார்கள். ஆனால், 6 துறை அதிகாரிகளுக்கும், அத்துறைகளின் ஆவணங்கள் வைப்பதற்கும் மட்டுந்தான் அங்கே இடம் உண்டு. மீதமுள்ள 30 துறைகளைப் பொறுத்தவரை, அந்த 30 துறைகளுக்கான அமைச்சர்கள் மட்டும் புதிய கட்டடத்தில் இருப்பார்கள். அவர்களுடைய துறைச் செயலாளர்கள், அந்தத் துறை சம்பந்தப்பட்ட அலுவலகங்களும், ஒட்டுமொத்த ஆவணங்களும் இங்கேதான், புனித செயின்ட் ஜார்ஜ்

கோட்டையில்தான் இருந்தன. ஆகவே, அரசு நிருவாகத்தில் பெரும் தாமதமும், குழப்பமும் ஏற்பட்டது. ஒட்டுமொத்தமாக அரசு நிருவாகம் அங்கே செயல்படக்கூடிய அளவில் அவர்கள் கட்டடத்தைக் கட்டினார்களா என்றால் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு துறைகள் மட்டும்தான் அங்கே செயல்பட்டன. அதற்குமேல் அங்கே shift செய்வது என்றால், அங்கே கொண்டு போவது என்றால், மேலும் ஒரு துறைக்கு மட்டும்தான் அங்கே இடம் இருந்தது. அப்போது, மீதமிருந்த துறைகளுக்கு என்ன செய்வது? ஆகவே, அவர்கள் சொல்வதே தவறான தகவல்; அவர்கள் செய்தது எல்லாமே அரைகுறை; அதுபோல் இந்தக் கட்டடமும் அரைகுறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயிருந்து பல துறைகளை மாற்றிக்கொண்டு போனோம். இரண்டாவது ஒரு Block கட்டினோம். அந்த Block கட்டினால், whole Secretariat அங்கே போய் விடும். அந்தக் கட்டடம் பாதி கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இப்போது நிற்கிறது. நீங்கள் நிறுத்திவிட்டதால் அந்தப் பணிகள் நின்றுவிட்டன. பாதி கட்டப்பட்ட நிலையில் நிற்கும் அந்தக் கட்டடத்தை இப்போது என்ன செய்வது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற 'நாமக்கல் கவிஞர் மாளிகையை' நன்றாக develop செய்யப் போகிறோம் என்று சொல்கிறார்கள். தயவு செய்து ஒரு நாளைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு உள்ளே சென்று பார்க்க வேண்டும். Road–ல் எல்லாம், வீதியில் எல்லாம் இருக்கிற மாதிரி, அங்கே வராண்டாவில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு இவ்வளவு தொகை செலவு செய்ய இருக்கிறீர்கள். நாமக்கல் கவிஞர் மாளிகை பழைய கட்டடம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகள்



அவர்கள், நாமக்கல் கவிஞர் மாளிகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இங்கே போதிய வசதி இல்லை; அங்கே செயல்பட முடியவில்லை என்கிறார். சரி. அதற்கெல்லாம் ஈடு செய்வதற்கு அவர்கள் வசதியாக புதிய கட்டடத்தைக் கட்டி முடித்தார்களா, இல்லையே! 5 ஆண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்கவில்லை. கட்டி முடிக்காததைப் பற்றி ஏன் பேசுகிறார்கள் என்று புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் பட்ஜெட்மீது பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டி முடிக்கப்பட்ட பிறகு, போனது போக, மீதி இருந்த பணிகளைத்தான் ஆட்சி மாறியவுடன் நீங்கள் நிறுத்திவிட்டீர்கள். இப்போது அந்தக் கட்டடம் 'அம்போ' என்று நிற்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் செய்ததற்காக அந்தப் பணியை நிறுத்தவில்லை என்றால், அண்ணா நூற்றாண்டு நூலகம் என்ன ஆனது? அண்ணாவின் பெயரால் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டது. அதையும் மாற்றப் போவதாகச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது சொன்னார்கள். அவர்கள் ஆட்சியைப் போல ஒரு 'அலங்கோலமான ஆட்சி' என்றைக்கும் நடைபெறவில்லை. கட்டி முடிக்காத கட்டடத்தைத் திறந்த பெருமை அவர்களைத்தான் சாரும். ஆகவே, சினிமா செட்டிங்கைப் போட்டு, அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். நாங்களெல்லாம் சட்டமன்றத்திலே இருக்கின்றபொழுது, அங்கே welding செய்கின்றபொழுது நாங்கள் எல்லோரும் வெளியே ஓடி வந்தோம். அந்தக் காட்சியை எல்லாம் அன்றைக்குக் கண்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point point ஆகச் சொன்னார்களே, அதற்கு விளக்கமளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது, ஆண்டு நிதிநிலை அறிக்கையில், Annual Financial Statement–ல் குறியீடுகளில் இருக்கின்ற சில முரண்பாடுகளை, அவருக்கே உரிய பாணியில் இங்கே எடுத்துச்சொன்னார்கள். நான் அதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ள வணிக வரி அளவு 44,007.69 கோடி ரூபாய் என்றும், பட்ஜெட்டில் வணிக வரி அளவு 46,678.10 கோடி ரூபாய் என்றும் தெரிவித்து, ஏதோ அதில் பெரிய தவறு உள்ளதுபோல், அவருக்கே உரிய பாணியில் இங்கே தவறாக திரு. துரைமுருகன் அவர்கள் தெரிவித்தார்கள். வணிக வரி என்பது, வ.எண் 0.0.40–விற்பனை, வர்த்தகம் மீதான வரி; வ.எண் 0.0.42–சரக்குகள், பயணிகள் மீதான வரி; வ.எண் 0.0.45–பண்டங்கள் மீது ஏனைய வரிகளும், தீர்வைகளும்; இந்த 3 இனங்களையும் உள்ளடக்கியதுதான் வணிக வரிமூலம் கிடைக்கும் மொத்த வருவாய். இதில் ஒன்றை மட்டும், அதாவது, வ.எண் 0.0.40 இதை மட்டும் அவர் எடுத்துக்கொண்டு விற்பனை, வர்த்தகம் மீதான வரியை மட்டும் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், Annual Financial Statement–ஐ எடுத்து, 44,007 கோடி ரூபாய் வணிக வரி என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார். இவற்றோடு மற்ற இரண்டு இனங்களையும், அதாவது சரக்குகள், பயணிகள் மீதான வரி 2,336 கோடி ரூபாயையும், பண்டங்கள், பணிகள் மீதான இதர வரி 334 கோடி ரூபாயையும் சேர்த்தால் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 46,678 கோடி ரூபாய் வரும் என்பதைத் தெளிவுபடுத்துகிறேன். எனவே, இந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் சரியாகப் படித்தால், அவருக்கு இந்த ஐயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, TANGEDCO பெற்ற நிதியுதவி பற்றி இங்கே குறிப்பிட்டார். ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பங்கு மூலதனமாக 4,100 கோடி ரூபாய் என்றும், கடன் 2,955 கோடி ரூபாய் என்று உள்ளது என்றும், நிதிநிலை அறிக்கையில் பங்கு மூலதனம் 4,100 கோடி ரூபாய் என்றும், அதில் கடன் 1,455 கோடி ரூபாய் உள்ளது



என்றும், கடனில் 2,955 கோடி ரூபாய்க்கும், 1,455 கோடி ரூபாய்க்கும் உள்ள வேறுபாடான 1,500 கோடி ரூபாய் எங்கே என்று கேட்டுள்ளார். ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 2,955 கோடி ரூபாய் கடன் என்பதில், 1,500 கோடி ரூபாய் ஈடு செய்யப்பட்டு விட்டதால், நிதிநிலை அறிக்கையில் கடன் அளவு 1,455 கோடி ரூபாய் எனக் குறிப்பிட்டுள்ளதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உங்கள் உரையைச் சுருக்கமாக முடியுங்கள். இன்னும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசவேண்டும். அதற்குப் பிறகு நிதியமைச்சருடைய பதிலுரை இருக்கின்றது.

**திரு. துரைமுருகன்:** குற்றம் குறை என்று இல்லை. ஒரு அரசாங்கத்திடம் நாங்கள் முறையிடுகிற விஷயம்தான் இது. நீங்கள் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அதேபோன்று, இங்கே பாவேந்தர் படிப்பகத்தை வைத்திருந்தோம். (குறுக்கீடு) அது இப்போது எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது அவர்களுக்குக் கருத்து சொல்வதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால், இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ளவற்றைப் பற்றிப் பேசாமல், வேறு பொருள் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நிதிநிலை அறிக்கையின்மீது அவர்களுடைய கொள்கையைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னால் பரவாயில்லை. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையை விட்டுவிட்டு, அண்ணா நூற்றாண்டு நூலகம், பாவேந்தர் படிப்பகம் என்று இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறார். ஆகவே, தயவு செய்து இதைத் தொடர்ந்தால் அரசியல்தான் இங்கே பேசிக் கொண்டிருப்பார்கள். அதுதான் அவர்களுக்கு இங்கே இருக்கிற வாய்ப்பு. நிதிநிலை அறிக்கையின்மீது எந்தவிதமான குற்றமும் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** நான் பேசுவது அவ்வளவும் இந்த பட்ஜெட் தொடர்பாகத்தான். ஏனென்றால், பாவேந்தர் படிப்பகம் குறித்தும் சொல்லியிருக்கிறீர்கள்; அண்ணா நூற்றாண்டு நூலகம் குறித்தும் சொல்லியிருக்கிறீர்கள்; மற்றும் திருவள்ளுவர் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறீர்கள்; நிதிநிலை அறிக்கையில் பணம் ஒதுக்குகிறீர்கள். அதற்காகத்தான் நாங்கள் கேட்கிறோம்; 'இது முறைதானா?' என்று. ஒன்றும் வேண்டாம். ** அதுமட்டுமல்ல; இன்னும் ஒன்று. மக்கள் நலப் பணியாளர்கள் குறித்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) அரசாங்கத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று நீங்கள் சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது. ** .

**திரு. துரைமுருகன்:** ** .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் போய் அதைப் பார்த்தீர்களா? (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** ** .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைப் பார்த்தீர்களா? (குறுக்கீடு) இதுபோன்று தவறான தகவலைச் சொல்லக்கூடாது. நீங்கள் தவறான தகவலைக் கொடுக்கிறீர்கள். அது அவைக் குறிப்பிலே ஏறாது.

**திரு. துரைமுருகன்:** அடுத்து, மக்கள் நலப் பணியாளர்கள். மக்கள் நலப் பணியாளர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்...

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. இவர்களுடைய சொந்தப் பிள்ளைகள் அவர்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. வழக்கு இல்லையென்று சொன்னால், அதற்கு என்னால் நல்ல பதிலைச் சொல்ல முடியும். ஆனால், நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. எனவே, தயவு செய்து அதற்குள் செல்ல வேண்டாம் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. எனவே, அதற்குள் போக வேண்டாம். தயவு செய்து நீங்கள் பட்ஜெட் குறித்துப் பேசுங்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நீதிமன்றத்தில் வழக்கு இருந்தால் என்ன? நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதுகுறித்துப் பேச வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார்? வேலையற்ற இளைஞர்களே இல்லாத மாநிலமாக ஆக்குவோம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், வேலையில் இருக்கிறவர்களையே நீக்கி வைத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது separate issue. (Interruption) See, that is a separate issue. This is a separate issue. Don't club both the issues. அந்தப் பொருள் குறித்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது. அதற்குள் போகாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் பட்ஜெட்மீது பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இவர்களுக்கு நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு எந்தவிதமான கருத்தும் கைக்குக் கிடைக்கவில்லை. அப்துல் காதருக்கும், அமாவாசைக்கும் இவர் முடிச்சு போட்டுக் கொண்டிருக்கிறார். தயவு செய்து வேறு கருத்துக்குச் செல்ல வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள். 1–00 மணியோடு உங்களது உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், 'முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கொண்டு வந்தார் என்பதற்காகவே கிடப்பிலே போட்டார்; கிடப்பிலே போட்டார்'

என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே— மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலே—நீங்கள் எதையுமே, எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தைக் கிடப்பிலே போடவில்லையா? எங்கள் அம்மா அவர்கள் கொண்டுவந்த உன்னதமான திட்டம் 'மகளிர் சுகாதார வளாகம்'. ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தை ஒவ்வொரு கிராமத்திலேயும் கொண்டு வந்தார். அந்தத் திட்டத்தைச் செயல்பட வைத்தார்களா? அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். அவர் அதை நடத்த விட்டாரா? சமூக நலத் துறையின் கீழே செயல்பட்டு வந்தது மகளிர் மேம்பாட்டுக் கழகம். அந்த மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கட்டுப்பாட்டில்தான் பெண்களை அதிகமான அளவில் உள்ளடக்கி சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டன. உங்களுக்குப் பின்னால் பெண்கள் ஆதரவு இல்லை என்பதற்காக, அம்மா அவர்களுக்குப் பின்னால் பெண்கள் ஆதரவு இருக்கிறது என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) சுய உதவிக் குழுக்களைக் கொண்டுபோய் மகளிர் மேம்பாட்டுக் கழகத்திலே வேண்டுமென்று இணைத்தார்கள். அப்படி மாற்றவில்லையா? தொட்டில் குழந்தைத் திட்டத்தை எந்தக் காரணத்தினாலே செயல்படுத்தாமல் விட்டார்கள்?

பிற்பகல் 1–00

அதுமட்டுமல்ல; கின்னஸ் சாதனை என்று சொல்லிக் கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களுக்கெல்லாம் லோன் கொடுத்தார்கள். அந்த லோன் கொடுக்கும்போதுகூட, 10 பேருக்குக் கொடுத்துவிட்டு, அவர்களுக்கே மீண்டும் மீண்டும் கொடுத்துக் கொண்டு, அந்தத் திட்டத்தை எல்லாம் ஒரு ஏமாற்றுத் திட்டமாக செயல்படுத்தவில்லையா? எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்தார் என்கிற காரணத்திற்காகவே, அத்தனை திட்டங்களையும் கிடப்பிலே போட்டவர்கள் அவர்கள். என்ன தைரியத்திலே இங்கே வந்து குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக, நம்முடைய நிதிநிலை அறிக்கையில், "முந்தைய ஆட்சியின்



காரணமாக சட்டம்–ஒழுங்கு முழுமையாக இந்த மாநிலத்தில் நாங்கள் ஆட்சிக்கு வருகிறபொழுது சீர்கெட்டு இருந்தது. ஆனால், கடந்த 10 மாதங்களில், நமது மாநிலத்தில் அமைதி நிலவுவதோடு, சட்டம்–ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது" என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். சட்டம்–ஒழுங்கினைப் பொறுத்தவரையில், நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இந்த 9 மாதங்களிலே நடந்த கொலைகள்–386, கொள்ளை–361;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்த அடிப்படையிலே இதைச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், ஏதோ அவர்கள் நடத்திய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சட்டம்–ஒழுங்கு மிக நன்றாகப் பராமரிக்கப்பட்டது போலவும், இப்பொழுது எனது தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகுதான் சட்டம்–ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்பது போலவும் இங்கே பேசி, சில தவறான புள்ளிவிவரங்களையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு உறுப்பினர், தற்போதைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு சீர்கெட்டுள்ளது என்று கூறி, தவறான சில கருத்துகளை இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்ய முற்பட்டு இருக்கிறார். இதில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலிருந்த சட்டம்–ஒழுங்கு சீர்கேடு பற்றியும், தற்போது சட்டம்–ஒழுங்கு சிறப்புறப் பராமரிக்கப்பட்டு வருவது பற்றியும், 24–4–2012 அன்று நடைபெறவுள்ள உள் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது தெளிவாகத் தெரிய வரும் என்றபோதிலும், தற்போது இரண்டு புள்ளிவிவரங்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

2011 ஆம் ஆண்டு, முதல் இரண்டு மாதங்கள், அதாவது, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், அதாவது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 800 burglaries அதாவது, கன்னக்

களவுகள் நடைபெற்றுள்ளன. இந்த ஆண்டு, எங்கள் ஆட்சியில், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஏற்பட்ட கன்னக் களவுகள் 729 தான். அதேபோன்று, murder for gain, அதாவது ஆதாயக் கொலை 2010 ஆம் ஆண்டு, அதாவது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 153 என இருந்தது. 2011 ஆம் ஆண்டு, இது 123 ஆகத்தான் இருந்தது. இது 2011 முழு ஆண்டிற்கான புள்ளிவிவரம் ஆகும். எனவே, தற்போது எனது தலைமையில் நடைபெற்று வரும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** இந்த இடத்தில் எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி அவர்கள் பேசுகிறபோது—இங்கே விளிக்கிறதுதானே சபையிலே பெரிதாக இருக்கின்றது.—அவர் எங்களுடைய சட்டமன்றத் தலைவர், திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை விளிக்கும்போது, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** யார் யாருக்குக் கொடுத்தார்கள் என்று தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதைப்பற்றி நீங்கள் வெளியிலே போய் பேசிக் கொள்ளுங்கள். Then, we have no objection. (குறுக்கீடு) நீங்கள் வெளியிலே போய் இதைச் சொல்வதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவையைப் பொறுத்தவரையில், பட்ஜெட் மீதுதான் பேச வேண்டும். அதுதான் இங்குள்ள நிலை. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள் ** அந்த சொற்றொடர் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நீங்கள் வெளியில் போய்ப் பேசுங்கள். Assembly–யினுடைய precious time–ஐ நான் waste செய்ய விரும்பவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நீங்கள் ** அந்தச் சொற்றொடர்கள் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. வெளியில் போய்ப் பேசிக்கொள்ளுங்கள். நீங்கள் பட்ஜெட்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள்.

பிற்பகல் 1–05

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடிக்க வேண்டாமா? 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விலைவாசியைக் குறைப்பதற்கோ அல்லது கட்டுப்படுத்துவதற்கோ, வேலைவாய்ப்பை (குறுக்கீடு) மைக் கொடுங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் இணைப்பு இருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பை உருவாக்கி, மக்களிடம் வாங்கும் சக்தியைப் பெருக்குவதற்கோ, எவ்விதக் குறிப்பும் இடம் பெறவில்லை. பல உண்மைகளை மறைத்து, சிலவற்றைத் திரித்து, திசை திருப்பும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கடன் சுமை குறையவில்லை, ஆனால், வரிச் சுமை புதிதாக ஏற்பட்டிருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை; வெறும் வார்த்தை ஜாலங்களே நிறைந்து இருக்கின்றன. எனவே, இது ஒரு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, இது ஒரு weight-ஆன Budget : ஆனால், value இல்லாத Budget. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"

என்பார் திருவள்ளுவர். ஒரு சில விஷயங்களை ஒழுங்காகச் சொல்ல முடியாதவர்கள்தான் பல விஷயங்களைப் பேச ஆசைப்படுவார்கள் என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஆகவே, பலவற்றைச் சொல்வதைவிட, ஒரு சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நேரமும் ஆகிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, வளர்ச்சித் திட்டங்கள்பற்றி நிறையப் பேசலாம் என்று இருந்தாலும்கூட கோடிட்டுக் காட்டி, அதற்குப் பிறகு நிதிநிலை அறிக்கை சம்பந்தமான விவரங்களுக்குச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

திரு. அசோக் மேத்தா அவர்கள் Planning Commission துணைத் தலைவராக இருந்தபொழுது, தமிழ்நாட்டுக்கு வந்த நேரத்தில் தமிழ்நாட்டுக்கு என ஓர் முக்கியமான குறிக்கோளை வைத்துச் செயல்பட்டால் முன்னேறலாம் என்று சொன்னார். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு Competitive Advantage இருக்கும் என்று சொல்வார்கள். சிங்கப்பூர் இருக்கிறது. உதாரணத்திற்கு அங்கு எந்த இயற்கை வளமும் இல்லை. ஆனால், உலக வாணிபத்தினிடையே இருக்கின்ற காரணத்தினால், ஆசியாவிலேயே தனி நபர் வருமானம் அதிகமாகப் பெற்றுள்ள நாடு சிங்கப்பூர்தான். அதற்குக் காரணம் அவர்கள் அங்கே எந்தவிதமான வரி விதிப்புக்கும் ஆளாகாமல், உலக வாணிபத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். அதேபோல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இங்கே மற்ற வளங்கள் எப்படி இருப்பினும், மனித வளத்தை நன்கு பயன்படுத்தினால், ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்று அன்றையதினம் திரு. அசோக் மேத்தா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆகையினாலே, அது சம்பந்தமாக இரண்டு துறைகளைப் பற்றி மட்டும் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். ஒன்று கல்வி; இன்னொன்று வேலை; கல்வி என்றும், வேலை என்றும் சொல்கிறபோது, அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள், "Equality is not identity of treatment, but affording equal opportunities. எல்லோரையும் சமமாகப் பாவிப்பது சமத்துவமாகாது. எல்லோருக்கும் சம வாய்ப்பை உருவாக்குவதுதான் சமத்துவமாகும். பணக்காரர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் எல்லோருக்கும் 100 ரூபாய் என்று



கொடுத்தால் அது சமத்துவம் அல்ல. பணக்காரர்களுக்குப் பணம் தேவைப்படாது, ஆனால், ஏழைகளுக்குப் பணம் தேவைப்படும். ஆகவே, சம வாய்ப்பை உருவாக்குவதுதான் உண்மையான சமவாழ்வு சமுதாயம் அமைக்க வழி" என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பிற்பகல் 1–10

அதேபோன்று, அந்த அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறைக்கு பெருமளவு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆனாலும், அதேநேரத்தில் நம்முடைய நாட்டில் இன்றைக்கு என்ன நிலை இருக்கிறது என்றால், பணக்காரர்கள் வீட்டிலே பிள்ளைகளாகப் பிறந்தால் அவர்களுக்கென்று சிறந்த கல்வி கிடைக்கிறது. ஆனால், ஏழைகள் வீட்டில், அதுவும் கிராமப்புறங்களிலே, தொலைதூரமுள்ள இடங்களிலே பிள்ளைகளாகப் பிறந்தால் அவர்களுக்கு அந்த படிப்பு வசதி கிடைப்பதில்லை. இந்தச் சம வாய்ப்பை சரிக் கட்டுவதற்குத்தான் கல்வித் துறை தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதற்காக பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை.

பிறக்கின்ற பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கூடங்களுக்கு வர வேண்டுமென்ற அடிப்படையில் 8 முதல் 14 வயது வரையில் உள்ள அத்தனைபேரும் 100–க்கு 100 பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்படுவார்கள் என்கிற செய்தி நிதிநிலை அறிக்கையில் உள்ளது. ஆனால், அதேநேரத்தில் இன்னும் பல்வேறு இடங்களில் நடைமுறைப்படுத்துகிறபோது எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக்கு வராமல் இருக்கின்றார்கள் என்ற தகவலும் வருகின்றன. குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தேன்கனிக்கோட்டை பகுதியில் 1,394 மாணவர்கள் உள்ள பழங்குடி மக்களிடத்திலே 83 பேர்தான் பள்ளிக்கு வருகின்றார்கள் என்று அண்மையிலே ஒரு ஆய்வு முடிவு வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறையினர் அந்த ஆய்வு சரியா என்று பார்க்கலாம். ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். எங்கேயோ remote places, யாரும் செல்ல முடியாத இடங்களிலே ஒரு சில வீடுகள் இருக்கும். அங்கே ஒரு பள்ளிக்கூடத்தை அமைத்து, ஆசிரியரை நியமித்து அவர்களுக்குக் கல்வி கற்பிப்பது என்பது எளிதான காரியம் அல்ல, செலவும்,

சிரமமும் உள்ளதாகும். ஒரு காலத்திலே கியூபா விடுதலை பெற்றபோது, அந்த நாட்டினுடைய அதிபராக வந்த ஃபிடல் காஸ்ட்ரோ அவர்கள், முதலாக எடுத்துக்கொண்டது, அங்கே உள்ளவர்களை 100–க்கு 100 படிப்பறிவு பெற்றவர்களாக ஆக்க வேண்டுமென்பதுதான். எங்கேயோ நாம் செல்ல முடியாத இடங்களில் இருக்கிற பிள்ளைகளையெல்லாம் சென்றடைவதற்காக படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத இளைஞர்களை part time முறையிலே ஒவ்வொரு பகுதிக்கும் அவர்களை அனுப்பி அங்கேயுள்ள பிள்ளைகளை கல்வி கற்கச் செய்தார் என்ற செய்தியை நான் படித்திருக்கின்றேன். ஆகையினால், ஒரு முழு பள்ளிக்கூடம் வைத்து, ஆசிரியர்களை நியமித்துத்தான் அவர்களுக்குக் கல்வி தர வேண்டுமென்பது இல்லை. உதாரணத்திற்கு மின்சார வாரியத்திலே 100–க்கு 100 மின்சாரம் தர வேண்டுமென்று கருதுகிறபோது, எங்கேயோ இருக்கிற, மலையிலே இருக்கின்ற கிராமங்களுக்குக் கொடுப்பது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. அங்கே எப்படி சோலார் எனர்ஜியை பயன்படுத்துகிறோமோ, அதேபோல நாம் எட்ட முடியாத இடத்திலே இருக்கிற பழங்குடிகள் கற்பதற்கு படித்து வேலையில்லாதவர்களை, பட்டதாரிகளை part time teacher–ஆகப் பயன்படுத்துவதற்கு அரசு ஆலோசிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதை பல நிறுவனங்கள் எடுத்துச் சொல்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அன்றைக்குப் பேசும்போது சொன்னார்கள், அது Pratham என்றாலும் சரி அல்லது இன்னும் மற்ற நிறுவனங்கள் என்றாலும் சரி, அந்த நிறுவனத்தினுடைய தரம் என்ன என்பதைப் பார்த்துத்தான் அதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்; இன்றைக்கு ஏழை வீட்டிலே இருக்கின்றவர்கள்கூட என்ன நினைக்கிறார்கள், தங்கள் பிள்ளைக்கு எப்படியாவது உயர்ந்தத் தரமுள்ள படிப்பைச் சொல்லிக் கொடுக்கின்ற தனியார் நர்சரி பள்ளிகளிலேயோ அல்லது தனியார் பள்ளிகளிலேயோ தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, பள்ளிக் கல்வித் துறையில், கிராமப் பகுதிகளிலெல்லாம் மாணவர்கள் முன்னேற வேண்டும் என்றவொரு கருத்தினைத் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னால் கிராமப் பகுதிகளில் இருக்கிற ஏழையெளிய குழந்தைகள், நடுத்தரக் குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு சட்டமன்றத்திலே எப்போதும் இல்லாத அளவுக்கு 14,552.82 கோடி ரூபாயை ஒதுக்கி, தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிகம் கல்வி கற்ற மாநிலமாக உருவாக வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அதிக நிதியை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

டி.ஆர்.பி. ஆரம்பித்து—கடந்த 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25 ஆண்டுகளில் 1,03,309 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலேயே, அனைவரும் கல்வி கற்க வேண்டும், அனைத்துப் பள்ளிகளுக்கும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பதற்காக, அனைவருக்கும் தரமான கல்வியை வழங்க வேண்டும் என்பதற்காக, இந்த ஆண்டு மட்டும் 53,007–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களை நியமிக்க ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, கிராமப்பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற ஒரு ஆதங்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற மாதம் மத்திய அரசின் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பேசும்போது, அங்கு இருக்கக்கூடிய மத்திய கல்வி அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில்தான் Right to Education Act—கட்டாயக் கல்விச் சட்டம் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது என்று ஒரு பாராட்டையும் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பற்றி அவர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றுகூட செய்தித்தாளில் வந்திருக்கிறது. அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று கன்னியாகுமரியிலிருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று கணக்கெடுப்பு நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தனியார் பள்ளிகளுக்கு இணையாக, அரசுப் பள்ளிகளிலே சேர்வதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை என்று நான் சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் A.B.L., Smart Card, C.C.E., இதுபோன்ற advanced கல்வி முறைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்ற காரணத்தால்தான் அனைத்து முதலமைச்சர்களைக்காட்டிலும் நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் High tech முதல்வர் என்று சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்கு எந்த அளவிற்கு நவீன யுத்திகளைக் கையாண்டு இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கின்ற குழந்தைகளை உருவாக்க முடியுமோ அந்த அளவிற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கல்வித் துறையிலே எந்த அளவிற்கு உன்னிப்பாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இன்னொரு கருத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு சீருடை, காலணி, பென்சில் வழங்குவது வரை, எதுவாக இருந்தாலும் அம்மா அவர்களே பார்த்து தேர்வு செய்கிறார்கள்; தமிழகத்தில் உள்ள எந்த பெற்றோருக்கும் இல்லாத அளவிற்கு அக்கறையோடு, ஒவ்வொன்றாகப் பார்த்து, சரியாக இருக்கிறது என்று சொல்லும் அளவிற்கு, பெற்றோர்களைப் போன்று தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.



**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மண்ணில் பிறக்கின்ற எந்தக் குழந்தையும் வீணாகிவிடக்கூடாது என்கிற நல்ல நோக்கத்தில்தான் இந்தத் திட்டங்களும், கருத்துகளும் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நல்ல நோக்கத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவேண்டும் என்கிற அடிப்படையிலேதான் இந்தக் கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லியிலே கலந்துகொண்ட மாநாட்டைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கபில் சிபல் அவர்கள் தரத்தை உயர்த்தக் கோரியும், மற்றவை குறித்தும் 10 அம்ச திட்டங்கள் குறித்து ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதி இருக்கிறார்கள் என்பதையும் நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையிலே 10 பேர் கொண்ட குழு ஒன்று அமைத்துவிட்டார்களா என்பது தெரியவில்லை. ஆக, இந்தப் பணிகள் எல்லாம் எத்தகைய பயனை வரவழைத்திருக்கிறது? Outlay என்பது ஒன்று. 14,553 கோடி ரூபாய் என்பது outlay. இதை அரசுக்கு இந்த மன்றம் வழங்குகிறது. அதனுடைய outcome என்ன என்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் உயர் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், மாநில அரசுகள் செயல்படுகின்றன. அதேநேரத்தில் வருகின்ற 12–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு 6,000 மாதிரிப் பள்ளிகளை தானே துவக்குவதாகத் திட்டமிட்டிருக்கிறது. இது என்ன நியாயம் என்று புரியவில்லை. ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் இதே மன்றத்தில் சொன்னார். இங்கே வடசென்னை பகுதியிலே ஒரு கால்நடைப் பண்ணையை மத்திய அரசு துவங்கிய நேரத்தில், “4 கோடி மக்கள் என்னை நம்பி தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். ஆனாலும் மாடு மேய்ப்பதற்குக்கூட என்னை நம்பாமல், மத்திய அரசு இங்கே ஒரு கால்நடைப் பண்ணையைத் துவங்குகிறார்கள்” என்று சொன்னார்கள். அதைப்போல மத்திய அரசு இதில் தலையிடவேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை. இந்த நிதியை மாநில அரசுக்கே ஒதுக்கி இத்தகைய மாதிரிப் பள்ளிகளை உருவாக்குவதற்கு மாநில அரசின் சார்பிலே வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

அடுத்து, உயர் கல்வியைப் பொறுத்தவரையிலே ஒரு விசித்திரமான நிலைமை இருக்கிறது. நன்றாகப் படிக்கின்ற மாணவர்கள்கூட ஏழைக் குடும்பத்திலே பிறந்தால் அவர்கள் இன்றைக்கு தனியார் பொறியியல் கல்லூரிகளிலோ, சுயநிதி பொறியியல் கல்லூரிகளிலோ சேர்ந்து படிக்க முடிவதில்லை. ஆனால், பணக்கார வீட்டைச் சேர்ந்தவர் என்றால் ஒரு சராசரி மாணவர்கூட அங்கு படிக்கின்றார். பொறியியல் பட்டம் பெறுகின்றார். மருத்துவர் ஆகின்றார். இதனாலே சமுதாயத்திற்கு இரண்டு வகையிலே தீமை. ஒன்று திறமையான மாணவர்கள் ஏழைக் குடும்பத்திலே பிறந்த காரணத்தினாலேயே அந்த cut-off மார்க்கிற்கு கொஞ்சம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலேயே இன்ஜினியராகவோ, டாக்டராகவோ ஆக முடிவதில்லை. ஆனால், எந்தத் தகுதியும் இல்லாமல் பணம் படைத்தவர் என்ற ஒரே காரணத்திற்காக அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள் பல இலட்சம் ரூபாயை செலவு செய்து தனியார் பொறியியல் கல்லூரிகளிலோ அல்லது மருத்துவக் கல்லூரிகளிலோ சேர்ந்து என்ஜினியர்களாக, மருத்துவர்களாக ஆகின்றார்கள் என்றால் சரியாக விவரம் தெரியாத ஒருவரை என்ஜினியராக, டாக்டராகக் கொண்டு வருவதன்மூலம் நிச்சயமாக சமுதாயத்திற்கு அது கேடு பயக்கும்.

இதிலே இன்னொன்றையும் நான் கேள்விப்படுகின்றேன். சுயநிதிக் கல்லூரிகளில் சுமார் 32,500 ரூபாய் tuition fees-ஆக அரசின் சார்பிலே ஒதுக்குகின்ற இடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது 2006 ஆம் ஆண்டில் என்றும், அதனை 65,000 ரூபாயாக அதிகப்படுத்த வேண்டுமென்று இப்போது கேட்கின்றார்கள் என்றும் அறிகிறேன். தயவுசெய்து இந்த அரசு நன்றாக சிந்திக்க வேண்டும். ஒரு சாதாரண குடும்பத்திலே இருக்கின்றவர்கள் 65,000 ரூபாய் கொடுத்து எப்படிப் படிப்பார்கள்? நாங்களெல்லாம் என்ஜினியர்களாகப் படிக்கின்ற காலத்தில் காலணா செலவில்லை. இந்த capitation fees என்றெல்லாம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க கவுன்சலிங் மூலமாக இடம்



கிடைப்பவர்களுக்கு 32,500 ரூபாய்தான் இங்கே கட்டணமாக உள்ளது. நீண்ட காலமாக ஏற்றப்படாமல் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பின்பு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்தக் கட்டணத்தை உயர்த்த வேண்டாமென்று ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். அதுபோன்று கட்டணம் உயர்த்த வேண்டிய நிலை தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நான் மட்டுமல்ல. சாதாரண குடும்பத்திலே உள்ள அத்தனை பேருமே நன்றி செலுத்துவார்கள்.

அடுத்ததாக, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையிலே connectivity and skill என்று சொல்வார்கள். அவர்களுடைய தொழில் திறமையை வளர்த்துக்கொள்ளவும், அதே நேரத்திலே அவர்களுக்கு வாய்ப்பை உருவாக்குவதும் மிகவும் அவசியம். வேலைவாய்ப்பு அலுவலகத்திலே கிட்டதட்ட 75 இலட்சம் பேர் பதிவு செய்து காத்திருக்கின்றார்கள் என்ற விவரம் சொல்லப்படுகிறது. அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு, அந்தத் திறனை வளர்ப்பதற்கு, அரசு இங்கே Skill Development Mission என்று வைத்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே Special Purpose Vehicle–சிறப்பு நிறுவன அமைப்பு என்ற ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால், அதே நேரத்திலே இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். நம் நாட்டிலே இருக்கக்கூடிய இளைஞர்கள், இன்றைக்கு தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலே பல நாடுகளுக்குச் சென்று வேலைபெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக ஐரோப்பிய நாட்டிலே இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. சீனாவிலேயும் இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அமெரிக்காவிலேயும் அந்த வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, வேலைவாய்ப்பு என்று கருதுகிறபோது உலக நாடுகளிலே எங்கும் செல்லக்கூடிய வாய்ப்பினையும் பெறுகின்ற அளவிலே அவர்களுக்கு பயிற்சியையும், திறனையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, இங்கே படித்துப் பட்டம் பெற்று வருகின்றவர்களிலே 10 சதவீதம் பேர்தான் வேலைக்குத் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள் என்று Aspiring Minds என்ற நிறுவனம் எடுத்துச் சொல்கிறது. ஆகவே, படித்தால் மட்டும் போதாது. அவர்களுக்குரிய திறமைகளை வளர்க்கவேண்டும். பல பொறியியல் கல்லூரிகள் இன்றைக்கு பணத்தை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு எதையோ சொல்லிக் கொடுத்து வெளியே அனுப்பிவிடுகின்றார்களே தவிர, அவர்களை வேலையிலே சேர்த்துக்கொள்கின்ற அளவிற்கு அவர்களுடைய பயிற்சியையும் திறனையும் வளர்த்துக் கொள்வதில்லை. இப்போது இன்ஃபோசிஸ் ஆனாலும், அல்லது டி.சி.எஸ். ஆனாலும், பெரிய பெரிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் என்ன சொல்கின்றார்கள் என்றால், படித்துப் பட்டம் பெற்று வருகின்றவர்களுக்கு தங்களுடைய நிறுவனங்களிலே பயிற்சி கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகையினாலே, தொழில் நிறுவனங்களையும் தொழில் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்துக்கொண்டு, எந்த அளவிற்கு இளைஞர்களின் திறமையை வளர்க்க முடியுமோ அவற்றை வளர்ப்பதற்கு வழி தேட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறுமை ஒழிப்பு என்பதைப் பொறுத்தவரையிலே, வறுமை ஒழிப்புக்கான திட்டங்கள் புதுவாழ்வுத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் என்று பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில், 2002-இல் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமை ஒழிப்பைப் பற்றி திட்டம் போடப்பட்டது. 2007 இல் 10 சதவீதமாகக் குறைப்பது என்றும், 2012 இல் வறுமையை அறவே ஒழிப்பது என்றும் திட்டம் போடப்பட்டது. பிறகு தி.மு.க ஆட்சியில், 2007 ஆம் ஆண்டில் 11–வது ஐந்தாண்டுத் திட்டம் போடுகிறபோது 2012 இல் 17 சதவிகிதம் வறுமை குறைப்புச் செய்யப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் திட்டப்படி 2012 இல் வறுமையை ஒழித்திடவேண்டும். ஆனால், தி.மு.க ஆட்சியின் திட்டப்படி 17 சதவிகிதம் என்று வருகிறது. உண்மையிலேயே வறுமையாளர்கள் நிலை என்ன, எத்தனை பேர் என்ன நிலைமையில் நாம் இருக்கின்றோம் என்பதையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையிலே எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1–25

தொலைநோக்குத் திட்டத்திலே 2023 ஆம் ஆண்டு வறுமை இல்லாத நாடாக தமிழ்நாடு ஆகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நீட்டிப்பது அவசியமா? அதற்குள் விரைவாகவே வறுமையை ஒழிப்பதற்குத் திட்டங்களைத் தீட்ட முடியாதா என்று சிந்தித்து மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

நிதிநிலையைப் பொறுத்தவரையிலே மூன்று அம்சங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, நிதிநிலை என்று சொல்கிறபோது நாம் மாநில அரசை மட்டும்தான் கவனத்திலே கொள்கிறோம். ஆனால், உண்மையில் இந்திய பொருளாதாரம் என்கின்றபோது அதனுடைய ஒரு அங்கமாகத்தான் தமிழ்நாடு இருக்கிறது. மத்திய, மாநில நிதி உறவுகளைப் பற்றி இந்த மன்றத்திலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடக் காணோம். அவற்றைப் பற்றி ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சமூகப் பொருளாதார வளர்ச்சி முழுவதும் மாநிலங்களின் பொறுப்பு. ஆனால், வரி போட்டு வசூலிக்கக்கூடிய வாய்ப்பு மத்திய அரசுக்கு. ஏனென்றால் துறைமுகங்கள், மற்ற வரி என போட்டு அவர்கள் எளிதில் வசூலிக்கமுடியும். ஆகவே, அரசியல் சட்டத்தில் வரி இனங்களை எல்லாம் மத்திய அரசுக்குத் தந்தார்கள். ஆனால், வசதி ஏற்படுத்தும் பொறுப்பினை மாநிலங்களுக்குத் தந்தார்கள். வரியை வசூலிக்கக்கூடிய மத்திய அரசு மாநிலங்களுக்கு அந்த வருவாயைப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். ஆனால், வரியை வசூல் செய்கின்ற அதிகாரத்தை அவர்களிடத்திலே கொடுத்ததனாலே அவர்களே, செலவு செய்து விட்டு மிச்சம் இருந்தால்தான் மாநிலங்களுக்கு என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எப்படி காவிரி ஆற்றிலே வருகிற தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டு மிச்சம் இருந்தால்தான் கர்நாடகம் நமக்கு விடுகிறதோ, அதைப்போல மத்திய அரசு வரி வருவாயை, அதிகாரங்களை அவர்கள் வசூலிக்க எளிதாக இருக்கும், திறமையாக வசூலிக்கமுடியும் என்று கருதுகின்ற காரணத்தினாலே கொடுத்த அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் நிதியை

வசூலிக்கின்றார்கள். ஆனால், அதேநேரத்திலே போதிய நிதியை மாநிலங்களுக்கு ஒதுக்கி வளர்ச்சிப் பணிகளுக்கு அவர்கள் அதைச் செலவிட வாய்ப்பு ஏற்படுத்துவதில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால், 2004–2005 ஆம் ஆண்டு நிலவரப்படி வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில், இந்தியா முழுவதும் உள்ள வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநிலங்களின் பங்கு 60.8 சதவிகிதம். ஆனால், அதேநேரத்திலே மொத்த வருவாய் இனங்களில் மாநிலங்களின் பங்கு 38 சதவிகிதம்தான். 60.8 சதவிகிதப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை மாநிலங்களிடத்திலே சுமத்தி, அவர்களுக்கு 38 சதவிகிதம்தான் 2004–2005 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் 13–வது நிதிக் கமிஷனில் அது 32 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இதனுடைய விளைவாக, மாநிலங்களுக்கு வரவேண்டிய வருவாய்கள் வராததன் விளைவாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், மாநிலங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாமல் இங்கே வரிகளை உயர்த்துவதும், கட்டணங்களை உயர்த்துவதும், வேறு வழிகளிலே தங்களுடைய நிதியாதாரங்களைத் திரட்டுதலுமான பெரும் சுமை ஏற்பட்டிருப்பதற்கு மத்திய அரசின் இந்தப் போக்கு காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல, கடந்த பட்ஜெட்டில் சில தினங்களுக்கு முன்னாலே மத்திய அரசு அறிவித்த பட்ஜெட்டில் வரி வருவாய், நிறுவனங்களிடமிருந்து, பணக்காரர்களிடமிருந்து வரவேண்டிய வரி வருவாயில் இவர்கள் கணிசமாக அதில் சலுகை காட்டியதன் விளைவாக 5 இலட்சத்து 29 ஆயிரம் கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. 5 இலட்சத்து 29 ஆயிரம் கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த வரியை வசூலித்திருந்தார்களேயானால் அதிலே நமக்கு பங்கு வந்திருக்கும். ஆனால் அந்தப் பங்கு வராமல் போயிற்று. அந்தச் சலுகைகளை அவர்கள் தருகிறபோது மாநிலத்திற்கு வரவேண்டிய வருவாயை எடுத்து அவர்கள் பணக்காரர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சலுகையாக அளிப்பதன்மூலம் நமக்கு வரவேண்டிய வருவாய், போதுமான நிதியாதாரம் இதனாலேயே தவிர்க்கப்படுகிறது. ‘கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல’



என்று சொல்வார்களே, அதைப்போல இங்கே மாநிலங்களுக்கு வரவேண்டிய வருவாயை எடுத்து Corporate Tax அல்லது Income Tax அல்லது Excise போன்ற வழிகளிலே அவர்கள் 5 இலட்சத்து 29 ஆயிரம் கோடி ரூபாய்க்கு சலுகை என மத்திய அரசினுடைய பொருளாதார அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசினுடைய வரி வருவாய் 10,77,612 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 10.77 இலட்சம் கோடி ரூபாய். மாநிலங்களுக்கு பங்கு 3 இலட்சம் கோடி ரூபாய்தான். இந்த 5 இலட்சம் கோடி ரூபாயும் சேர்ந்திருக்குமேயானால் மாநிலங்களின் பங்கு அதிகரித்திருக்கும். இதனுடைய விளைவைப் பார்க்கிறபொழுது மிகவும் ஆச்சரியமாக இருக்கும். மத்திய அரசிடத்திலே இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்கள் கொடுத்திருப்பது உதவியாக, வரியிலே இருந்து பங்கு 15 ஆயிரத்து 32 கோடி ரூபாய். ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னாலே இங்கே இருக்கிற Income Tax Officer ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார்; target–க்கு மேலாக 33 ஆயிரத்து 657 கோடி ரூபாய் சென்னையிலே வசூல் செய்திருக்கிறார். சென்னையிலே வசூல் செய்ததை இங்கேயே கொடுத்திருந்தால் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு இன்றைக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது. அது டெல்லிக்கு போய் வருகின்ற காரணத்தினாலே 33 ஆயிரத்து 657 கோடி ரூபாய், 15 ஆயிரத்து 32 கோடி ரூபாய் என்று ஆகிவிட்டது. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் உரையை முடிக்கவில்லையே!

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. தங்கள் உரையைச் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் வேகமாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். அப்படியும் நேரமாகிக்கொண்டே இருக்கிறது. அதேபோல Centrally sponsored schemes. (குறுக்கீடு) கருத்துரை மட்டும் சொல்லிவிடுகிறேன். Centrally sponsored schemes 11–வது திட்டக் காலத்திலேமட்டும், 147 திட்டங்கள் 6.6 இலட்சம் கோடி ரூபாய் மத்திய அரசு திட்டம் போட்டு மாநிலங்களைச் செய்ய வைக்கின்றார்கள். அண்மையிலே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒருசில திட்டங்களை மட்டும் வைத்துக்கொண்டு, இதர

திட்டங்களை மாநிலங்களின் பொறுப்பிலேயே விட்டுவிடுவதுதான் சிறந்தது என்று திட்டக் குழு உறுப்பினர் திரு. சதுர்வேதி அவர்களின் அறிக்கை கூறுகிறது. இதை உடனடியாக நிறைவேற்றுவதன்மூலம் மாநிலங்கள் கூடுதலாக நிதி உதவி பெறமுடியும். மாநிலங்களுக்கு இடையேயான மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்று ஏற்கெனவே பாதியாகக் குறைக்கப்பட்டது. இந்த இழப்பீட்டைச் சரி செய்ய மத்திய அரசு ஒப்புக்கொண்டது. ஆனால் தமிழ்நாட்டிற்குரிய தொகை இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்று அறிகிறேன். இதுபற்றிய விவரத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக்க கேட்டுக்கொள்கின்றேன். மத்திய அரசினுடைய இந்தப் போக்கின் காரணமாக மாநிலங்களுக்குரிய நிதிப் பங்கினைப் பெற முடியாமல் போகிறது.

தமிழக அரசின் நிதிநிலையைப் பொறுத்தவரையிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு இந்த ஆண்டு 45,940 கோடி ரூபாய்க்கு வரி விதித்தும், இரயில்வே சரக்கு மற்றும் பயணிகள் கட்டண உயர்வின்மூலம் சுமார் 20,000 கோடி ரூபாய் கூடுதலாக வருமானம் பெறவும் நடவடிக்கை எடுத்துள்ளது. டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றின் மானியங்களை 24,901 கோடி ரூபாய் அளவுக்குக் குறைக்க உள்ளது. இவற்றின் விலை உயரும். உரத்திற்குத் தரப்படும் மானியம் ரூ.7,000/– கோடி குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. யூரியா போன்ற உரங்களின் விலை உயரும் எனத் தெரிகிறது. கூடுதல் வரி விதிப்பும், மானியங்களின் குறைப்பும் இந்த ஆண்டு விலைவாசியை 3 முதல் 4 சதவிகிதம் அதிகரிக்கும். உலகின் பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியாவில்தான் விலைவாசி உயர்வு முதலிடத்தில் உள்ளது. அதாவது, ஓரளவிற்கு பெரிய பொருளாதார நாடுகளில் உலகத்திலேயே இந்தியாவிலேதான் விலைவாசி முதலிடத்தில் உள்ளது என்று யேல் பல்கலைக்கழகப் பொருளாதாரப் பேராசிரியர் ராகேஷ் மோகன் அறிவித்துள்ளார். ஆகவே, எந்தச் சூழ்நிலையிலே இந்த நிதிநிலை அறிக்கையை தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது என்றால் மத்திய அரசினுடைய பட்ஜெட், அதனுடைய விளைவுகள், விலைவாசியை ஏற்றப்போகின்றன. இந்தச் சூழ்நிலையில் மாநில அரசு கூடுதலாக 1,500 கோடி ரூபாய்க்கு வரிகளை விதித்துள்ளது. மேலும், முத்திரைத் தீர்வை, மற்றவற்றையெல்லாம் போட்டிருக்கிறது. 2010–2011 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.47,782 கோடியாக இருந்த வரி வருமானம்,



2012–2013 ஆம் ஆண்டில் ரூ.70,548.70 கோடியாக உயரவுள்ளது. இதனுடைய விளைவு இந்தியாவிலேயே தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் வரி கட்டுவதில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது என்று கருதுகிறேன். Per capita Tax effect என்று சொல்வார்கள். அதாவது தனி நபர் வருமானம், அதிலே எவ்வளவு வரி செலுத்துகிறார்கள் என்று. அந்த அளவுக்கு தமிழ்நாடு துரத்தப்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இன்றைக்குள்ள மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கை.

பிற்பகல் 1–35

மாநில அரசும் வரி விதிக்க வேண்டும்——இங்கே பேசும்பொழுதுகூடச் சொன்னார்கள். வரி விதிக்கக் கூடாது என்பது அல்ல; Tap the rich and pat the poor என்று சொல்வார்கள். வசதி உள்ளவர்களுக்கு வரி போட்டு, வறியவர்களுக்கு வசதி செய்வது தவறல்ல. ஆகவே, வரியே விதிக்கக் கூடாது என்பது அல்ல. ஆனால் எங்களுக்கு இருக்கின்ற கவலை எல்லாம், நமக்கு வரவேண்டிய வருவாய் இனங்கள் வராத காரணத்தினாலே தமிழ்நாட்டு மக்கள் கூடுதலாக வரி செலுத்துகின்ற நிலைமை ஏற்பட்டு வருகிறதோ என்பதுதான். நீங்கள் அதை இந்த நேரத்திலே உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்வார்கள் price stability—விலைவாசி ஒரே சீராக இருந்து பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே போகுமேயானால் வாழ்க்கைத் தரம் உயரும். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். இரண்டே கருத்துகள்தான்; இதோ முடிந்துவிட்டது. விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறபொழுது ஏற்கெனவே அவர்களுக்கு வருமான ஆதாரங்கள் இல்லையென்றால் வாழ்க்கைத் தரம் குறையும். ஆகவே முதலிலே இருப்பது price stability. இன்றைக்கு அவர்கள் போட்டிருக்கின்ற வரி விதிப்பானாலும் சரி, மத்திய அரசினுடைய வரி விதிப்பானாலும் சரி, மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்குகின்ற காரணங்களினாலும் சரி இவற்றால் விலைவாசி உயர்வதற்கு வாய்ப்பு உண்டு. இத்தகைய வருமானத்தை ஈடு செய்வதற்கு மத்திய அரசு வரி போடலாம், கடன் வாங்கலாம், ரூபாய் நோட்டுக்களை அச்சடிக்கலாம். மாநில அரசு அதேபோல வரி போடலாம், கட்டணங்களை உயர்த்தலாம். ஆனால், சாதாரண குடும்பஸ்தர்கள் எங்கே போவது? அவர்களுடைய குடும்பத்திலே

நிதிநிலையிலே ஏற்படக்கூடிய பற்றாக்குறையை எப்படி ஈடுகட்டுவது? அவர்கள் பஸ்ஸில் போகாமல் இருக்க முடியுமா? பால் வாங்காமல் இருக்க முடியுமா? மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் இருக்கமுடியுமா? ஆகையினாலே அந்த நிறுவனங்கள் நஷ்டத்திலே இயங்கவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அதேநேரத்திலே இந்த வரி விதிப்புகளை உயர்த்துகிறபொழுது ஒரு formula சொல்வார்கள், what the traffic can bear- எவ்வளவு அவர்கள் தாங்குவார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூட பத்திரிகைகளிலே அடிக்கடி சொல்கிறார்கள், வாங்கும் சக்தி இப்பொழுது இருக்கிறது என்று. வாங்கும் சக்தி முக்கியமல்ல. மக்களுடைய தாங்கும் சக்திதான் முக்கியம், What the traffic can bear and not the purchasing power. வரி போடுவது நியாயமாக இருக்கலாம். ஆனால் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். ஆகையினாலே எந்த அளவிற்கு அவர்கள் தாங்க முடியுமோ அந்த அளவுக்குத்தான் வரிச் சுமை இருக்க வேண்டும், கட்டணச் சுமை இருக்க வேண்டும். ஆகவே இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நிதி அமைச்சருடைய பொறுப்பு என்பது சமையல் வேலையைப் போல. அவர் சிறப்பாகச் சமையல் செய்தாலும் அது நன்றாக இருக்கிறதா, இல்லையா என்று சாப்பிடுகிறவர்கள்தான் சொல்லவேண்டும். சில பேர் காரமாக இருக்கிறது என்பார்கள், காரம் போதாது என்று சில பேர் சொல்வார்கள், சில பேர் புளிக்கிறது என்று சொல்வார்கள், சில பேர் உப்பு குறைவாக இருக்கிறது என்று சொல்வார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நல்ல சமையலைக்கூடச் சொல்லிவிடுவார்கள். ஆனாலும், இந்த நாட்டு மக்கள் இந்த பட்ஜெட்டைப் பற்றி என்ன சொல்கிறார்களோ அதுதான் அந்த சமையலுக்கு சிறந்த தீர்ப்பு. சுவைக்கின்ற அந்த வாய்ப்பு நாட்டு மக்கள் கையிலேதான் உள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்களின் நல்ல தீர்ப்புக்கே நாங்கள் விட்டுவிடுகிறோம். அவர்கள் எல்லாம் இன்று எதிர்பார்ப்பது எப்படி மின் வாரியத்திலே கட்டணக் குறைவு எல்லாம் ஏற்பட்டதோ, அதைப்போல மற்ற கட்டணங்களையும் குறைப்பதற்கு, வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதற்கு வழிவகை காணவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தங்க மணி விளக்கு! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளியோர் இதயமெல்லாம் மகிழ்ச்சி பொங்க வைக்கும் எங்கள் குல விளக்கு! ஒன்றரைக் கோடி தொண்டர்களை உயிர்த் துடிப்புடன் இயங்க வைக்கும் கழகத்தின் இதயத் துடிப்பு! மைனாரிட்டி தி.மு.க.வின் தாழ்ச்சி மிக்க சுயநல ஆட்சியால், (மேசையைத் தட்டும் ஒலி) வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியூட்டி விசையொடிந்த நிருவாகத்தை நிமிர்த்திக் காட்டி, நெறி புரண்ட காவல் துறையை நேராக்கி, நிலை குலைந்த நிதி நிலையைச் சீராக்கி, துறைகள் தோறும் செயல்திறனைக் கூராக்கி, மக்கள் நலம் பேணி, மக்கள் நலம் காத்து, மக்கள் நலம் போற்றி, மக்களுக்காக மக்களாட்சி நடத்தும் மக்கள் தலைவி! மக்கள் போற்றும் மகத்தான தலைவி! (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வ சக்தியின் ஆசியோடு, மக்கள் சக்தியின் துணையோடு, வெற்றி மேல் வெற்றியே பெறும் வெற்றித் தாயின் செல்ல மகள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் வெற்றித் திருமகள்! சவால் விடும் எதிர்க்கட்சிகள், சினம் கொண்ட சிங்கத்தின் முன் நிற்கும் தகுதி படைத்த மதங்கொண்ட யானைகள் அல்ல! அவை மருண்டோடும் குள்ள நரிகளே என நிரூபித்துவிட்டுப் போய்க்கொண்டிருக்கின்றனர், என நிரூபித்துக் காட்டிய வீரத்தின் விளைநிலம்! பூகோளப் பாடத்தில் வேண்டுமானால் இந்தியாவின் தலைநகர் டெல்லி என்று இருக்கலாம்! ஆனால், அரசியல் வரைபடத்தில் இந்தியாவின் தலைநகர் இனி சென்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போவது எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே (மேசையைத் தட்டும் ஒலி) என உலகமே எதிர்நோக்கும் உன்னதத் தலைவி, உத்தமத் தலைவி! எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களை வணங்கி, எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் நாள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தோம். அதற்குப் பிறகு, ஏழு மாத இடைவெளியில் இரண்டாவது நிதிநிலை அறிக்கையை கடந்த 2012 மார்ச் மாதம் 26 ஆம் நாளன்று பாரம்பரியம் மிக்க இந்தப் பேரவையில் தாக்கல் செய்துள்ளோம்.

தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் மகத்தான வெற்றியைப் பெற்று 16–5–2011 அன்று ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, மக்களுக்கு தேர்தல் சமயத்தில் அளித்த பல்வேறு வாக்குறுதிகளை திட்டங்களாகத் தீட்டி, முதல் நிதிநிலை அறிக்கையிலேயே வழங்கியுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். செயல்படுத்த முடியாத திட்டங்கள் என்று ஒரு சிலரால் கூறப்பட்ட பல திட்டங்களுக்குக்கூட செயல்வடிவம் கொடுத்து வெற்றிகரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள் என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது இரண்டாம் முறையாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சிறப்பின் சிகரமாக 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாளன்று இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

ஆயிரம் காடுகளை உருவாக்கும் ஆற்றல் ஒரு விதையில் இருக்கிறது. ஆயிரம் நன்மைகளை உருவாக்கும் ஆற்றல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் மட்டும்தான் இருக்கிறது என்பதை இந்த உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது.

தமிழக அரசின் இந்த நிதிநிலை அறிக்கை குறித்து பல்வேறு செய்தித்தாள்கள் சிறப்பாக செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கை பற்றி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், வல்லுநர்கள், தொழில் கூட்டமைப்புகள் என பல்வேறு தரப்பினரும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். ஆக்கபூர்வமான விமர்சனங்களைத் தந்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் உருவாக்கப்பட்டு அவர்களது



நல்லாசிகளோடு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை நாடு பாராட்டிக்கொண்டிருக்கிறது. நல்லவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாணவர்கள், மீனவர்கள், விவசாயிகள், நெசவாளிகள், அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள், பொருளாதார வல்லுநர்கள், தொழிலாளர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், காவல் துறையினர், தமிழ் அறிஞர்கள், இலங்கை அகதிகள், தாய்மார்கள், இளைஞர்கள், முதியோர் என்று எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், தொழில் துறையில் முன்னேற்றம், விவசாயத்தில் வளர்ச்சி, கல்வியில் மேம்பாடு, வேலைவாய்ப்பில் முன்னுரிமை, நீர்வள பெருக்கம், குடிநீர் பாதுகாப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு, புதிய சாலைகள் அமைப்பு, உணவுப் பாதுகாப்பு, மின் உற்பத்திக்குத் தனிக் கவனம், தீயணைப்பு மீட்புப் பணியில் தீவிரம், காவல் துறைக்குக் கம்பீரம், திருக்கோயில் புனரமைப்பு, கோயில்களில் அன்னதானம் என்று, அறிவிக்காத திட்டங்களே இல்லை. அரசு ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும் கடன் உதவி, கூட்டுறவில் வீட்டுக் கடன் பெற்றவர்களுக்கு வட்டி நிவாரணம் போன்ற பால்வார்க்கும் திட்டங்களுக்குப் பஞ்சமே இல்லை.

குழந்தை அழுதால் துடிக்கின்ற தாய்போல தமிழன் அழுதால் துடிக்கின்ற தாயாக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் தாழ்ந்தால் தவிக்கின்ற தாயாக, தமிழகத்தைத் தலை நிமிர வைக்கின்ற தாயாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பது இந்த நிதிநிலை அறிக்கை மூலம் நிரூபணமாகிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் குறை ஏதும் காண முடியாத நிலையில், ஒரு சிலர் மட்டும், ஏதாவது குறை கூறியாக வேண்டுமே என்ற அரசியல் காரணங்களுக்காக சில கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் தேதி முதல் இம்மாமன்றத்தில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று வரை 37 பேரும், இன்று 3 பேரும், ஆக மொத்தம் 40 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரும் சில கருத்துகளை இங்கே தெரிவித்திருக்கின்றார். நிதிநிலை அறிக்கைமீது தங்களது

ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, மக்களுக்கு அளித்த பெரும்பாலான வாக்குறுதிகளை ஏற்கெனவே நிறைவேற்றியுள்ள நிலையில், மாநிலத்தை உறுதியான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நோக்குடன் இந்த இரண்டாவது நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு கவனமுடன் வகுத்து அளித்துள்ளோம்.

பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கம் Faster, Sustainable and More Inclusive Growth என்பதுதான். அதாவது துரிதமான, நீடித்து நிலைக்கக்கூடிய, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய விரிவான வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதுதான் நமது நோக்கம். இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த நிதிநிலை அறிக்கையும் வகுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2012 மார்ச் திங்கள் 22 ஆம் நாளன்று தமிழகத்தின் தன்னிகரற்ற தனிப்பெரும் திட்டமான "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023"–ஐ வெளியிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம், ஏதோ சம்பிரதாயத்திற்காக வடிவமைக்கப்பட்ட திட்டம் அல்ல. தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றியமைக்கவும், துரிதமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தெளிந்த சிந்தனையில் வகுக்கப்பட்ட திட்டம்தான் 'தொலைநோக்குத் திட்டம்–2023.'

பிற்பகல் 1–45

தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்க வேண்டும்; வேறு மாநிலங்களுக்கெல்லாம் முன்னிலையில் தமிழகத்தை நிறுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உருவான உன்னதமான இலட்சியத் திட்டம்தான் 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023.'



ஆனால், இவ்வாறு இலட்சியத்துடன் செயல்படுவதை திரு. கருணாநிதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த மன எரிச்சலில் தொலைநோக்குத் திட்டத்தை, பூஜ்ஜியத்தில் ஒரு ராஜ்ஜியம் என்று ஏகடியம் செய்திருக்கிறார். திரு. கருணாநிதி நாட்டு அரசியலைக் கண்டு கொள்ளாமல், வீட்டு அரசியலில் கவனம் செலுத்தியதால், போணியாகாத திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதி, முன்காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்த காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) "வில்வப் பழம் தின்பார் பித்தம் போக, பனம்பழம் தின்பார் பசி போக" என்ற கதையாக பரவசமான பாராட்டு விழாக்களில் மட்டுமே மனம் லயித்து அனுபவித்துக்கொண்டிருந்த காரணத்தால், தமிழகத்தின் முன்னேற்றம் பற்றியோ, தமிழர்களின் நலன் பற்றியோ, சிறிதும் கவனம் செலுத்தாமல் தமிழ்நாட்டையே பூஜ்ஜியமாக்கி விட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மீண்டும் பூஜ்ஜியத்தை ராஜ்ஜியமாக்கும் பொறுப்பை மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பூஜ்ஜியத்தில் இருந்துகொண்டு ராஜ்ஜியத்தை ஆள்பவன் என்று இறைவனைத்தான் சொல்வார்கள். அந்த இறைவனின் பரிபூரண அருளைப் பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பூஜ்ஜியத்தை வைத்து ஒன்றைப் பத்தாகவும், பத்தை நூறாகவும், ஆயிரமாகவும், இலட்சமாகவும், கோடியாகவும் மாற்றும் வல்லமை பெற்றவர். எனவே, கஜானாவைக் காலியாக்கி திரு. கருணாநிதி ஏற்படுத்திய பூஜ்ஜியத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ராஜ்ஜியமாக மாற்றுவார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023'–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளையும், அதை எட்ட வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளையும் பரிசீலித்து, படிப்படியாக எண்ணற்ற திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் நிறைவேற்றப்பட உள்ளன. அவற்றில், ஒருசில அம்சங்களை நமது வரவு–செலவுத் திட்டத்திலும் கொண்டு வந்துள்ளோம்.

இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் தமிழகத்தை வறுமையற்ற மாநிலமாக ஆக்குவதே. இவ்வாறு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஏப்ரல் 4

வறுமையற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றியமைக்க வேண்டும் எனில், inclusive growth, அதாவது அனைவரையும் உள்ளடக்கக்கூடிய வகையில் பொருளாதார வளர்ச்சி எட்டப்பட வேண்டும். அதற்கு நன்கு வடிவமைக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்; வேலைவாய்ப்பை பெருக்கக்கூடிய வகையில் தொழில் துறை, விவசாயம் போன்ற முதன்மைத் துறைகளின் வளர்ச்சி வலுப்படுத்தப்பட வேண்டும்; கல்வி, சுகாதாரம் போன்றவை மேம்படுத்தப்படவேண்டும்; படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டும்; உடல் நலம் குன்றியோர், வேலை செய்ய இயலாதவர், புறக்கணிக்கப்பட்ட முதியோர், வருமானம் ஈட்ட முடியாத மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்மூலம் போதிய உதவித் தொகை வழங்கப்படவேண்டும்; இவற்றை எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை தாங்கி வந்துள்ளது என்பதை இங்கே மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

உதாரணமாக, கிராமப்புறங்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு திட்டங்களைப் போன்று, 200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் புதியதாக தொடங்கப்படவுள்ள நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம்; மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் சரிநிகர் வளர்ச்சியை எட்ட 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் புதியதாகத் தொடங்கப்படவுள்ள மாநில சரிநிகர் வளர்ச்சி நிதித் திட்டம்; மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 206 கோடி ரூபாய் ஒதுக்கீடு; இளைஞர்களிடையே தொழில் திறனை வளர்க்க திறன்வளர் பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு; ஏழைகள் உடல் நலம் பேண முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு; முதியோர், விதவைகள் போன்ற ஆதரவற்றவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இதுவரை இல்லாத அளவாக 3,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு; இப்படி வறுமையை ஒழிப்பதற்கான பல்வேறு கூறுகளை ஆராய்ந்து அவற்றை சீர்செய்யும் நோக்குடன் திட்டங்களைக் கவனமுடன் வகுத்துள்ளோம்.



2012 ஏப்ரல் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 1–50

சமூகத்தில் பின்தங்கிய மக்களை வளர்ச்சிப் பாதையில் ஒருங்கிணைக்க ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, முன் எப்போதும் இல்லாத அளவாக, மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 21.82 சதவீதமாக அதாவது 6,109 கோடி ரூபாய் ஒதுக்கீடு; பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 1.25 சதவீதமாக 349 கோடி ரூபாய் ஒதுக்கீடு; பழங்குடியினருக்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு புதிய மேம்பாட்டுத் திட்டம்; ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை என பல்வேறு திட்டங்களை இங்கே எடுத்துச் சொல்லமுடியும். ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், இதுவரை எந்த அரசும் செய்யாத அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் சமூக–பொருளாதார நிலையில் உயர்ந்திட வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வகையிலும் அவர்கள் மேம்பட்டு நிற்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, சென்ற ஆட்சியில் வேறு திட்டங்களுக்கு திருப்பிவிடப்பட்டதாக இங்கே மாமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது தலைமையிலான இந்த அரசு ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கும் நிதியின் முழுப் பயனும் ஆதி திராவிடர்களையே சென்று அடைவதை உறுதி செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் நலனுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது அரசு உரிய முக்கியத்துவம் வழங்கும் என்பதற்கு, ஆதி திராவிடர் துணைத் திட்டத்தில் 2010–2011 ஆம் ஆண்டில், அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 19 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், 2012–2013 ஆம் ஆண்டில் 21.82 சதவிகிதம் ஒதுக்கியுள்ளதே சான்றாகும். இவையெல்லாம், பொருளாதார வளர்ச்சியில் ‘Inclusive Growth’ என்று சொல்லப்படுகின்ற அனைவரையும் உள்ளடக்கிய, அனைவரும் பயன்பெறத்தக்க வளர்ச்சியை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் முதன்மைத் துறையின் வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயம், கால்நடைத் துறை, மீன் வளம், வன வளம், கூட்டுறவு, நீர் வளம் போன்ற துறைகளை உள்ளடக்கிய முதன்மைத் துறைக்கு மொத்தமாக 2010–2011 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு, அதாவது தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் 2010–2011 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 5,674.27 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இதற்கான ஒதுக்கீடு 9,942.25 கோடி ரூபாய் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இது 2010–2011 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைக் காட்டிலும் 75 சதவீதம் கூடுதல் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கட்டமைப்பு மேம்பாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023', தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார கட்டமைப்புகளை மேம்படுத்தி, வேகமான வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் தீட்டப்பட்ட ஒரு திட்டமாகும். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தில் அடுத்த 11 ஆண்டுகளில், 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கட்டமைப்புக்கு முதலீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துவிட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் 1,000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது என சில மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023', பதினொரு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாகும். இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விரிவானதொரு அறிக்கையை இந்த மாமன்றத்தில் அளித்து, எப்படி இந்த முதலீடுகள் திரட்டப்படும் என்பது குறித்து எழுப்பப்பட்ட சந்தேகங்கள் அனைத்திற்கும் விளக்கம் அளித்துள்ளார்கள்.

இன்று தமிழகத்தில் முக்கிய பிரச்சனையாகக் கருதப்படும் மின் பற்றாக்குறையைச் சீர்செய்ய மின் வசதியை மேம்படுத்துவது போன்ற திட்டங்களுக்குத்தான் இந்தத் தொலைநோக்குத் திட்டத்தில்கூட 4.5 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட



உள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இந்த முதலீடு, அரசு மூலமாக மட்டுமல்லாது, அரசு–தனியார் பங்களிப்பு, மத்திய அரசு முதலீடு, தனியார் முதலீடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும். தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை நோக்கங்களை எட்டுவதற்காக விரைவிலேயே புதிய திட்டங்கள் கொண்ட தொகுப்பு அறிக்கை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும்போது, தற்போது தொடக்கமாக ஒதுக்கப்பட்ட இந்த 1,000 கோடி ரூபாய் போதாது என்றால், மேலும் எவ்வளவு நிதி தேவையோ அத்திட்டங்களுக்கேற்ப அவற்றை ஒருங்கிணைத்து ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தயாராகவே உள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விவரங்களை மீண்டும் இங்கே குறிப்பிட்டுக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் தான் முன்னிறுத்திய இந்தப் பணிகள் அனைத்தையும் செய்து முடிக்கவல்லது என்பதை இது தெளிவுபடுத்தும். தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்திற்கு தொடக்க நிதியாக 1,000 கோடி ரூபாய்; நெடுஞ்சாலைத் துறைக்கு 5,251 கோடி ரூபாய்; 3,000 புதிய நகரப் பேருந்துகள் வாங்க 545 கோடி ரூபாய்; மோனோ ரயில் திட்டம், மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய்; தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு 1,500 கோடி ரூபாய் பங்கு மூலதனம்; மின் பகிர்மான வசதிகளை மேம்படுத்த 3,573 கோடி ரூபாய்; நகர்ப்புறங்களில் ஏழை நடுத்தர மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த தளப் பரப்பளவு குறியீடு தளர்த்தும் திட்டம்; 750 கோடி ரூபாய் செலவில் கிராமப்புறங்களில் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தும் THAI திட்டம்; 1,250 கோடி ரூபாய் செலவில் இரண்டு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள்; மதுரை நகரில் கட்டமைப்பை மேம்படுத்த 250 கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு என பல்வேறு திட்டங்களை இங்கே குறிப்பிடலாம்.

பிற்பகல் 1–55

அடுத்து, நிதி மேலாண்மை. சிறந்த நிதி மேலாண்மைமூலம் அரசின் நிதி நிலையை உறுதிப்படுத்த பல்வேறு முயற்சிகளை இந்த நிதிநிலை அறிக்கை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசும்,

பல்வேறு மாநில அரசுகளும் நிதிநிலைக் குறியீடுகளைப் பின்பற்ற இயலாமல் தடுமாறி வரும் நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி நிலையில் ஒரு வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ள இந்த முயற்சி ஒரு வெற்றிப் பாதையின் தொடக்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் அரசு கடன் வாங்கக் கூடாது என்றும், நிதிப் பற்றாக்குறை உள்ளது என்றும் குறைகூறிப் பேசியுள்ளார்கள். மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் 'Deficit Financing' என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய ஓர் உன்னதக் கருவி என்று உலகப் புகழ்மிக்க பொருளாதார மேதைகள் எல்லாம் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், வளர்ச்சிப் பொருளாதாரத்தின் நிபுணராகக் கருதப்படும் J.M.Keynes அவர்களும் 'Deficit Financing' முறையைக் கையாளவேண்டும் என்றும், குறிப்பாக, பொருளாதாரம் மந்தமான நிலையில் இருக்கும்போது கையாளப்படவேண்டிய முக்கிய வழிமுறை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் நம்மிடம் நிதி இல்லை என்பதற்காக ஒரு முக்கிய சாலையைப் போட முடியவில்லை என்றால், 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் கழித்து நிதி ஆதாரம் கிடைக்கும்போது அந்தச் சாலையைப் போட்டால், பொருளாதார வளர்ச்சி அத்தனை ஆண்டுகள் பின்நோக்கிச் சென்றுவிடுகிறது. மேலும் 10 ஆண்டுகள் கழித்து சாலை போடும்போது அதன் செலவு பன்மடங்கு உயர்ந்துவிடும். கடன் பெற்றாவது அந்தச் சாலைப் பணியை உடனே நிறைவேற்றிவிட்டால் 10 ஆண்டுகள் கழித்து 100 கோடி ரூபாயில் போடப்படுகின்ற அந்தச் சாலையை, 10 கோடி ரூபாய் செலவிலேயே இப்போது போட்டுவிட முடியும். அதுமட்டுமல்ல, அந்தச் சாலையை இப்போது போடுவதால் அப்பகுதியில் தொழிற்சாலைகள் பெருகி, பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, வேலைவாய்ப்பும் பெருகும். அரசின் வரி போன்ற வருவாய் வரவுகளும் கூடும். இதனால் ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சியால் அரசு பெறும் கூடுதல் வருவாயைக் கொண்டே இந்தக் கடனையும் அடைத்துவிட முடியும். இதுதான் deficit financing–ல் அடங்கியுள்ள தத்துவமும்கூட.

எனவே, நிதிப் பற்றாக்குறையை மோசமான ஒன்றாகக் கருதத் தேவையில்லை. ஆனால், அந்த நிதிப் பற்றாக்குறை என்பது



அளவோடு இருக்க வேண்டும். வருவாய்ப் பற்றாக்குறையையும், நிதிப் பற்றாக்குறையையும் சிலர் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல நிதி நிருவாகத்திற்கு வருவாய்ப் பற்றாக்குறை இருக்கக்கூடாது. நிதிப் பற்றாக்குறை அளவோடு இருக்கலாம். தேவையான அளவிற்கு மட்டும் கடன் பெற்று, அந்த நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்து கொள்ளலாம். கடனும் அளவாகப் பெறவேண்டும். அவ்வாறு திரட்டப்படும் கடன் மூலதனப் பணிகளுக்காக மட்டுமே செலவிடப்படவேண்டும். ஆரோக்கியமான பொருளாதாரத்திற்கு உகந்த இந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டுதான் சிறந்த நிதி மேலாண்மையைக் கடைப்பிடித்து மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுகிறது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதேசமயம், மாநில வளர்ச்சிக்கு அரசின் நிதிநிலை வலுப்படுத்தப்படவேண்டும். இதுகுறித்து பல்வேறு அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நான் இப்போது கூறப்போகின்ற விவரங்களை மிகுந்த கவனமுடன், உன்னிப்பாகக் கேட்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்–2010–2011 ஆம் ஆண்டில் 2,729 கோடி ரூபாயாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 2012–2013 ஆம் ஆண்டில் 2,376 கோடி ரூபாய் வருவாய் உபரி நிலையை எட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி மேலாண்மையைக் கடைப்பிடித்து, நிதி நிருவாகத்தைத் திறமையாக நடத்தி செய்துள்ள சாதனை என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை அளவு, அதாவது கடந்த தி.மு.க. ஆட்சியில் 2010–2011 ஆம் ஆண்டில், 3.21 சதவீதம் என்பது 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 2.87 சதவீதமாகக் குறைக்கப்படும்; அரசு மாநில வருவாய் வரவில் செலுத்த வேண்டிய வட்டி, 2010–2011 ஆம் ஆண்டில், 11.98 சதவீதத்திலிருந்து 2012–2013 ஆம் ஆண்டில், 10.88 சதவீதமாகக் குறையும்; மாநில அரசு 20,716 கோடி ரூபாய் வரை நிகரக் கடன் பெறலாம் என்று இருந்தால்கூட 2012–2013 ஆம்

ஆண்டில் 18,387 கோடி அளவிலேயே நிகரக் கடன் கட்டுப்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் கூட இதுபற்றிக் குறிப்பிடும்போது 20,716 கோடி ரூபாய் வரை கடன் பெறலாம் என்றுதானே உள்ளது. அதுவரை பெற வேண்டும் என்பது இல்லையே என்று குறிப்பிட்டிருந்தார். அதே சமயம், அவருடைய கட்சித் தலைவர் வருவாய் உபரி இருக்கும் நிலையில் ஏன் புதிய வரிகளை விதிக்கவேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார். 1,500 கோடி ரூபாய்க்குக் கூடுதல் நிதி திரட்டப்பட்டதால்தான் இந்த வருவாய் உபரி ஏற்பட்டுள்ளது. இந்த வருவாய் உபரி ஏற்பட்டதால்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடன் பெறுவதைக் குறைக்க முடிகிறது. வருவாய் உபரி அதிகரிக்க அதிகரிக்க, கடன் அளவையும் கட்டுப்படுத்தி, மூலதனச் செலவுகளையும் அதிகப்படுத்த இயலும்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவும் கடந்த ஆண்டுகளைவிடக் குறைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மாநிலத்தின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளேயாகும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் 1,500 கோடி ரூபாய்க்கு கூடுதல் வரி என்று இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தார்கள். இவை சாமானிய மக்களைப் பாதிக்கக்கூடிய வரிகள் அல்ல. இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தினமணி நாளிதழ், “சாதாரண மக்களுக்கு சுமை கூட்டும்படியான எந்த வரி விதிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை” என்று தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் “இந்த நிதிநிலை அறிக்கை தறிகெட்ட வரிக் குதிரையாக ஓடிக்கொண்டிருக்கிறது” என்று சொன்னார். உண்மையில் மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிதி நிலை அறிக்கைகள்தான் தறி கெட்ட குதிரைகளாக ஓடிக்கொண்டிருந்தன என்பதை அவர் மறந்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக் கோட்டை அதிபதி ராஜா தேசிங்கை நீங்கள் மட்டுமல்ல, யாருமே மறந்திருக்க முடியாது. டில்லி பாதுஷா, ஷா ஆலத்தின் அடக்க முடியாத முரட்டுக் குதிரையை அடக்கிக் காட்டிய ராஜா தேசிங்கின் பெயரைச் சொன்னாலே நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருமுகம்தான் தமிழக மக்களின் நினைவுக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ராஜா தேசிங்கு எம்.ஜி.ஆரின் ஒரே அரசியல் வாரிசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டால் தறிகெட்ட குதிரையாக ஓடிய தமிழகத்தின் நிதிநிலையைத் தடுத்து நிறுத்தி, சரிப்படுத்தி, முறைப்படுத்தி, முறையான நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே சமர்ப்பிக்க வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தறிகெட்ட குதிரைகளை மட்டும் அல்ல, அரசியல் நெறிகெட்ட குதிரைகளையும் அடக்கி ஆண்டுகொண்டிருக்கிறார் என்பதை திரு. சிவசங்கர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலை அறிக்கை பற்றி பல்வேறு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. Deccan Chronicle பத்திரிகை இந்த வரவு–செலவுத் திட்டத்தை “Chief Minister puts Tamil Nadu on progress path”, அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் செலுத்துகிறார் எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அதே பத்திரிகை “Social welfare, infrastructure gets thumbs up”, அதாவது சமூக நலம், கட்டமைப்பு, முக்கியத்துவம் பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள் பற்றியும் கருத்துகளை வெளியிட்டுள்ளது.

அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், வேலைவாய்ப்பை செயல்படுத்த உள்ள திட்டம் பற்றி “Skilled development gets budget push” என்றும், குடிசைகளுக்கு CFL பல்புகள் வழங்குவது பற்றி “Blueprint to save energy” அதாவது, மின் சக்தியைச் சேமிக்க ஒரு வரைவுத் திட்டம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

Times of India வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் "Tight finances and an eye on growth are at the heart of Tamil Nadu's budget" என்றும், "gateway to growth" அதாவது, வளர்ச்சிக்கு ஒரு நுழைவாயில் என்றும் குறிப்பிட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள பல்வேறு திட்டங்களில் L.I.G, M.I.G வீடுகளைக் கட்ட கூடுதல் F.S.I. திட்டத்தைக் குறிப்பிட்டும் செய்தி வெளியிட்டுள்ளன.

The New Indian Express நாளிதழ் தனது செய்தியில் "Infrastructure push in surplus budget" என்ற தலைப்பில் "Keeping Chief Minister's vision for development in focus; the State Government proposed new taxes to mop up Rs.1,500 crores, but spares the aam aadmi" அதாவது, சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் 1,500 கோடி ரூபாய் வருவாய் திரட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குடன் கூடிய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரும் நிதிநிலை அறிக்கை என்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதே பத்திரிகையில் FICCI தெரிவித்துள்ள கருத்தாக "Pro-active, balanced, and people-friendly budget" என்ற கருத்தையும் பதிவு செய்துள்ளது.

The Hindu நாளிதழ் "Thrust on development in welfare budget" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டதோடு "Continued impetus to Mega City plan – Record sum allocated to school education" என்ற தலைப்பில் நிதிநிலை அறிக்கையைப் பற்றி கருத்துகளைத் தெரிவித்துள்ளது.

தினத்தந்தி நாளிதழ் "பட்ஜெட்டின் ஒவ்வொரு வரியிலும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் எண்ணங்களும், திட்டங்களும், ஆலோசனைகளும், ஆக்கபூர்வமான சிந்தனைகளும் மிளிர்கின்றன" என்று தெரிவித்து, "தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் முதலிடத்திற்குக் கொண்டு செல்வதற்கான 'தொலைநோக்குத் திட்டம்–2023' என்ற ஆவணத்தை சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் பிரகடனப்படுத்தினார். அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்பதை இந்த பட்ஜெட் பகிரங்கப்படுத்துகிறது" என்று பாராட்டியுள்ளது.



பிற்பகல் 2–05

அதேபோல் தினமலர் போன்ற பல்வேறு நாளிதழ்களும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களைப் பற்றி கருத்துகளை வெளியிட்டுள்ளன. இந்த பத்திரிகைகளில் எல்லாம் நிதிநிலை அறிக்கைபற்றி எதிர்மறை விமர்சனங்கள் எதுவும் இல்லை. அதேபோல் CII, FICCI போன்ற தொழில் கூட்டமைப்பு நிறுவனங்களும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று கருத்துகள் தெரிவித்துள்ளன. இவர்களின் கருத்துகளுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே, நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களுக்கும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் போதிய நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள் என்ற கருத்தினை இங்கே பதிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனது தலையாய கடமையாக ஏற்றுக்கொண்டிருப்பது மின்சார பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே.

ஒளி விளக்காம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே, ஒளிமயமாக இருந்த தமிழகம், இதயமே இல்லாத மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருண்டு போனது. அந்த இருளை அகற்றுகின்ற சவாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தையே எதிர்கொண்டு ஜெயித்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலும் ஜெயிப்பார்! எதிலும் ஜெயிப்பார்! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மதிநுட்பமும், திறமையும், அறிவும், ஆற்றலும் மின் உற்பத்தியில் தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக, மிகை மாநிலமாக மாற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை உறுதியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துகளுக்கும் விரிவான விவரங்களைத் தந்துள்ளோம். துறைவாரியான மானியக் கோரிக்கைகளும் தொடர்ந்து இந்த அவைமுன் வைக்கப்படவுள்ளன. இதில் துறை சார்ந்த பல

அறிவிப்புகளும் இடம்பெற உள்ளதால் மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்ற அறிவிப்புகள் அவற்றில் இடம்பெற வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு, தமிழக மக்களின் மேம்பாட்டிற்கு, ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தன்னிகரற்ற இந்த அரசு அரும்பாடுபட்டு வருகின்றது. நான் பல முறை எடுத்துக் கூறியபடி மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும், தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளை, குறிப்பாக, கட்டமைப்புகளை மேம்படுத்தி வளர்ச்சியைத் தூண்டக்கூடிய பணிகளுக்கு முன்னுரிமை அளித்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படும்.

இந்தச் சட்டமன்றத்தில் அன்று சவால்விட்ட எதிர்க்கட்சிகளைப் பார்த்து “உங்களுக்குத் திராணி இருந்தால் சங்கரன்கோவிலில் சந்தியுங்கள்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ‘நம் நாடு’ படத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் “பொய்யும் புரட்டும் துணையாய்க் கொண்டு பிழைத்தவரெல்லாம் போனாங்க” என்று பாடுவார்கள். அதுபோலவே பொய்யும், புரட்டும் துணையாய் கொண்டு போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் டெப்பாசிட் கூட வாங்க முடியாமல் தோல்வியைத் தழுவினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் சவால் விட்டவர்களைப் பார்த்து இன்று சந்தியும் சிரித்துக் கொண்டிருக்கிறது, சங்கரன்கோவிலும் சிரித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை புழுதி வாரித் தூற்றியவர்களை எல்லாம் அந்தப் புழுதியே புயலாக மாறி தூக்கி வீசி எறிந்து வரலாறு படைத்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் மக்கள் அளித்த முடிவு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு செல்கின்ற பாதை சரியான பாதைதான் என்று உறுதிப்படுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என ஏற்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில், அந்தப் பாதையில் தொடர்ந்து செல்வோம் என உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “இமயத்தைத் தொட்டவர்கள் எல்லாம் ஜெயித்தவர்கள் அல்ல; மக்களின் இதயத்தைத் தொட்டவர்கள்தான் ஜெயித்தவர்கள்” என்று ஒரு அறிஞன் சொன்னான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணுறக்கம் இல்லாமல் கடமையாற்றி தமிழக மக்களின் இதயங்களைத் தொட்டிருக்கின்றார். அதனால் இந்த நிதிநிலை அறிக்கை தமிழர்களின் தலை எழுத்தை மாற்றும், தமிழ்நாட்டின் தலைவிதியையும் மாற்றும்!

*பிற்பகல் 2–10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே எங்கள் கண் கண்ட தெய்வம்! எங்களுக்கென்று தனி சொந்தம் இல்லை! மாண்புமிகு அம்மா அவர்களின் சொந்தமே எங்கள் சொந்தம்! எங்களுக்கென்று தனி நட்பு இல்லை! மாண்புமிகு அம்மா அவர்களின் நட்பே எங்கள் நட்பு! எங்களுக்கென்று தனி சிந்தனை இல்லை! மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையே எங்கள் செயல்! எங்களுக்கென்று தனி வழி இல்லை, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியே எங்கள் வழி. தமிழர்தம் மேம்பாடே குறிக்கோளாய், தமிழகத்தின் முன்னேற்றமே இலட்சியமாய் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்தோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எங்கள் உடல், பொருள் ஆவி அனைத்தும் தத்தம் செய்தோம் என்று வாழ்ந்துவரும் ஒன்றரை கோடித் தொண்டர்களில் ஒரு எளிய தொண்டனான என்னை, பெற்ற தாயினும் மேலாக பேரன்பு காட்டி, தமிழகத்தின் நிதி அமைச்சராக்கி, பாரம்பரியம் மிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் இரண்டாம் முறையாக நிதிநிலை அறிக்கையை அளித்திடும் வாய்ப்பினை அருளி, அதன் தொடர்ச்சியாக அந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு இன்று பதிலுரையை வழங்குகின்ற அரிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களில் எனது நன்றி மலரைக் காணிக்கையாக்கி, எனது பதிலுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 9–4–2012 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*21. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*19. பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2011–2012)*

*20. பொதுக் கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2011–2012)*

*21. பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2011–2012)*

*22. பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2011–2012)*

*23. பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது அறிக்கை. (2011–2012)*